
சிப்பியில்
வந்த முத்து
விஜி பிரபு

# சிப்பியில் வந்த முத்து

## 1



"நமோ நமோ நாராயணா

ஓம் நமோ நாராயணா..."

இருட்டைக் கிழித்துக் கொண்டு பறந்து கொண்டிருந்த ரயிலில் இருந்த பயணி ஒருவரின் செல்போனில் ஒலித்த பாடலைக் கேட்ட மிருணாளினி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அதே பாடலைக் கேட்டுக் கண் விழித்து எதிரே இருந்த பேத்தியைப் பார்த்த காளீஸ்வரியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. தன் மடியில்

படுத்திருந்த இளைய பேத்தி சுபாஷினியின் கன்னத்தில் கண்ணீர் பட்டுத் தெறிக்க வேகமாகத் தன் கண்களைத் தனது முந்தானையால் துடைத்து விட்டு நிமிர்ந்து எதிரே அமர்ந்திருந்த மிருணாளினியைப் பார்த்தாள்.

சுற்றுப்புறம் மறந்து இருட்டை வெறித்துக் கொண்டு இருந்த மிருணாளினியின் பார்வை இருட்டுக்குள் எதையோ தேடுவதைப் போல துழாவிக் கொண்டிருந்தது. சூன்யத்தை வெறித்த அவளது பார்வையில் தெரிந்த நிராசையும் எதிர்காலம். குறித்த பயமும் அவளது பாட்டியின் மனதைத் துன்பத்தில் துவள வைத்தது.

''அம்மா... கண்ணு...'' பாட்டியின் அன்பான குரலைக் கேட்டு மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தாள் மிருணாளினி.

''ஏன்டா கண்ணு.. ராத்திரி பூராவும் தூங்காம இப்படியே உட்கார்ந்திருந்தியா ராசாத்தி?'' துக்கத்தில் காளீஸ்வரியின் தொண்டையில் இருந்து வார்த்தை வராமல் தவித்தாள் அவள்.

''தூக்கமா... அப்படின்னா என்ன பாட்டி? இனி என் வாழ்வில் தூக்கம் என்பதே வராதது போல் தோன்றுகிறதே...'' மெல்லிய குரலில் தொனித்த தாங்க முடியாத துயரம் காளீஸ்வரியின் நெஞ்சில் அறைந்தது.

''அடிக்கண்ணே... நானிருக்கையில் நீ எதுக்காக இவ்வளவு துயரப்படுற? நான் உன்னை இமையா இருந்து காப்பாத்த மாட்டேனா?'' பதறினாள் காளீஸ்வரி.

''எல்லாச் சொந்தமுமே மாயமாத் தெரியுதே பாட்டி. நான் என்ன செய்வேன்? நான் எத்தனையோ



நம்பிக்கையோட வாழ்ந்த எங்களோட வாழ்க்கையே கானல் நீராப் போச்சே. என்னையும் சுபாவையும் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எங்களை அநாதையா விட்டு விட்டுப் போக எப்படித் தைரியம் வந்தது? நாங்க அப்படியென்ன தவறைப் பண்ணிட்டோம்? எதற்காக எங்களை இப்படி நிர்க்கதியா விட்டுட்டுப் போனாங்க...'' வார்த்தைகளில் வழிந்த விரக்தியுடன் பாட்டியைப் பார்க்க சோகச் சித்திரமாய்ப் புன்னகைத்த மிருணாளினி மறுபடியும் திரும்பி இருட்டை வெறிக்க ஆரம்பித்தாள்.

ஆயிரமாயிரம் கேள்விகளை தனக்குள் கேட்டுக் கொண்டிருந்த பேத்தியைத் தேற்றும் வகை அறியாமல் தன் வாயை முந்தானையால் மூடிக் கொண்டு விம்மத் துவங்கினாள். காளீஸ்வரி பாட்டியின் உடல் குலுங்கலால் தூக்கம் கலைந்து எழுந்த சுபாஷினி காளீஸ்வரியைப் பார்த்து மலங்க மலங்க விழிப்பதைப் பார்த்த பாட்டியின் அழுகை அதிகமானது.

''அக்கா...'' உதடுகள் அழுகையில் விரிய தன் கைகளைக் குழந்தையாய் தன்னை நோக்கி நீட்டிய சுபாஷினியை வேகமாக எழுந்து வந்து அவள் அருகில் அமர்ந்து அணைத்துக் கொண்டாள் மிருணாளினி.

பதினாறு வயதுச் சிருமியாய் வளர்ந்து மனதளவில் பக்குவத்தை எட்டாத பருவ மங்கையாய் யாரும் இல்லாத அநாதை போன்ற தோற்றத்துடன் தன்னை அணைத்துக் கொண்ட தங்கைக்கு அந்த நொடியே தான் ஒரு அன்னையாக மாறினாள் மிருணாளினி. அவசரமாகத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு

சுபாஷினியை அணைத்துக் கொண்ட மிருணாளினி பார்வையால் காளீஸ்வரியைக் கண்டித்தாள். பேத்தியின் பார்வை உணர்த்திய செய்தியை அறிந்த காளீஸ்வரியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்னடா சுபா.. ஏன் தூக்கத்தில் இருந்து இவ்வளவு சீக்கிரமாய் முழிச்சுட்ட? எப்பவும் எட்டு மணிக்குக் குறைஞ்சு எந்திரிக்க மாட்டியே?" தங்கையின் தோள்களைத் தடவிக் கொண்டே விளையாட்டுப் போல கேட்டாள் மிருணாளினி.

"அது நம்ம வீட்டுலக்கா. இனிமேல்தான் நமக்குன்னு வீடே இல்லையேக்கா. அப்புறம் எப்படி நிம்மதியாத் தூங்க முடியும்?" தங்கையின் கண்களில் வழிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்தாள் அவள்.

"ம்ப்ச்... சுபா. இப்படியெல்லாம் நம்பிக்கை இல்லாம பேசக்கூடாதுன்னு உனக்குச் சொல்லி இருக்கேன்ல. என்னோட பேச்சுக்கு இவ்வளவுதான் மரியாதையா?" கண்டிப்புடன் கேட்ட மிருணாளினியுடன் இடையைக் கட்டிக் கொண்டாள் சுபாஷினி.

"அக்கா..."

"அழாதே சுபா. நீ அழுதா என்னால தாங்கிக்க முடியாதுன்னு உனக்குத் தெரியும் இல்ல. அப்புறமும் இப்படி அழுதா நான் என்ன செய்வேன்?" அக்காவின் வேதனைக் குரல் நெஞ்சத்தைத் தொட தலை குனிந்தாள் சுபாஷினி.

"இனிமேல் நீ யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் நினைக்கக் கூடாது சுபா. நம்மைப் பத்தி கவலைப் படாதவங்களை நாம் எதற்காக நினைச்சுக் கண்ணீர் விடணும். இனிமேல் நமக்கு நாம்தான் சொந்தம், உறவு, உலகம் எல்லாமே. சரியா? அக்கா இருக்கேன்டா உனக்கு. நான் இனிவரும் காலத்தில் உனக்கு எல்லாமா இருப்பேன். பெத்தவங்க செய்யாமல் விட்ட கடமைகளை எல்லாம் இனி உனக்கு நான் செய்வேன். உனக்கு இனிமேல் எல்லாமே நான் மட்டும் தான் சுபா. அதே போல எனக்கும் இனிமேல் நீதான் எல்லாமே. நாம நமக்கான ஒரு உலகத்தை உண்டாக்கிக் கிட்டு அதுல சந்தோசமா வாழ்ந்து காட்டுவோம் சுபா. இனிமேல் இப்படிக் கோழை மாதிரி என் சுபாக்குட்டி அழுதுக்கிட்டு இருந்தா எனக்குக் கெட்ட கோபம் வந்துரும். சரியா..." கூறிக் கொண்டே தங்கையின் தலையைக் கோதிச் சரியாக்கிவிட்டு அவளது உடைகளின் சுருக்கங்களை தனது கைகளால் நீவி சரியாக்கிவிட்டு நிமிர்ந்து தங்களைக் கடந்து சென்ற காபி விற்கும் ஆளை நிறுத்தி காபிக்கோப்பையை தங்கையின் கையில் வைத்தாள் மிருணாளினி.

தானும் ஒரு கோப்பையை வாங்கி உறிஞ்சிக் கொண்டே பேத்தியைக் கண்களால் அளந்தாள் காளீஸ்வரி.

வடநாட்டு மண்ணிற்கே உரித்தான கோதுமை நிற உடலுடன், குண்டு முகமும் அதில் எடுப்பாகத் தெரிந்த அகன்ற கண்கள் காதுவரை நீளமோ என்று சந்தேகிக்கும் வகையில் மையிடாமலே கருமையாகப் பளபளக்க, அளவான நாசியும், அழகான இதழ்கள் முல்லைப் பற்களை மூடியிருக்க, இடைதாண்டி நீண்ட அடர்ந்த

பின்னல் கருநாகம் போல் நீண்டிருக்க என இத்தனை அழகுக் கொண்டவளாய் ஆனால் அத்தனை அழகினை யும் அறியாத தன்மை ஒரு தனி அழகாய் மின்ன அமர்ந்திருந்த மிருணாளினியைப் பார்க்கப் பார்க்க துக்கமும் பெருமையும் மாறி மாறித் தோன்றியது காளீஸ்வரியின் மனதில்.

# 2



காற்றில் பறந்த முடியைக் கைகளால் ஒதுக்கி விட்டுக் கொண்டே தங்கையை அணைத்தபடி அமர்ந்திருந்த மிருணாளினியைப் பார்க்கையில் தனது மகளே தனக்கெதிரில் அமர்ந்திருப்பதைப் போல இருந்தது காளீஸ்வரிக்கு.

மிருணாளினியின் அன்னை ஷோபனாவும் அவளைப் போன்றே பேரழகி என்றே சொல்லலாம். அவளது அழகினைப் பார்த்து மயங்கியே மிகப் பெரும் கோடீஸ் வரர் ருத்ரன் அவளைக் கரம் பிடித்தார் என்றே சொல்ல லாம். இல்லையென்றால் எத்தனையோ கோடீஸ்வரர் களின் வீட்டுப் பெண்கள் அவரை மணக்கத் தவம் இருக்கையில் ஒரு சாதாரண விவசாயி வீட்டுப் பெண்ணான ஷோபனாவை அவர் திருமணம் செய்து கொண்டு இருக்கத் தேவையில்லை.

அன்று அந்தத் திருமணத்தைப் பெரிய கொடுப்பினை யாகவும் பெருமையாகவும் எண்ணிய காளீஸ்வரி



இன்று அந்தத் திருமணம் நடந்திருக்காமல் இருந்தால் தான் இத்தனை துன்பங்களையும் பார்க்கத் தேவையில் லையே என்று ஏங்கினாள்.

ஷோபனாவைத் திருமணம் செய்து கொண்ட நாள் முதல் அவளைத் தன் இதயத்தில் வைத்துப் பூஜித்தார் ருத்ரன். பிஸினஸ் விஷயமா இருந்தாலும் சரி, உல்லாச பயணமாக இருந்தாலும் சரி மனைவியையும் உடன் அழைத்துக் கொண்டுதான் செல்வார் ருத்ரன். தன் மனைவியின் அழகைப் பார்த்த மற்ற செல்வந்தர்களின் கண்களில் தோன்றும் பொறாமை உணர்ச்சி ருத்ரனின் மனதில் கர்வத்தைத் தோற்றுவிக்கும். அன்று இரவில் தன் மனைவியை அதிகமான ஆர்வத்துடன் நாடுவார் ருத்ரன். அவரது மனைவியோ அவரது இந்தக் குணத்தை அறிந்து வைத்திருப்பவளாகத் தன் கணவருடன் கண்ணைக் கவரும் அலங்காரத்துடன் செல்வதை ஒரு வித கடமையாகவும் பெருமையாகவும் செய்து வந்தாள். இதற்காகவே குழந்தைப் பேறைக் கூடத் தள்ளிப் போட்டனர் தம்பதி இருவரும்.

ஆனால் ருத்ரனின் மேல் பொறாமை கொண்ட நண்பர்கள் இந்தக் குழந்தைப் போன்ற வைத்தே அவரைக் கேலியாகவும் ஏளனமாகவும் பேசுவதைக் கேட்ட பின்பே குழந்தையைப் பெற்றெடுக்க சம்மதித்தாள் ஷோபனா. முதல் குழந்தை உண்டான போது எல்லாப் பெண்களுக்கும் உண்டாகும் தாய்மை உணர்வைக் கூடத் தள்ளி வைத்து விட்டுக் கணவருடன் ஊர் சுற்ற முடியாமல் போனதற்காகவே மனதிற்குள் குமைந்து கொண்டிருப்பாள் ஷோபனா. ருத்ரனும் கூட

மனைவியைப் பிரிந்து எங்கும் செல்ல விருப்பம் இல்லாமல் அவளுடனேயே வீட்டிலேயே இருந்து விடுவார். குழந்தையைப் பிரசவித்தவுடன் தன் கடமை முடிந்து விட்ட மன நிம்மதியுடன் மிருணாளினியை ஆயாவின் பொறுப்பில் விட்டுவிட்டு ஒரு மாதத்திற் குள்ளாகவே கணவருடன் பிளைட் ஏறிவிட்டாள் ஷோபனா.

மகளின் குணமறிந்த காளீஸ்வரி எவ்வளவு கண்டித்தும், எடுத்துச் சொல்லியும், கோபப்பட்டும் அவரால் ஷோபனாவின் குணத்தை மாற்றவே முடியவில்லை. மிருணாளினியைப் பெற்றவுடன் அவள் ஒருத்தியே போதும் என்ற முடிவிற்கு வந்துவிட்ட ஷோபனா அடுத்த குழந்தையைப் பற்றி எண்ணிக்கூடப் பார்க்க விரும்பவில்லை. ஆனால் மிருணாளினி பிறந்து நீண்ட வருடங்களுக்குப் பிறகு உண்டான சுபாஷினியை கலைக்க விரும்பியும் கருவைக் கலைக்கும் நாள் கடந்து விட்டதால் வேறு வழியின்றி அவளைப் பெற்றெடுக்கும் நிலைக்கு ஷோபனா ஆளானாள். சுபாஷினி பிறக்கும் போது ஓரளவிற்குப் பெரியவளான மிருணாளினி அன்னையின் குணம் அறிந்து அந்த ஏக்கமே வராத அளவிற்கு சுபாஷினிக்கு அன்னையாக இருந்து அரவணைத்துக் கொண்டாள். ஷோபனாவிற்கு இதுவே பெரிய சுதந்திரத்தைக் கொடுத்துவிட அவள் எப் பொழுதும்போல் தன் கணவருடன் உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

அதற்காகத் தாங்கள் பெற்றெடுத்த பெண்கள் மேல் இருவருக்கும் பாசம் இல்லை என்றில்லை. உலகத்தின் அத்தனை மூலைகளில் இருந்தும் தங்கள் பெண்களின் தேவைக்கான பொருட்களை இருவரும் வாங்கி வந்து பங்களா முழுவதும் குவித்து வைத்தார்கள். பட்டும், வெள்ளியும், தங்கமுமாகத் தங்களது பெண்களைச் செல்வத்தில் குளிக்க வைத்தார்கள். வேளைக்கோர் உடையும், அதற்கு மேட்சாகக் காருமாக டாம்பீகமான ஒரு வாழ்க்கை முறையை அவர்களுக்காக உண்டாக்கிக் கொடுத்து இருந்தார்கள். ஆனால் இவை அனைத்தையும் விட உயர்ந்தது தங்களின் அன்பும், அரவணைப்பும் தான் என்பதை மட்டும் ஷோபனாவும், ருத்ரனும் மறந்து விட்டார்கள். ஷோபனாவிற்கு ருத்ரன் தான் உலகம். ருத்ரனுக்கோ ஷோபனாதான் மற்ற அனைத்தையும் விட எல்லாமும்.



அவர்களின் இந்த ஆழ்ந்த அன்பினால் குழந்தைகளுக்கான அன்பும், அரவணைப்பும் இருவருக்குமே இரண்டாம் பட்சமாக ஆகிவிட்டது. இந்நிலையில் மிருணாளினிக்கும், சுபாஷினிக்கும் அனைத்துமாக இருந்து அரவணைத்து வளர்த்தது அவர்களின் அன்னையைப் பெற்றெடுத்த பாட்டி காளீஸ்வரிதான். முதல் குழந்தையின் பிரசவத்திற்காக தன் மனைவியை அவளது அன்னையின் இல்லத்திற்கு அனுப்ப விருப்ப மில்லாமல் காளீஸ்வரியை மும்பைக்கு வரவழைத்தார் ருத்ரன். மருமகனின் குணமறிந்த காளீஸ்வரியும் தன் மகன் சதாசிவத்தின் துணையோடு மும்பைக்கு வந்து மகளுடன் இருந்து அவளைக் கவனித்துக் கொண்டாள்.

வந்த இரண்டே வாரத்தில் மகளின் குணத்தை ஓரளவிற்கு அறிந்துகொண்ட காளீஸ்வரி வரப்போகும்

வாரிசை எண்ணி அப்பொழுதே கவலையுடன்தான் காத்திருந்தாள். ஒருவேளை குழந்தையின் முகம் பார்த்தால் ஷோபனா தன்னுடைய குணத்தையும் முடிவையும் மாற்றிக் கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

மிருணாளினியைப் பெற்றெடுத்து அவள் முகம் பார்த்தவுடன் ஷோபனாவிற்கும் ருத்ரனுக்கும் இந்த உலகத்தையே வென்றுவிட்ட களிப்பும், மகிழ்ச்சியும் தோன்றியது உண்மைதான். ஆனால் மனைவி பிரசவித்த அடுத்த பதினைந்தாவது நாளே பிளைட் டிக்கெட்டுடன் வந்து நின்றார் ருத்ரன்.

''ஷோபனா. உன்னோட திங்ஸை எல்லாம் பேக் பண்ணி வை. நாம சிங்கப்பூர் கிளம்பணும்'' கணவனின் வார்த்தைகளைக் கேட்டவுடன் புள்ளி மானாகத் துள்ளி எழுந்து கிளம்பிய மகளை எரிச்சலுடன் பார்த்தாள் காளீஸ்வரி.

அவளைவிட வியப்புடன் சகோதரியைப் பார்த்து விட்டு அன்னையின் முகம் பார்த்தார் ஷோபனாவின் சகோதரரான சதாசிவம்.

''ஷோபனா. என்ன இது காலக் கொடுமையா இருக்கு? முப்பது நாள் முடியாம வீட்டு வாசப் படியைத் தாண்டக் கூடாதும்மா. காத்து கருப்பு அடிச்சுரும். நீயானா நாட்டை விட்டு நாடு போகத் தயாராகிட்ட?'' கண்டிப்புடன் கேட்ட அன்னையைப் பார்த்து கேலியாகச் சிரித்தாள் ஷோபனா.


''என்னம்மா இது? இன்னும் பத்தாம் பசலித்தனமா பேசிக்கிட்டு இருக்கீங்க? உலகம் எவ்வளவோ



முன்னோக்கிக்கிட்டுப் போகுது. நீங்க என்னடான்னா...?''

''உலகம் எப்படி வேணா போகட்டும்டி மகளே எனக்கு என்னோட வீடுதான் உலகம். அது உருப்படியா இருந்தாப் போதும். நீ எங்க வேணும்னாலும் போய்க்க. ஆனா ஒரு முப்பது நாளாவது என் பேத்தி வயிறு நிறையத் தாய்ப்பாலைக் குடுத்துட்டு அதுக்கு அப்புறம் நீ எந்த ஊருக்கு வேணும்னாலும் போ'' கண்டிப்புடன் கூறிய மாமியாரை மறுத்துப்பேச முடியாமல் ஏமாற்றத்துடன் கிளம்பிய கணவரைப் பார்த்து கண்ணீர் வடித்தாள் ஷோபனா.

# 3



அன்னை சொன்ன ஒரு மாதத்தை நாட்களை விரல் விட்டு எண்ணிக் கொண்டே கழித்த ஷோபனா அதற்கு அடுத்த நாளே கணவனுடன் கிளம்பி விட்டாள். ஒரு மாதப் பச்சிளம் குழந்தையை வளர்ப்புத் தாயிடம் தூக்கிக் கொடுத்து அவளை வளர்க்கும் விதம் பற்றி பாடம் எடுத்த மகளைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள் காளீஸ்வரி. அவள் உயிரே போனது போன்ற பதட்டத்துடன் மகளின் கரங்களில் இருந்த பேத்தியை வாங்கி மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

''அம்மா. இவளை உங்களால நீட்டா, இப்ப இருக்கற மாடர்ன் வொர்டுக்கு ஏற்றாற் போல வளர்க்க

முடியாதும்மா. பேசாம ஆயாக்கிட்ட குழந்தையைக் குடுங்கம்மா'' கூறிய மகளை முறைத்தாள் அன்னை.

''நான் மாடர்னா வளர்த்ததாலதான் நீ இப்படித்தான் தோன்றித்தனமா ஊர் சுற்றிக்கிட்டுத் திரியற. என்னோட பேத்தியும் உன்னை மாதிரி வளர வேண்டாம். இவளை நான் நம்ம ஊர் வழக்கப்படியே வளர்த்துக்கிறேன். நீ உன் வேலையைப் பார்க்கலாம்'' தீர்மானமாகக் கூறிய அன்னையை மறுத்துப் பேச இயலாமல் வாயடைத்து நின்ற மனைவியை கண்களால் தேற்றினார் ருத்ரன்.

''ஷோபனா. நாம ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுத்தாலும் நம்ம ஆளுங்க யாராவது கண்காணிப்பா இருந்தால் தான் ஆயாவும் குழந்தையை நல்லா வளர்ப்பா. இல்லாட்டி நம்ம குழந்தையை அவ எப்படி வளர்க்கிறான்னு நமக்குத் தெரியாதில்லையா? அதனால அத்தையிடம் பொறுப்பை விட்டுவிட்டு நீ ப்ரீ மைண்டா என்னைக் கவனிக்கிற வேலையை மட்டும் பாரு டார்லிங்'' தனிமையில் மனைவியை அணைத்துக் கொண்டே சொன்ன ருத்ரனின் வார்த்தைகளின் நியாயம் புரிந்து அமைதியாகக் கணவனைக் கவனிக்க ஆரம்பித்தாள் ஷோபனா.

அன்றில் இருந்தே பேத்தியைத் தன்னுடைய அரவணைப்பிற்குக் கொண்டு வந்து விட்ட காளீஸ்வரி தன் மகன் சதாசிவத்தைத் தங்களின் ஊரான பழனிக்கு அருகேயிருந்த பாளையத்திற்கு அனுப்பி விட்டு மகளது ஊரான மும்பையிலேயே தங்கி விட்டாள். அன்னை அருகில் இல்லாத குறையே தெரியாமல் பாட்டியின் அரவணைப்பால் வளர்ந்து ஆளாகினாள் மிருணாளினி.



ஷோபனா இளைய மகளைப் பெற்றெடுத்த மறுகணமே சுபாஷினிக்கு இரண்டு அன்னையராக பாட்டியும் பேத்தியும் பொறுப்பெடுத்துக் கொள்ள ஷோபனா என்றும் போல் கவலையற்று இருந்து விட்டாள்.

சுபாஷினி, வளர்ந்தது, தவழ்ந்தது, நின்றது நடந்தது எல்லாமே அக்கா மிருணாளினியின் மடியிலும், கைகளிலும் தான். எனவே சுபாஷினிக்கு அன்னையென்றால நினைவிற்கு வருவது மிருணாளினிதானே தவிர ஷோபனா கிடையாது. அவ்வளைப் பொறுத்தவரை தன்னை வளர்த்த வளர்ப்புத் தாயான ஆயாவைப் போல, தன்னைப் பெற்றெடுத்த பெற்ற தாய் ஷோபனா. அவ்வளவுதான்.

வாழ்க்கைச் சக்கரம் இவ்வாறே சுழன்றிருந்தால்கூட போதுமானதாக இருந்திருக்கும் அவர்களுக்கு. ஆனால் விதி தன் கூர்மையான பார்வையை ருத்ரனின் மேல் பதித்துவிட, ஒரு நாள் இரவு நெஞ்சு வலி என்று படுத்த ருத்ரன் விடியற் காலையில் ரத்த வாந்தி எடுக்க பதறிக்கொண்டு ஹாஸ்பிடலுக்குக் கொண்டு சென்றாள் ஷோபனா. ஹாஸ்பிடலில் சேர்த்த ருத்ரனின் நிலையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமல் போன போதுதான் தங்களின் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையே ஏற்பட்டது ஷோபனாவிற்கு. ருத்ரன் ஒரு வாரமாக அலுவலகம் வராததைக் காரணமாகக் கொண்டு வீட்டிற்கு வந்த அவர்களின் அலுவலக மேனேஜர் கூறிய பின்புதான் தன் கணவரின் தொழில்களில் ஏற்பட்டிருந்த இழப்பையே ஷோபனா அறிந்து கொண்டாள்.

தன்னுடைய தொழில்களில் மிகப் பெரிய இழப்பினையும், நஷ்டத்தையும் அடைந்திருந்த ருத்ரன் அதை

தன் மனைவி மக்கள் உணராமல் இருப்பதற்காக பல இடங்களில் கடன் வாங்கி இருப்பதையும், அதற்கான வட்டித் தொகையே லட்சக் கணக்கில் இருப்பதையும் தெரிந்த ஷோபனா நிலைகுலைந்து இடிந்து போனாள். அவளது உலகமே இருண்டு விட்டதைப் போல தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தவள் அமர்ந்தவள்தான். தன்னுடைய ருத்ரன் இனி நோயின் பிடியில் இருந்து மீண்டு வந்தாலும் இந்த நஷ்டத்தில் இருந்து மீள முடியாது என்பதை அவள் தெளிவாக உணர்ந்து கொண்டவள் ஒரு முடிவிற்கு வந்தவளாக கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

அன்னையிடம் குழந்தைகளை விட்டு விட்டு அவர்களின் முகங்களைக்கூடப் பாராமல் வெளியேறியவள் நேராக மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஒரு மருந்துக் கடையின் அருகில் காரை நிறுத்தி அவளுக்குத் தேவையான மருந்தினை வாங்கி கைப்பைககுள் வைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தாள். கணவரின் அறைக்குள் நுழைந்து கணவரின் அருகே அமர்ந்து அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தவள் அவரது சுவாசத்திற்காகப் பொருத்தப்பட்ட செயற்கைச் சுவாச குழலை அகற்றி விட்டு அவரது மூச்சு சிறிது சிறிதாக அடங்கும் வரை கண்ணீருடன் பார்த்திருந்தவன் தன்னுடைய கைப்பைக்குள் இருந்த மருந்தினை எடுத்து வாயில் ஊற்றிக் குடித்து விட்டு தானும் கணவரின் பாதத்தில் தலை வைத்துப் படுத்தவள் அந்த நிலையிலேயே கணவனுடன் சேர்ந்து உயிரை விட்டு விட்டாள்.



ஷோபனாவைப் பொறுத்தவரையில் அவளுடைய கணவர்தான் அவளுக்குத் தெய்வம். இன்றிருக்கும் நிலையில் அவர் நோயில் இருந்து மீண்டு வந்தாலும் மேலும் மேலும் கடனுக்காக ருத்ரன் அடுத்தவரின் கால்களில் விழவேண்டும் அப்படி இல்லை என்றால் இப்போதிருக்கும் சொத்துக்களான வீடு, தோட்டம், பேக்டரி, அலுவலகம் என அனைத்தையும் விற்றுவிட்டு எதுவுமே இல்லாதவராக நடுத் தெருவில் நின்றுவிடும் நிலைக்கு அவர் வந்து விடுவார். இவை இரண்டுமே ருத்ரன் உயிரோடு இருந்தாலும் இறந்ததற்குச் சமமாகும். அவரை அப்படியொரு நிலையில் பார்க்க அவரது காதல் மனைவியான ஷோபனாவால் முடியாது. எனவேதான் அவள் தன் கணவரின் முடிவை முதலில் உண்டாக்கி விட்டு அதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்பே தன்னுடைய உயிரையும் மாய்த்துக் கொண்டாள். ஒருவேளை அவர் உயிர் பிழைத்து தான் இறந்து விட்டால் அதுவே அவளுக்குப் பெரிய தண்டனையாக ஆகி விடக் கூடும் என்பதைத் தெரிந்தே அந்த முடிவினை எடுத்தாள் ஷோபனா. ஆனால் இதில் எந்தவொரு நிலையிலும், நேரத்திலும் தன் வயது வந்த இரண்டு பெண்களின் நினைவு அவளுக்கு வராதது ஆச்சரியமான ஒன்றுதான். ஒருவேளை அவளது தாய்மை உணர்வைக் கணவரின் மேல் அவள் வைத்திருந்த அளவற்ற காதல் ஜெயித்து விட்டதோ என்னவோ, தன்னுடைய இரண்டு பெண்களையும் அனாதையாக விட்டுவிட்டுப் போய் விட்டனர் ஷோபனாவும் ருத்ரனும். சாவிலும் கணவனைப் பிரியாத மகளை எண்ணிப் பெருமைப்படுவதா அல்லது இவ்வளவு சின்னஞ்சிறிய மகள்களைப்

பற்றிக்கூட எண்ணாமல் தன் சுயநலத்திற்காக முடிவினைத் தேடிக்கொண்ட மகனை எண்ணி நொந்து கொள்வதா என்று அறியாமல் திகைத்து நின்றாள் காளீஸ்வரி.

# 4



பங்களாவின் நடு ஹாலில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு இருந்த பெற்றவர்களின் முகத்தைப் பார்க்கக்கூட விருப்பம் இன்றி தன் மடியில் சரிந்திருந்த தன் தங்கையை அணைத்தவாறு சுவரில் சாய்ந்து அமர்ந்து பெற்றவர்களின் முகத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்த மிருணாளியின் விழிகளில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் வராததை வேதனையுடன் பார்த்துக் கொண்டே கதறினாள் காளீஸ்வரி.

''அம்மா... ராசாத்தி.. துக்கத்தை மனசுக்குள் வைத்துப் பூட்டிக் கொள்ளாதம்மா. கண்ணீர் விட்டு அழுதுவிடு..'' பேத்தியின் தோள்களைப் பற்றிக் குலுக்கினாள் காளீஸ்வரி. ஆனால் மிருணாளினியின் நிலைத்த பார்வை மாற வில்லை.

ருத்ரனின் நெருங்கிய நண்பர்கள் சிலர் அவரது இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகளைப் பார்க்கத் தொடங் கியதை அறிந்த மிருணாளினி தங்கையைப் பாட்டியின் மடியில் படுக்க வைத்துவிட்டு வேகமாக வீட்டிற்குள்



சென்றாள். திரும்பியவளின் கைகளில் இருந்த பணக் கட்டுகளைப் பார்த்தவுடன்தான் அந்த நண்பர்களின் கண்களிலும் ஒரு நிம்மதி பரவியதை வேதனையுடன் பார்த்தாள் மிருணாளினி.

இதே நண்பர்கள் அனைவருக்கும் கணக்கே பார்க் காமல் எவ்வளவோ உதவிகளை பணமாகவும் நகைகளா கவும் ருத்ரன் செய்திருப்பதைக் கண்களால் கண்டவள் மிருணாளினி. அவள் நீட்டிய பணத்தினை வாயெல் லாம் பல்லாக அந்தச் சூழ்நிலையிலும் இளித்துக் கொண்டு வாங்கிக் கொண்டவர்களை வெறுப்புடன் பார்த்தாள் மிருணாளினி.

''அங்க்கிள். எங்க அப்பாவும் அம்மாவும் எவ்வளவோ பெரும் புகழுமா வாழ்ந்தாங்க. அவங்களோட இறுதிச் சடங்கும் ரொம்பச் சிறப்பா இருக்கணும். ஒரு குறையும் இல்லாமல் பண்ணிவிட்டு பணம் பத்தலைன்னா இன்னும் வாங்கிக்குங்க'' அவள் கூறிய வார்த்தைகள் மந்திரம் போல் வேலை செய்தது.

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் அந்த இறுதிச் சடங்குகளை நிறைவேற்றியவர்கள் பணம் பற்ற வில்லை என்று கூறி மிருணாளினியிடம் மேற்கொண்டு வாங்கிக் கொண்டே சென்றார்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அனைத்தையும் ஒரு ஆணிற்குரிய நிமிர்வுடன் முன்னின்று நடத்தி முடித்த மிருணாளினி தன் துக்கத்தை உணரக்கூட நேரம் கொடுக்காமல் அவள் முன் கடன் பத்திரங்களைக் கொண்டு வந்து நீட்டிய மனிதர்களின் முகங்களைப் பார்க்கவே அருவெறுப்பாக இருந்தது அவளுக்கு.

தன் முன் நின்ற மனிதர்களின் முகங்களை தன் விழியுயர்த்தி தீர்க்கமாகப் பார்த்தாள் மிருணாளினி. அவள் முன் நின்ற அனைவருமே ருத்ரனின் நெருங்கிய நண்பர்கள் லிஸ்ட்டில் இருந்தவர்கள்தான்.

''ஏன் அங்க்கிள்? எங்க டாடியையும் மம்மியையும் எரித்த சாம்பலைக்கூட இன்னும் கடலில் கரைக்க வில்லை. அதுவரைகூட உங்களால் பொறுத்துக் கொள்ள முடியாதா?'' குமுறும் எரிமலையாய்க் கேட்டவளை அலட்சியமாகப் பார்த்தார்கள் அனைவரும்.

''நீ என்னம்மா சென்டிமென்ட்டெல்லாம் பேசிக்கிட்டு இருக்க. உங்க அப்பாவும் அம்மாவும் செஞ்சுக்கிட் டதைப் போல நீயும் உன் தங்கையும் செஞ்சுக்கிட்டால் நாங்க என்னதான் செய்யுறது?'' கேட்ட மனிதரைப் பார்வையால் எரித்தாள் மிருணாளினி.

''அங்க்கிள்...!''

''அவன் சொல்றதும் உண்மைதானம்மா? அதுவும் கூட இல்லாமல் உங்கப்பனுக்கு நீங்க ரெண்டு பேருமே பொம்பளைப் பிள்ளைங்க. ஆம்பளைப் புள்ள இருந் தாலும் அப்பன்பட்ட கடனை அடைக்கும். நீங்க பாட்டுக்கு யாரையாச்சும் கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டா அப்புறம் நாங்க கொடுத்த காசு என்னா கிறது? அதனால சூட்டோட சூடா இதையெல்லாம் பேசித் தீர்த்துக்கிட்டாத்தான் நல்லது'' பேசிய பெரிய மனிதரைப் பார்த்துக் கையுயர்த்தினாள் மிருணாளினி.

''போதும் அங்க்கிள். இதற்குமேல் ஒரு வார்த்தை கூடப் பேச வேண்டாம். எங்களைப் பெத்தவங்க



எங்களது ஆணுக்கு ஆணாக அனைத்தையும் கற்றுக் கொடுத்துத்தான் வளர்த்திருக்காங்க. உங்களுக்கு நியாயமா என்ன கிடைக்கணுமோ. அது உங்களுக்குக் கிடைக்கும்'' கூறிக் கொண்டே செல்போனில் தங்களின் ஆடிட்டரையும் மேனேஜரையும் மற்றும் தன் தந்தையின் நம்பிக்கைக்கு உரிய நண்பர்களையும் அழைத்தாள் மிருணாளினி. அவள் அழைத்த அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் அனைவரும் ருத்ரனின் வீட்டிற்குள் வந்து விட்டார்கள். உள்ளே நுழைந்த அனைவருடைய பார்வையுமே ஒரு புழுவினைப் பார்ப்பதைப் போல தங்களின் மேல் விழுவதை ஒருவித அலட்சியத்துடன் எதிர்கொண்டார்கள். அங்கிருந்த பெரிய மனிதர்கள்.

''ஏங்க சார்? ருத்ரன் சார் போய் முழுசா ஒரு நாள் கூட ஆகலையே? அதுக்குள்ள...'' பேசத் தொடங்கிய ஆடிட்டரை இடைமறித்தாள் மிருணாளினி.

''அங்க்கிள். இப்ப அதையெல்லாம் பேசிக்கிட்டு இருக்க நேரம் இல்லை. இவங்க கையில் இருக்கிற எல்லாப் பத்திரங்களும் ஒரிஜினலா இல்லையான்னு பார்த்துச் சொல்லுங்க. ஏன்னா கடன் பத்திரங்களோட ஜெராக்ஸ் காப்பி உங்ககிட்ட ஒண்ணு இருக்கும் இல்ல..'' கூறிய அவளது புத்திசாலித்தனத்தை வியந்தபடியே அனைத்தையும் சரி பார்க்க ஆரம்பித்தார் ஆடிட்டர்.

''மத்தது எல்லாம் சரியாத்தான் இருக்கும்மா. இந்த ரெண்டு பத்திரம் மட்டும் போலி. ஏன்னா நாம இந்த கடனுக்கான அமௌண்ட்டை செட்டில் பண்ணிட் டோம்'' அவர் நீட்டிய பத்திரங்களில் இருந்த பணத்திற் கான தொகை ஐந்து கோடியைத் தாண்டியது.

"அதெல்லாம் இல்லை சார். என்னை என்ன இளிச்ச வாயன்னு நினைச்சீங்களா? நான் கோர்ட்டுக்குப் போவேன்" கோபத்துடன் கூறியவரின் முன்பு வேறு இரண்டு டாக்குமெண்ட்களை வைத்தார் ஆடிட்டர். அவைகளை எடுத்துப் பார்த்தவரின் முகம் இருண்டு விட்டது.

"இதெல்லாம் ருத்ரன் சார் உங்களுக்குப் பணம் கொடுத்ததற்கான செட்டில்மெண்ட் டாக்குமெண்ட்ஸ். இதில் நீங்களே சைன் போட்டுக் கொடுத்திருக்கீங்க" ஆடிட்டர் சொல்லியதைக் கேட்டு வந்த வழியே திரும்பி நழுவி விட்டார் மற்றவர்.

"சரி அங்க்கிள். இப்ப இந்த கடன் அமௌண்ட்டை செட்டில் பண்ண என்னென்ன வழிகள் இருக்கு. அதை முதலில் சொல்லுங்க" கேட்ட மிருணாளினியை சங்கடமாகப் பார்த்தார் ஆடிட்டர்.

"இல்லம்மா மிருணா. இவை எல்லாத்துக்கும் ஷ்யூரிட்டியா நம்ம வீடு, பேக்டரின்னு ஒவ்வொரு சொத்தையும் ருத்ரன் சார் எழுதிக் கொடுத்திருக்காரு..." ஆடிட்டர் இழுப்பதைப் பார்த்து எதிரில் இருப்பவர்கள் முகத்தில் புன்னகை தோன்றியது. பாதி விலைக்கு அத்தனை சொத்துக்களையும் வாங்கி விடலாம் என்று கற்பனைக் கோட்டைகளை கட்டத் தொடங்கினார்கள் அவர்கள்.

"அதெப்படி அங்க்கிள் முடியும்? இவர்கள் கொடுத்த பணத்திற்கு இரு மடங்கு அளவு மதிப்புள்ளவை நம்முடைய சொத்துக்கள். அவற்றை அப்படியே இவர்களிடம் கொடுத்துவிட முடியுமா?" மிருணாளினியின்



கேள்வி எதிரிகளின் கற்பனைக் கோட்டையில் மண்ணை அள்ளிப் போட்டது.

"ஏம்மா? அப்படியே தராட்டி மேற்கொண்டு ஏதாவது அமௌண்ட் வேணும்னாலும் வாங்கிக்க. நாங்க என்ன இல்லைன்னா சொல்லப் போறோம். எவ்வளவு வேணுமோ சொல்லு. கூடவே குறைச்சலோ பார்த்துப் பேசிக்கலாம்" கூட்டத்தில் இருந்த பெரிய மனிதர் ஒருவர் அந்த வீட்டினை ஆசையாகப் பார்த்துக் கொண்டே கூறினார்.

அவரவர் சொத்துக்களின் மதிப்பறிந்த ஆசையில் அனைவரும் பூம்பூம் மாடுகளைப் போல் தலையாட்டினார்கள்.

## 5



காளீஸ்வரி அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்வாள். அதைக் கேட்டுவிட்டு மிருணாளினியும் சுபாஷினியும் கேலியாகச் சிரிப்பார்கள்.

"பணம் என்றால் பிணம்கூட வாய் பிளக்கும்" என்பதுதான் அது.

ஆனால் அதனுடைய முழுப் பரிமாணத்தையும் மிருணாளினி அன்று தான் உணர்ந்தாள். தன்னைச் சுற்றி அமர்ந்திருக்கும் பெரிய மனிதர்கள் அனைவரும் அவளது கண்களுக்கு உயிரற்று பிணமாகத்தான் தெரிந்

தார்கள். அவள் அவர்களின் முகத்தைத் தெளிவுடன் பார்த்தாள்.

"எனக்கு எதுக்குங்க உங்களுடைய பணம். அதுவும் கூடுதலாவும் குறைச்சலாவும் கொடுக்க நீங்கெல்லாம் யாரு?" வெடுக்கென்று கேட்ட அவளுக்குப் பதிலளிக்க அங்கிருக்கும் எவருக்கும் வாய் வரவில்லை. மிருணாளினி மறுபடியும் ஆடிட்டரைப் பார்த்தாள்.

"அங்கிள். இவர்களிடம் இருக்கும் அத்தனை பிராபர்ட்டிகளின் இன்றைய மார்க்கெட் ரேட் எவ்வளவு என்பதைக் கணக்குப் பண்ணிப் பாருங்க. அப்படிப் பார்த்த பிறகு இவர்கள் நமக்குத் தர வேண்டுமோ இல்லை. நாம் இவர்களுக்குத் தர வேண்டுமோ என்பதை முடிவு பண்ணிக் கொள்ளலாம்."

ஆடிட்டர் கால்குலேட்டரையும் போனையும் எடுத்துக் கொண்டு அமர்ந்துவிட அவருடைய அருகிலேயே அமர்ந்து அனைத்தையும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த மிருணாளினியை வியப்புடன் பார்த்தனர் அனைவரும். கணக்கிட்டு முடித்த ஆடிட்டர் தான் எடுத்த லிஸ்டினை மிருணாளினியிடம் கொடுத்தார். அதை வாங்கிப் படித்து விட்டு தனக்கு எதிரே அமர்ந்திருந்தவர்களிடம் நீட்டினாள் மிருணாளினி. அதை அவசரமாக வாங்கிப் பார்த்த அத்தனை பேரின் கண்களும் கோபத்தில் சிவந்தது.

"என்னம்மா இது? நாங்க அத்தனை பேருமே உனக்குக் காசு கொடுக்கறதைப் போல கணக்குப் போட்டு வெச்சிருக்கீங்க? உங்களுக்கு கடனாக் கொடுத்த காசைக் கேட்க வந்தா மேற்கொண்டு வேற காசுக் குடுக்கணும்னு



சொல்வீங்களா? என்னைப் பத்தி உனக்குத் தெரியாது? உங்கப்பனையே வந்து பாரு வட்டப் பாறைக்குன்னு சொல்றவன் நான்." தன்னைப் பார்த்து விரல் நீட்டியவரைப் பார்த்து அமைதியாகப் புன்னகைத்தாள் மிருணாளினி.

"உங்க காசு ஒரு பைசா எனக்கு வேண்டாம் சார். ஆனால் எனக்குச் சேர வேண்டியதை ஒரு பைசா கூட உங்களுக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன். வீட்டில் யாரும் இல்லாதபோது ஒரு பொண்ணை மிரட்டினதா நான் போய்க் கம்ப்ளெயிண்ட் பண்ணினாப் போதும் சார். அப்புறம் நீங்க கோர்ட்டு கேசுன்னு அலையா அலைஞ்சாலும் உங்க காசு உங்களுக்குக் கிடைக்காது. ஏன்னா கடன் வாங்கின எங்க அப்பாவும் அம்மாவும் இப்ப உயிரோடவே இல்லை. லீகலா அவரோட சொத்துக்கள் எல்லாமே எனக்கும் என்னோட தங்கைக்கும் தான் சேரும்."

"அப்படின்னா எங்க கிட்ட இருக்கிற இந்தப் பத்திரங்களை வெச்சு நாங்க என்ன வேணும்னாலும் செய்ய முடியும்தானே?"

"நாக்கு வழிக்கக்கூட முடியாது. ஒரு சில சொத்துக்களைத் தவிர மற்றவை எல்லாமே எங்களோட பரம்பரை சொத்து. மேஜரான என்னோட அனுமதி இல்லாம எங்க அப்பாவே அதையெல்லாம் எதுவும் பண்ண முடியாது. அப்படி இருக்கப்போ எங்களோட கையெழுத்து இல்லாம நீங்க யாரும் எதுவும் செய்ய முடியாது."

கூறிய மிருணாளினியைப் பயத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள் கடன் கொடுத்தவர்கள்.

"என்னம்மா இப்படி நியாயம் இல்லாமல் பேசறே? அப்ப காசைக் கொடுத்த எங்களோட நிலைமை என்ன? உங்கப்பாவை நம்பினதுக்கு நாங்களும் நஷ்டப்பட வேண்டியது தானா?"

"அப்படிச் சொல்லாதீங்க சார். எங்கப்பாவால இது வரை யாரும் நஷ்டத்தை அடைஞ்சது இல்லை. இனி மேலும் அப்படி ஒரு நிலைமை வர நான் விடமாட்டேன். நீங்க நியாயமா எங்களுக்குத் தரவேண்டியதை தந்தீங்கன்னா டாக்குமெண்ட்ல நானும் என் தங்கையும் கையெழுத்துப் போட்டு சொத்துக்களை உங்களுக்கே கொடுத்துடறோம். இதற்கு மேல் நீங்கதான் முடிவு பண்ணனும்" முடிவாக அறிவித்து விட்டவளின் பேச்சை தட்டிக் கழிக்கும் நிலை அங்கிருக்கும் எவருக்கும் இல்லை.

ஒன்றுக்குப் பாதியாகச் சொத்தை அபகரிக்க எண்ணியவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுப்பதற்கான தவணைத் தேதியை அவளுக்கு எழுதிக் கொடுத்து விட்டுத் தலை குனிந்து வெளியேறினர்.

சொன்னபடியே அந்தந்த தேதிகளில் அவர்கள் அனைவரிடமும் இருந்து பணத்தினை வசூலித்த பிறகே பத்திரங்களை அவர்களின் பெயருக்கு மாற்றிக் கொடுத்தாள் மிருணாளினி.

அப்படி வந்த தொகையே சில கோடிகளைத் தாண்டி விட அவை அனைத்தையும் தன்னுடைய அன்னையின் உடன் பிறந்த சகோதரர் சதாசிவத்தின் உதவியுடன் பழனி, மற்றும் அதைச் சுற்றிய ஊர்களில் சொத்துக்களாக வாங்கிப் போட்டு பாதுகாப்புடன் சேமித்தாள்



மிருணாளினி. தன்னுடைய பெயரிலும் தன் தங்கையின் பெயரிலும் இருந்த பங்குப் பத்திரங்களைப் பணமாக மாற்றி வங்கிக் கணக்கில் வட்டி வரும் விதமாக செய்தவள், தங்களின் நகைகளையும் யாரும் அறியாத வண்ணம் பேங்க் லாக்கரில் வைக்கவும் ஏற்பாடு செய்து விட்டாள்.

இனிவரும் நாட்களில் அநாதையான தாங்கள் இரு வரும் கோடிக்கணக்கான பணத்திற்கும் சொத்திற்கும் அதிபதி என்பது வெளியே தெரிந்தால் அது தங்களின் எதிர்கால வாழ்க்கையைப் பாதித்து விடும் என்ற எச்சரிக்கை உணர்வோடும் பெற்றவர்களோடு வாழ்ந்த மும்பையில் தனித்து இருக்கும் தைரியம் இல்லாமலும் தங்கையோடு, மாமாவின் ஊருக்கே பாட்டியை உடன் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் மிருணாளினி.

பேட்டியின் அத்தனை நடவடிக்கைகளுக்கும் எந்த விதமான எதிர்ப்பையும் கூறாமல் முடிந்த அளவுக்குத் தானும் உடன் இருந்து தைரியம் கொடுத்தாள் காளீஸ்வரி. தன்னுடைய வயிற்றில் பிறந்த மகளுக்கு இல்லாத தைரியமும் துணிச்சலும் தான் வளர்த்த பேத்திக்கு இருப்பதை ஆசையுடனும் பெருமையுடனும் பார்த்து உணர்ந்து கொண்டாள் அவள். தள்ளாத வயதில் இருக்கும் தான் இல்லாத காலத்தில் தன்னுடைய இரண்டு ஆசை பேத்திகளும் என்ன ஆவார்களோ என்ற எண்ணம் ஒன்றே காளீஸ்வரியின் உள்ளத்தை வாட்டி வதைத்துக் கொண்டு இருந்தது. சுபாஷினியை தாய்க்குத் தாயாக இருந்து தன்னுடைய மூத்த பேத்தியான மிருணாளினி வாழ வைத்து விடுவாள் என்ற நம்பிக்கை

இருந்தபோதிலும், மிருணாளினி அந்தக் கடமை உணர்வினாலேயே தனித்து நின்று விடுவாளோ என்று காளீஸ்வரி அஞ்சினாள்.

அதுவரை மகளை எண்ணித் துக்கம் மட்டுமே கொண்டிருந்த காளீஸ்வரி பேத்திகளின் வாழ்க்கையை எண்ணும்போது மட்டும் மனதளவில் ஷோபனாவுக்கு சாபம் கொடுப்பாள். மிக இளம் வயதில் தன்னுடைய பேத்திக்கு இருந்த மனஉறுதி மற்றும் புத்திசாலித்தனம் இல்லாமல் இப்படி ஒரு மகளைப் பெற்றதற்காகத் தன்னையே நொந்து கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை அவளால்.



# 6

மனிதர்களின் மனம் தான் எத்தனை எத்தனை விசித்திரங்களைத் தனக்குக் கொண்டுள்ளது. நினைத்த இடத்தில் நினைத்த நேரத்தில் காலங்களையும் யுகங்களையும் கூடத் தாண்டிச் செல்லும் மனோ வேகத்திற்கு ஈடாக வேகமாகச் செல்லக்கூடிய எதையுமே மனிதனே இதுவரை கண்டு பிடித்ததில்லை.

காபியை உறிஞ்சிக் கொண்டே சில நிமிடங்களில் தான் வாழ்ந்த பல வருட வாழ்வினை மனக்கண்ணில் கொண்டு வந்து பார்த்து அனுபவித்துவிட்ட காளீஸ்வரீ வேதனையுடன் பெருமூச்சு ஒன்றினை வெளிவிட்டாள்.



பாட்டியின் வேதனையை மௌனமாகப் பார்த்த மிருணாளினியும் அதற்கான காரணத்தை காளீஸ்வரியிடம் கேட்கவில்லை. ஏனென்றால் அவளுக்கு நன்றாகத் தெரியும். காளீஸ்வரி விடும் மூச்சுக் காற்றுகூட தனது பேத்திகளைச் சுற்றித்தான் இருக்கும் என்பது. ஆனால் இந்தப் பாட்டியின் வயிற்றில் பிறந்த மகளுக்கு மட்டும் அந்த பாசமும் கடமையும் இல்லாமல் போனது ஏன் என்று அவள் வேதனையுடன் எண்ணிக் கொண்டாள்.

தன் அன்னை மட்டும் துணிச்சலும் தைரியமும் கொண்டவராக இருந்திருந்தால் தன் குழந்தைகளையும் தன் உயிருக்கு உயிரான கணவரையும் சேர்த்தே காப்பாற்றி இருக்க முடியும் என்று எண்ணிய மிருணாளினி, அது அவர்களுடைய கடமையும் கூடத்தானே என்று எண்ணிக் கசப்புடன் தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள். கடமைக்கும் தன் அன்னைக்கும் என்றுமே சம்பந்தம் இருந்ததில்லையே என்று மிருணாளினியை உள்ளுணர்வு அவளைப் பார்த்துச் சிரித்தது.

தன்னுடைய எண்ணங்களில் இருந்து தப்பிக்க முயற்சிப்பவராக மிருணாளினி ஜன்னலுக்கு வெளியே தெரிந்த காட்சிகளில் கண்ணைப் பதித்தாள். காலைச் சூரியனின் செந்நிறக் கதிர்களின் மாயத்தால் உலகமே அழகாகத் தோன்றியதைப் போல் இருந்தது அவளுக்கு. இதே போல ஒரு விடியல் தங்களின் வாழ்விலும் வரலாம் என்ற நம்பிக்கை தோன்றியது அவளுடைய மனதில். அந்த விடியலின் முடிவில் தன் தங்கையின் வாழ்வு மிருணாளினி எண்ணியதைப் போன்றே வளமாகவும்

மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்று எண்ணிக் கொண்ட மிருணாளினி நிமிர்ந்து தங்கையைப் பார்த்தாள்.

மிருணாளினியைப் போல எந்த விதமான நம்பிக்கையும் இல்லாத பார்வையுடன் புது மனிதர்களையும் இடங்களையும் மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபா. அவள் தங்கையின் தோளில் கைபோட்டுக் கொண்டு மிகவும் சாதாரணமாக இருப்பவளைப் போல வெளியில் தெரியும் பல விதமான மனிதர்களைக் காட்டி எதை எதையோ பேசினாலும் தன் முகம் கலக்கம் மாறாமலேயே அமர்ந்திருந்த சுபாஷினியைக் கவலையுடன் பார்த்த மிருணாளினி திரும்பிக் காளீஸ்வரிக்கு சுபாஷினியைக் கண்களால் சுட்டிக் காட்டினாள்.

''என்னடா சுபாம்மா? பசிக்குதா..'' பேத்தியின் கவனம் திரும்பக் கேட்ட பாட்டியைத் திரும்பிப் பார்த்தாள் சுபா.

''இல்ல பாட்டி...'' ஒற்றை வார்த்தையில் பதிலளித்தாள் அவள்.

''இல்ல கண்ணு. உன் முகமும் கண்ணும் சோர்ந்து தெரிஞ்சுச்சு. அதான் அப்படிக் கேட்டேன். பின்னே எதற்கு இப்படி முகத்தைத் தூக்கி வைச்சிக்கிட்டு இருக்க?''

''நான் எங்க பாட்டி முகத்தைத் தூக்கி வெச்சேன். வரவர என் முகமே அப்படி ஆகிவிட்டது.''

''ச்சீ... சுபா. என்ன இது? இப்பத்தானே உனக்கு அவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னேன். அதுக்குள்ள திரும்பவும் நீ இப்படிப் பேசலாமா. என் சுபாக்குட்டியின்



முகம் எப்பவும் பூ மாதிரி மலர்ந்து இருக்கணும்'' கண்டிப்புடன் ஆரம்பித்து மென்மையுடன் முடித்த அக்காவைப் பார்த்து புன்னகைத்தாள் சுபாஷினி.

''இப்படியாக்கா? இவ்வளவு மலர்ந்து இருந்தால் போதுமா.. இல்லை இதற்கு மேல் இவ்வளவு மலர்ந்து இருக்கணுமா'' வேண்டுமென்றே இழுத்துக் கேட்டுச் சிரித்த தங்கையைக் கனிவுடன் பார்த்தாள் மிருணாளினி.

''நீ எவ்வளவு சிரித்தாலும் எனக்குப் பத்தாதுடா. இந்த உலகில் இருப்பவர்கள் அத்தனை பேரின் சிரிப்பையும் நீ ஒருத்தியே சிரித்தால்கூட எனக்கு அது பத்தாதுதான்'' தன்னை நோக்கிக் கூறிய மிருணாளினியை ஒற்றை விரல் காட்டி எச்சரித்தாள் சுபாஷினி.

''அக்கா.. பேராசை பெரும் நஷ்டம்னு நீ கேள்விப் பட்டதே இல்லையா? உன்னுடைய ஆசை பேராசைக் கெல்லாம் பேராசைக்கா...''

''என் சுபாக்குட்டியைப் பத்தி நான் என்ன நினைத்தாலும் அது எனக்கு நியாயமான ஆசைதான். சரி சரி. நீ போய் பாத்ரூமில் பேஸ் வாஷ் பண்ணிக்கிட்டு வா. அடுத்த ஸ்டேஷனில் நாம இறங்கணும்னு நினைக்கிறேன்'' கூறிக் கொண்டே காளீஸ்வரியின் துணையுடன் அவளை அனுப்பி விட்டுத் தன் செல்போனில் சதாசிவத்தின் எண்களை அழுத்தினாள் மிருணாளினி.

''திஸ் போன் கேன் நாட் பி ரீச்சபில் அட் த மொமெண்ட்'' கம்ப்யூட்டர் பெண்ணின் குரலைக் கேட்டு எரிச்சலுடன் போனை கட் பண்ணிய மிருணாளினியின் முகம் கோபத்தில் சிவந்தது.

'இந்த மாமா ஏன் இப்படிப் பண்றார்? தனியாக இரு பெண்களுடன் வயதான தாயார் வருவதை எண்ணித் தானாக போன் செய்து விசாரித்திருக்க வேண்டும். சரி. தானாக விசாரிக்கா விட்டாலும் போனையாவது ஒழுங் காக வைத்திருக்க வேண்டாமா என்ன பொறுப்பில்லாத தனம் இது?' எரிச்சலுடன் பல்லைக் கடித்தவளின் மனம் அவளையே இடித்துரைக்க ஆரம்பித்தது.

'உன்னைப் பெற்றெடுத்த அன்னைக்கே உங்களைப் பற்றி கவலை இல்லை. அவளுடன் பிறந்த சகோதரர் உங்களின் மேல் அக்கறைப்பட வேண்டும் என்று என்ன கட்டாயம்?' மனதின் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் உதட்டினைப் பற்களால் அழுந்தக் கடித்தபடி யோசனை யாக அமர்ந்து விட்டாள் மிருணாளினி.

அதற்குள் பாட்டியுடன் திரும்பி வந்த சுபாஷினிக்கு தலைப் பின்னலைக் கழற்றி மறுபடியும் ஒழுங்காகப் பின்னல் போட்டு விட்டாள் மிருணாளினி. தன்னுடைய பின்னலை முன்னால் விட்டுக் கேலியாகப் பார்த்தாள் சுபாஷினி.

"இது என்னக்கா? புதிதாகப் பின்னல் எல்லாம் போட்டு விடறீங்க? மும்பைல இப்படியெல்லாம் போட்டு கிட்டதே இல்லையே? கேட்ட தங்கையை யோசனை யாகப் பார்த்தாள் மிருணாளினி.

"மும்பையைப் பத்தி இனிமேல் நீ பேசவே கூடாது சுபா. ஏன் நினைக்கக் கூட கூடாது. அப்புறம் இங்க இருக்கவங்க எல்லோருக்கும் நம்ம அப்பா அம்மா ஒரு பெரிய ஆக்சிடென்ட்டில் இறந்துட்டாங்கன்னு தான் தெரியும். நீயும் அதையே மெயின்டெயின் பண்ணிக்



கணும். தெரிஞ்சுதா?" கேட்ட அக்காவிற்குத் தலை யசைத்து சம்மதம் தெரிவித்தாள் சுபா.

"அப்புறம் இந்தப் பின்னல் பத்தி கேட்டேயில்ல? இங்க இருக்கிற பொண்ணுங்க எல்லாரும் மேக்ஸிமம் பின்னல் போட்டுக்கிறாங்க. ஏன் மும்பையிலும் கூட பொண்ணுங்க இப்படி பின்னல் போட்டுக்கத்தானே செய்யுறாங்க?"

"அதெல்லாம் இருக்கட்டும்மா. நாம இப்ப இங்க இறங்கப் போறமா?" எப்படி படுக்கையெல்லாத்தையும் எடுத்து ரெடியா வெச்சிருக்கிற?"

"ஆமாம் பாட்டி. நான் போனதடவை வந்தப்போ மாமா இந்த ஸ்டேஷன்லதான் எனக்காக வெயிட் பண்ணினாங்க. ஸோ... இப்பவும் மாமா இங்கதான் இருப்பாங்கன்னு நினைக்கிறேன் பார்ப்போம்..."

சொத்துக்கள் வாங்கும் பொருட்டு அந்த ஊருக்கு இருமுறை வந்த தைரியத்தில் கூறினாள் மிருணாளினி.

# 7



அந்த அதிகாலை நேரத்திலும் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்த ரயில் நிலையத்தை வியப்புடன் பார்த்த காளீஸ்வரியைப் பார்த்துச் சிரித்தாள் சுபாஷினி.

''நல்லவேளைக்கா. பாட்டியை நாம ஏர்போர்ட்டுக்கு கூட்டிட்டுப் போயிருந்தோம்னா மயக்கம் போட்டே விழுந்திருப்பாங்க. ரயில்வே ஸ்டேசனுக்கே வாயில் ஈ போறதுகூடத் தெரியாம எப்படி வாய் பிளந்து வேடிக்கை பார்க்கிறாங்க பாருங்க'' இளித்த சுபாஷினியைப் பார்த்து முறைத்தாள் காளீஸ்வரி.

''முளைச்சு மூணு இலை விடாத உனக்குக் கூட என்னைப் பார்த்தா நக்கலா இருக்குல்ல? நீ என்ன செய்வ பாவம். என் நிலைமை இப்படி இருந்தா எல்லோரும் கேலி பண்ணத்தான செய்வீங்க?'' கோபமாய்க் கூறிய பாட்டியைப் பின்னால் இருந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சுபாஷினி.

''மை ஸ்வீட் பாட்டி. உங்களைப் போய் நான் கேலி பண்ணுவேனா? நான் சும்மா தமாஷ் பண்ணினேன் பாட்டி'' கூறிய சுபாஷினியின் கன்னம் தொட்டு முத்தமிட்டாள் காளீஸ்வரி.

''நானும் சும்மா தமாஷ்தான் பண்ணினேன் கண்ணு. உன்னைப் போய் நான் கோபிப்பேனா? நீ என் தங்கமில்ல? பாட்டி இந்த ஊருக்கு வந்து பல வருசம் ஆச்சுடா. உன் அக்கா பொறக்குறதுக்கு முன்னால பம்பாய்க்கு வந்தது. அப்படியே அங்கேயே என் காலம் போயிருச்சு. இப்ப என் சொந்த மண்ணை மிதிச்சவுடனே எனக்குப் பல ஞாபகம் வந்துருச்சு. அதான் அப்படிப் பார்த்துக்கிட்டே நின்னுட்டேன்.''

''பாட்டி அது பம்பாய் இல்ல பாட்டி. மும்பை. பேர் மாத்தியே பல வருஷம் ஆச்சு பாட்டி'' கூறிய பேத்தியை அணைத்துக் கொண்டாள் காளீஸ்வரி.



பாட்டியும் பேத்தியும் கதையளந்து கொண்டிருக்க ஸ்டேஷனைச் சுற்றிப் பார்வையை ஓட்டிக் கொண்டு இருந்த மிருணாளினி எரிச்சலுடன் தன் செல்போனில் மறுபடியும் தன் மாமாவின் எண்களை அலுப்புடன் அழுத்தினாள்.

'இந்த மாமாவுக்கு என்னதான் வந்துச்சு? போனை எடுக்கவே மாட்டேங்கறாரே?' தனக்குள் கூறிக் கொண்டே போனைக் காதில் வைத்தவள் மறுமுனையில் ரிங் போக நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

''ஹலோ...'' மறுமுனையில் கேட்ட குரலுக்கு வியப்பாகப் பதிலளித்தாள் மிருணாளினி.

''ஹலோ... இது... வந்து...''

''அதான் வந்துட்டீங்க இல்ல? அப்புறம் எதுக்காக இப்படி இழுக்கறீங்க?'' எரிச்சலுடன் கேட்டது மறுமுனைக்குரல்.

''ஹலோ.. நீங்க யாருங்க? இது எங்க மாமா சதாசிவத்தோட போன்தானே? நீங்க யார் பேசுறது?''

''யாரா இருந்தால் நீங்க பொறுமையாப் பேசுவீங்க...?''

''இங்க பாருங்க சார். நீங்க யாரா வேணும்னாலும் இருந்துட்டுப் போங்க. ஆனா இப்ப போனை எங்க மாமா கிட்டக் குடுங்க. நான் அர்ஜென்ட்டா அவங்க கிட்டப் பேசியாகணும்...''

''அதுக்கு நான் மறுபடியும் பாளையத்துக்கு இல்ல போகணும். இன்னும் அட்லீஸ்ட் ஒரு மணி நேரமாவது ஆகுமே! பரவாயில்லயா?'' நக்கலாகக் கேட்டவனின் குரலில் பதறி விட்டாள் மிருணாளினி.

''சார்.. ப்ளீஸ்.. தயவு செய்து எங்க மாமா கிட்ட போனைக் குடுங்களேன். நான் அவரோட தங்கை பொண்ணு பேசறேன்.''

''இதை முதல்லயே சொல்லி இருக்கலாம் இல்ல? அது சரி தங்கை பொண்ணுக்குப் பேர் இல்லயா?'' மறு முனைக் குரலைக் கேட்ட மிருணாளினிக்கு இம்முறை கோபம் வந்தது.

''ஹலோ... என்ன மிஸ்டர் விளையாட்டு இது? இங்க என்னோட சிச்சுவேஷன் புரியாம நீங்க பாட்டுக்கு விளையாண்டுக்கிட்டு இருக்கீங்க? மரியாதையா போனை மாமாகிட்டக் குடுக்கப் போறீங்களா இல் லையா?''

''குடுக்க முடியாது. என்ன பண்றதா உத்தேசம்? ஒழுங்கா என் கேள்விக்குப் பதில் சொன்னா தான் உங்களோட மாமாகிட்டப் பேசலாம். இல்லேன்னா...'' கூறிய குரலுக்கு அவசரமாகப் பதிலளித்தாள் அவள்.

''மிருணாளினி... என் பெயர் மிருணாளினி. போதுமா? இப்பவாவது போனை...''

''மாமா கிட்டக் கொடுக்கணும். அதானே? ஏன் நீங்க போனில் பேசாவிட்டால் என்ன? நேராக அவரோட வீட் டுக்கே போக வேண்டியது தானே?'' தன் செல்போனை எடுத்துத் திகைப்புடன் பார்த்துவிட்டு மறுபடிக் காதில் வைத்தாள் மிருணாளினி.

''அது.. வந்து.. வந்து.. அவங்களோட வீடு எனக்குத் தெரியாதே?''



''என்னங்க நீங்க? இவ்வளவு உரிமையா அவரோட தங்கை பொண்ணுன்னு சொல்றீங்க? மாமான்னு பேச றீங்க? ஆனா அவர் வீட்டுக்குப் போனதே இல்லையா? என்னால நம்ப முடியலியே?'' மறுமுனையில் கேட்ட வனின் குரலில் தெரிந்த ஏளனத்தால் கண்களில் கண்ணீர் வந்து விட்டது மிருணாளினிக்கு.

''நான் உண்மையைத்தான் சொல்கிறேன் சார். நான் போனமுறை வந்தபோதுகூட அவரோட வீட்டுக்குப் போக எனக்கு நேரம் கிடைக்கலை. ஏன்னா மும்பைல என்னோட தங்கை தனியா இருப்பாளேன்ற பதட்டத்துல உடனே கிளம்பிட்டேன். ஆனா இப்போ நான்... நாங்க.. உங்களுக்கு எங்களோட நிலைமையை எப்படிப் புரிய வைக்கிறதுன்னு எனக்குத் தெரியல. நீங்க தயவு பண்ணிப் போனை மாமாகிட்டக் கொடுங்களேன்.''

''எப்படிப் புரிய வைக்கிறதுன்னா? நாங்க என்ன ஒண்ணுமே புரிஞ்சுக்க முடியாத காட்டுமிராண்டியா? ஏன் நீங்க மட்டும்தான் இந்த உலகத்துலயே அறி வாளின்ற நினைப்பா?'' போனில் கேட்ட குரலுக்கு பதில் சொல்லுவதற்கு முன்பாகவே பழைய நிமிர்விற்கு வந்து விட்டாள் மிருணாளினி.

''ஹலோ சார். நீங்க யார், எப்படிப்பட்டவர் என்ப தெல்லாம் எனக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவ சியமும் இல்லை. எனக்குத் தேவை என் மாமா. உங் களால் அவரிடம் போனைக் குடுக்க முடிந்தால் கொடுங்க. இல்லை என்றால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். மும்பையில் இருந்து தனியாக தமிழ்நாட்டுக்குப் பழனிக்கு வர முடிந்த எங்களால் என் மாமா வீட்டையும்

கண்டுபிடிச்சு போய்க் கொள்ள முடியும். நீங்க போனை வைக்கலாம்'' கோபமாகக் கூறிவிட்டு போனைக் கட் பண்ணியவள் தன் கைப்பைக்குள் அதனை வைத்துக் கொண்டே திரும்பினாள்.

''அப்போ போயிருக்க வேண்டியது தானே? எதுக்காக இவ்வளவு நேரம் போனில் கெஞ்சினீங்களாம்'' கரகரப்பாக முதுகுக்குப் பின்னால் இருந்து வந்த குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள் மிருணாளினி.

அவள் திரும்பிய வேகத்தில் முன்புறமாய் வந்து விழுந்த நீண்ட பின்னலைப் பார்வையிட்டுக் கொண்டே நிதானமாக. அவளைப் பார்த்தான் எதிரில் இருந்தவன்.

# 8



''யார் நீங்க?''

கைகளை முன்புறமாகக் கட்டிக் கொண்டு கால்களை லேசாக அகற்றி வைத்துத் தோரணையுடன் நின்று கொண்டு தன்னைப் பார்த்தவனை வியப்புடன் கேட்டாள் மிருணாளினி.

''சரியான கேள்வி... சபாஷ்... புருவத்தை உயர்த்தி தன் அழகான பல் வரிசை தெரியச் சிரித்தவனை ஆராய்ந்தாள் மிருணாளினி.

ஆறடி உயரத்திற்கும் அதிகமான உயரத்துடன், அகன்ற மார்பும், மிகத் திருத்தமான அழகான



உடற்கட்டும், களையான முகமும், மாநிறமுமாய், அழகாய்ச் சிரித்தவனின் சிரிப்பு அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

''ஏங்க... முன்பின் தெரியாதவங்களைப் பார்த்து யார்னு கேட்டாத் தப்பா?''

''முன்பின் தெரியாதவன்! என்ன பாட்டி? உங்களுக்கும்கூட என்னை யார்னு தெரியலையா?'' தன்னைப் பார்த்து உரிமையுடன் கேட்டவனைக் கூர்ந்து பார்த்த காளீஸ்வரியின் கண்கள் சொந்தத்துடன் மின்னியது.

''என் ரத்தத்தை எப்படிய்யா எனக்கு அடையாளம் தெரியாமப் போகும்? என் ராசா.. என் தங்கமே.. நம்மளோட சூழ்நிலையைப் பார்த்தியா... தாய்க்குப் பிள்ளை இல்லாம சாயறதுக்கும் தோளில்லாம இப்படி ஆளுக்கொரு மூலையில அனாதையாப் போய் வாழ்ந்திட்டமே? என் கண்ணே'' ஓடிவந்து தன்னைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டவளை அணைத்துச் சிரித்தான் அவன்.

''சாரி பாட்டி. உங்களுக்கும் என்னை அடையாளம் தெரியாதுன்னு நினைச்சிட்டேன்.''

''அதெப்படிய்யா தெரியாமப் போகும். என் மகனோட ஒரே வாரிசு. எங்க குலம் தழைக்க வந்த குலக்கொழுந்து.. உன்னைத் தெரியலேன்னா நான் உசிரோட இருக்கறதே வேஸ்ட்டுய்யா'' கண்களைத் தன் முந்தானையால் துடைத்துக் கொண்டே மிருணாளினியைப் பார்த்தாள் காளீஸ்வரி.

''என்னம்மா அப்படிப் பார்க்கிற? இவன் தான் உன் மாமா சதாசிவத்தோட ஒரே பிள்ளை முகுந்தன். முகுந்தா

இது உன் அத்தையோட பெரிய பொண்ணு மிருணாளினி. அது சின்னப் பொண்ணு. பேரு சுபாஷினி.''

பாட்டி அறிமுகம் செய்து வைத்த புதியவனைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தாள் மிருணாளினி.

''நீங்கதான் இவ்வளவு நேரம் என்னைப் போனில் கலாய்ச்சீங்களா? நான் வேற யாரோன்னு நினைச்சு கொஞ்சம் ஹார்சா பேசிட்டேன். சாரி'' கூறியவனைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தாள் அவள்.

''நீங்க இன்னும் ஹார்சா பேசுவீங்கன்னு எதிர்பார்த்தேன். கொஞ்சம் கம்மியாத்தான் திட்டினீங்க.''

'இவன்தான் சிரிக்கும்போது எவ்வளவு அழகாக இருக்கான்' அவனது சிரிப்பை ஆவலாகப் பார்த்து ரசித்தவளைப் பார்த்த முகுந்தனின் கண்களில் மின்னல் வெட்டியது.

''அக்கா.. கால் வலிக்குதுக்கா. இப்பவாவது போகலாமா.. இல்ல.. இன்னும் யாராச்சும் வரணுமா?'' மிக சோர்வாகக் கேட்டவளை அன்புடன் பார்த்தான் முகுந்தன்.

''போகலாம் சுபா. இனி வேற யாருக்காகவும் நீங்க காத்திருக்க வேண்டாம் வாவா..'' கை நீட்டி அவளை அழைத்த முகுந்தனை மிகவும் பிடித்துப் போனது சுபாஷினிக்கு.

''ஸோ நைஸ் டு யூ மாமா. நான் உங்களை மாமான்னு தான கூப்பிடணும்?''

''அப்படித்தான் கூப்பிடணும் சுபா. உங்களுக்கு நான் மாமா முறைதான்'' தலை சாய்த்துக் கேட்ட சுபாவைப்



பார்க்காமல் மிருணாளினியைப் பார்த்துக் கொண்டே கூறினான் முகுந்தன்.

அவனைப் பாராதவள்போல் குனிந்து பெட்டிகளை கையில் தூக்கிக் கொண்டு நகர முயன்றவளைத் தடுத்துத் தன் கைகளால் கனமான இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு மற்றவற்றை அவர்களை நோக்கிக் கண்களால் சுட்டிக் காட்டினான் முகுந்தன்.

பதில் கூறாமல் மற்ற பெட்டிகள் இரண்டையும் இரு கைகளால் தூக்கிக் கொண்டு முகுந்தனைப் பின் தொடர்ந்தாள் மிருணாளினி.

ஸ்டேஷன் வாசல் வரை வேகமாக நடந்தவன் வாயில் வந்ததும் பெட்டிகளைக் கீழே வைத்து விட்டு மிருணாளினியின் முகம் பார்த்த முகுந்தனை அவசரமாகப் பார்த்தாள் மிருணாளினி.

''ஏதாவது டாக்ஸி இருந்தால் ஏற்பாடு பண்ணிக்கலாம். இத்தனை பெட்டிகளைத் தூக்கிக்கிட்டு பஸ்ஸில் போக முடியாதில்ல. அதான்.. வாடகையை நான் பே பண்ணிடறேன்.''

கூறியவளைப் பார்த்தவன் எதுவும் கூறாமல் வேகமாகச் சென்றுவிட அவனையே திகைத்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் மிருணாளினி.

சிறிது நேரத்தில் தங்களை உரசிக் கொண்டு வந்து நின்ற வெளிநாட்டுக் காரைப் பார்த்தவள், டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த முகுந்தனைப் பார்த்துப் புருவம் உயர்த்தினாள். எதுவும் பேசாமல் கார் டிக்கியில் பெட்டிகளை அடுக்கிவிட்டு கார் கதவைத் திறந்து

விட்டவனை எந்தக் கேள்வியும் கேட்காமல் காரில் ஏறி அமர்ந்தாள் மிருணாளினி.

"ஏன் பாட்டி... ஊரிலேயே உங்க பேத்தியோட வீடு மட்டும்தான் பணக்காரங்களா. மத்தவங்க யாரும் காசு, பணத்தோட இருக்க மாட்டாங்கன்னு முடிவே பண்ணி விட்டாங்களா உங்க பேத்தி?" குத்தலாகக் கேட்டவனை விரக்தியாகப் பார்த்தாள் மிருணாளினி.

"காசு.. பணம்.. வசதி.. வாழ்க்கை இது எதற்குமே எந்த அர்த்தமும் உங்க பேரனுக்குத் தெரியாது போல பாட்டி. ஆனால் இவை எல்லாத்திற்கும் எனக்கு ஆயிரம் அர்த்தம் தெரியும்னு உங்க பேரன்கிட்ட சொல்லுங்க. இந்தப் பணம்ங்கிற வார்த்தையை என்கிட்ட இன்னொரு தடவை சொல்ல வேண்டாம்னு சொல்லுங்க. பணக்காரங்க வாழற வாழ்க்கைதான் உயர்வுன்ற மாதிரி என்னிடம் பேச வேண்டாம்னு சொல்லுங்க. நான் ஏழையா பொறந்து ஏழையா வளர்ந்து, ஏழையா வாழ்ந்திருக்கக் கூடாதான்னு ஏங்குற ஏக்கத்தை உங்க பேரனுக்கு நல்லாப் புத்தியில் உரைக்கிற மாதிரி சொல்லுங்க..." பார்வை சூனியத்தில் நிலைக்க கசப்புடன் பேசிக் கொண்டே போன பேத்தியைத் திரும்பிப் பார்த்த காளீஸ்வரியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிவதை வியப்புடன் பார்த்த முகுந்தனின் பார்வை ஒருவித ஆராய்ச்சியாக மிருணாளினியைப் பார்த்தது.

"அக்கா..." அழுகையில் பிதுங்கிய உதட்டுடன் தோள் சாய்த்த சுபாஷினியைப் பார்த்த மிருணாளினி தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.



"ஒண்ணும் இல்லடா சுபா. உன் மாமா கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். அவ்வளவுதான். நீ ஏன் இவ்வளவு ஷார்ப் டெம்பரா இருக்க?" தங்கையை அதட்டிக் கொண்டே அணைத்துக் கொண்டாள் மிருணாளினி.

காரின் கண்ணாடி வழியாக அவளைப் பார்த்த முகுந்தனின் விழிகளில் முதல் முறையாக வேதனை வந்தது.

# 9



"யார் இவள்?"

காரைச் செலுத்திக் கொண்டே புருவம் சுளித்து யோசித்தான் முகுந்தன். நேற்று வரை இப்படியொரு சொந்தத்தைப் பற்றியே அறியாதவன் அவன். ஆனால் இன்று தன் முன்னால் நிற்கும் இந்தப் பெண்ணின் துயரம் தன்னை எதற்காக இந்த அளவிற்குப் பாதிக்கின்றது என்பதை வியப்புடன் தனக்குள் கேட்டுக் கொண்டான் முகுந்தன்.

முதல் முறையாகக் காதில் போனுடன் அவளை பார்த்த நொடியிலேயே தன் மனம் அவள்பால் ஈர்க்கப்படுவதை உணர்ந்தான் முகுந்தன். தன்னுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் தனது முகபாவம் சட்டென்று மாறிவிடும் விந்தையை அறியாதவளாய்த் தன்னுடன்

பேசிக் கொண்டு இருந்தவளை நிதானமாகப் பார்த்துக் கொண்டேதான் வேண்டும் என்றே அவளிடம் வம்பிழுத்துக் கொண்டிருந்தான் முகுந்தன். அன்று வரை எந்தப் பெண்ணிடமும் அளவில்லாம பேசுவதை அறவே வெறுத்த தனக்கு மிருணாளினியிடம் பேசும்போது மட்டும் அளவில்லாமல் பேசத் தோன்றுவது எதனால் என்று வியப்புடன் எண்ணிப் பார்த்தான் முகுந்தன். எது எப்படி இருந்தாலும் மிருணாளினியிடம் பேசும்போது தன் மனம் ஆனந்தத்தில் சிறகடிப்பது அவனுக்கு மிகவும் பிடித்தது.

ஆனால் மிருணாளினியின் கண்களில் தெரிந்த இனம் புரியாத சோகமும் விரக்தியும் அவனால் புரிந்து கொள்ள முடியாததாய் இருந்தது. அவர்களின் பெற்றோரின் மரணம் இருவரையும் மிகவும் பாதித்து இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டே முகுந்தனுக்கு, தன் கைகளினால் மிருணாளினியை இறுக்க அணைத்துக் கொண்டு தன் மடி சாய்த்து அவளுக்கு ஆறுதல் கூற வேண்டும் போல் ஆவல் எழுந்தது. மிகுந்த பிரயாசையுடன் தன் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் திரும்பி அருகில் அமர்ந்திருந்த பாட்டியைப் பார்த்தான்.

''ஏன் பாட்டி? கடைசியா என்னை எப்பத்தான் நீங்க பார்த்தீங்க? ஏன்னா நான் எனக்கு விவரம் தெரிஞ்சு உங்களைப் பார்த்ததே இல்லையே?''

''ரொம்பச் சின்ன வயசில பார்த்ததுதான்யா. உங்க அப்பா வாறபோதெல்லாம் உன்னையும், உங்கம்மாவையும் கூட்டிக்கிட்டு வரச் சொல்லிக் கெஞ்சுவேன். எங்க... என் பேச்செல்லாம் அவன் காதில் ஏறினாத்தான்...'' அலுத்துக் கொண்டாள் காளீஸ்வரி.



''அது வேற ஒண்ணும் இல்ல பாட்டி. நீங்க ஒரேயடியா அத்தை வீட்டுலயே தங்கிட்டீங்கள்ள. அந்தக் கோபம் தான் அம்மாவுக்கு. அப்பா எத்தனையோ தடவை கூப்பிட்டுப் பார்த்தாங்க. ஆனா அம்மாதான் வரமாட்டேன்னு சொல்லிட்டாங்க. என்னையும் விடலை.''

''என் மருமக தங்கமான பொண்ணு ராசா. ஊருல உலகத்துல மாமியார் வீட்டை விட்டுப் போயிட்டா சந்தோஷப் படுற மருமகளுகதான் இருக்காங்க. இப்படி என் மருமகளைப் போல கோபப்படுற பொண்ணுங்க நூத்துல ஒருத்தர்தான் இருப்பாங்க. அந்த வகையில நான் கொடுத்து வெச்சவதான் ராசா.''

''நீங்க பேசறதைப் பார்க்கறப்ப எனக்கே ரொம்ப வியப்பா இருக்கு பாட்டி. அம்மாவும் இப்படித்தான் உங்களைப் பத்தி ஒரு குறையும் சொல்லவே மாட்டாங்க. உங்க மேல வருத்தம் இருந்தாலும், உங்களைத் திட்டி நான் கேட்டதே இல்ல பாட்டி. ரொம்ப ஆச்சரியம்தான் பாட்டி. ஆனா அப்புறம் எதுக்காக நீங்க மும்பைலயே தங்கிட்டீங்க?''

''நம்ம விதி சாமி. நான் வேற என்ன சொல்ல. நானும் அங்க இல்லாமப் போயிருந்தா இந்தப் புள்ளைக ரெண்டையும் புதைச்ச இடத்தில் புல்லு முளைஞ்சுப் போயிருக்கும்.''

''பாட்டி!''

''ஆமா ராசா. இதுக்கு மேல என்கிட்ட எதுவும் கேட்காத. இதுவரை இந்த விலையில்லா மாணிக்கங்களை நான் பாதுகாத்து வந்துட்டேன். இப்ப உங்களை

நம்பி நம்ம மண்ணுக்குக் கூட்டிகிட்டும் வந்துட்டேன். இதுக்கு மேல அந்த ஆண்டவன்தான் இதுங்க ரெண்டுக்கும் துணை. இனி நான் இந்தத் தள்ளாத காலத்தோட எத்தனை நாள் இருப்பனோ. என் மாணிக்கங்களை எப்படிப் பாதுகாப்பேனோ எனக்கேத் தெரியலை. என் செல்லங்களோட கதி என்ன ஆகப் போகுதோன்னு என் நெஞ்சு கெடந்து அடிச்சுக்குது. இந்தக் கொடுமையை நான் யார்கிட்டப் போய் சொல்ல? என்ன சொல்லி என் மனச ஆத்திக்க? எனக்கு ஒண்ணும் புரியலியே?''

நெஞ்சில் கை வைத்துக் கொண்டு அரற்றும் காளீஸ்வரியைப் பார்த்த மிருணாளினியின் கண்களில் கரகரவெனக் கண்ணீர் வழிய அதைத் துடைக்கவும் தோன்றாமல் அமர்ந்து விட்டாள் மிருணாளினி.

அந்தக் கண்ணீரைத் துடைக்கப் பறந்த தன் கைகளினால் ஸ்டியரிங்கை அழுத்திப் பிடித்துக் கொண்ட முகுந்தன் சாலை ஓரமாகக் காரை நிறுத்திவிட அவன் முகத்தைப் புரியாமல் பார்த்தாள் காளீஸ்வரி. தன்னைப் பார்த்து விழித்த பாட்டியின் கரம் பற்றி இழுத்து அவள் உள்ளங்கையில் தன் கையை வைத்தான் முகுந்தன்.

''எதற்காகப் பாட்டி இவ்வளவு கவலைப்படறீங்க? உங்க ரத்தமும் சதையுமா நாங்கல்லாம் இருக்கும்போது நீங்க ஏத்துக்கிட்ட கடமையை நாங்களும் சேர்ந்து நிறைவேற்ற மாட்டமா? இதுக்காக நீங்க இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் பேசலாமா?'' கூறிக் கொண்டே பாட்டியின் கையை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான் முகுந்தன்.

''இப்ப நான் உங்களுக்குச் சத்தியம் பண்ணித் தர்றேன் பாட்டி. உங்க பேத்திகள் இரண்டு பேரையுமே நான் என்




மூச்சு இருக்கிற வரைக்கும் பாதுகாப்பா பார்த்துக்குவேன். அவங்க மனசு போல நல்ல வாழ்க்கையை நான் அமைச்சுத் தருவேன். அவங்க காலம் பூராவும் நான் அவங்களுக்குத் துணையா இருப்பேன். இது நான் உங்களுக்குத் தர்ற வாக்கு. நம்ம பரம்பரையில யாரும் இதுவரை வாக்குத் தவறியது கிடையாதுன்னு உங்களுக்கே நல்லாத் தெரியும்.''

காளீஸ்வரியின் கரத்தில் இருந்து கையை எடுத்துக் கொண்டு திரும்பி மிருணாளினியைக் கண்ணோடு கண் பார்த்தான் முகுந்தன்.

முகுந்தனின் பார்வையால் தன் மன வேதனை மெல்ல மெல்ல குறைவதை உணர்ந்தாள் மிருணாளினி. அவனைப் புதிதாகப் பார்ப்பதைப் போல் பார்த்தவள் அதற்கு மேல அவனது பார்வையைத் தாங்கும் சக்தியில்லாமல் தன் கன்னங்கள் சிவக்கத் தலை குனிந்தாள்.

தன் பார்வையைக் கூடத் தாங்காமல் சிவக்கும் மிருணாளினியை ஆசையுடன் பார்த்தான் முகுந்தன். இருவரின் பார்வையும் உணர்த்திய செய்தியால் உள்ளம் குளிர்ந்த காளீஸ்வரி ஆண்டவனை மனதாரப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

## 10



மலர்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி குணம் உண்டு என்று சதாசிவம் கூறக் கேட்டிருக்கிறான்

முகுந்தன். அந்த வகையில் செந்தாமரை என்றால் முகுந்தனுக்கு மிகவும் பிடிக்கும். தன் வீட்டினை புதுமாடலில் சதாசிவம் வடிவமைத்தபோது முன்புறம் இருந்த தோட்டத்தில் ஒரு மூலையில் செயற்கைக் குளம் அமைத்து அதில் செந்தாமரைகளை மலர விட வேண்டும் என்று முகுந்தன் தன் தந்தையிடம் பிடிவாதமாகக் கூறிவிட்டான். தன் ஒரே செல்ல மகனின் ஆசையை நிறைவேற்ற சதாசிவமும் அவ்வாறே செய்து கொடுத்தார்.

அந்த செந்தாமரை மலரின் வண்ணத்தைத் தன் அத்தை மகளின் கன்னங்களில் கண்டு மகிழ்ந்தான் முகுந்தன். தன்னைப் பார்த்த மிருணாளினியின் விழிகளில் தெரிந்த மயக்கம் முகுந்தனின் மனதை பெருமை கொள்ள வைத்தது. தன்னைத் தான் விரும்பும் பெண் ரசிக்கும்போதுதான் ஒவ்வொரு ஆண் மகனின் ஆண்மையும் பெருமையும் நிறைவும் அடையும். அந்த வகையில் தன்னுடைய மனம் கவர்ந்தவளின் பார்வையால் முகுந்தனின் ஆண்மை கர்வத்தால் பூரிப்படைந்தது. அவன் மிருணாளினியின் மேல் வைத்த பார்வையை எடுக்க மனம் இல்லாமல் சிலை போல் அமர்ந்து விட்டான்.

மிருணாளினியின் நிலையோ முகுந்தனைவிட அதிகமான மயக்கத்தில் இருந்தது. இருவரையும் மாறி மாறிப் பார்த்த சுபாஷினி கொட்டாவி விடுவது போல் பாவனை செய்தவாறே பாட்டியை சிரிப்புடன் பார்த்தாள்.

''பாட்டி, நைட்டெல்லாம் டிரெயின்ல சரியாத் தூங்கவே முடியல. சரி, வீட்டுக்குப் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாம்னு பார்த்தா இனி நாளைக் காலை தான் வீட்டுக்குப் போக முடியும் போல இருக்கே!'' போலியாகக் கன்னத்தில் கை வைத்துக் கவலைப்பட்ட பேத்தியின் கேலி புரிந்தும் மௌனமாக இருந்தாள் காளீஸ்வரி.



''என்ன பாட்டி இது! உங்களுக்கும் காது கேட்காமப் போச்சா! என்னே இந்த ஊரின் மகிமை! ஆத்தா... தாயே!'' வானத்தை நோக்கிக் கைகூப்பிய சுபாஷினி தலையில் செல்லமாகத் தட்டினாள் மிருணாளினி.

''பார்த்தியாக்கா! என் வேண்டுதலின் பலனால் உனக்குக் காது கேட்டுவிட்டது?'' சிரித்த தங்கையை அடிக்கக் கை ஓங்கிய மிருணாளினி அடிக்காமல் அவள் தலையைத் தடவி விட்டாள்.

''சிரி சுபா! இன்னும் வாய்விட்டுச் சத்தமாகச் சிரி. எப்போதும் எப்படிக் கலகலப்பாக சிரித்துக் கொண்டே இருப்பாயோ அப்படிச் சிரி. உன் சிரிப்பைப் பார்த்து எத்தனை நாட்கள் ஆகி விட்டது'' கண்களில் நீர் வழியத் தன் தலையைக் கோதிய அக்காவின் மடியில் விம்மிக் கொண்டே சாய்ந்து விட்டாள் சுபா.

''அக்கா?'' கதறிய தங்கையின் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்தாள் மிருணாளினி.

''சரிதான்... அவ பாட்டுக்கு சிரிச்சுக்கிட்டு இருந்தா! அதையும் அழுமூஞ்சித்தனமாக் கெடுத்துட்டு இப்பத் தடவி வேற கொடு.''

''உங்களுக்கென்ன தெரியும்? என் சுபா எப்பவுமே சிரிச்சுக்கிட்டே தான் இருப்பா. ஆனா இப்பக் கொஞ்ச

நாளா அவ சிரிப்பைப் பார்க்காம நான் ஏங்கிப்போய் இருந்தேன். அதான்..."

"அதனாலதான் அவளை அழுக வைத்தாயாக்கும்? நான் ஒண்ணு சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே?"

"அது நீங்க சொல்வதைப் பொறுத்துது..."

"கோபித்தாலும் பரவாயில்லை. நான் நினைப்பதைச் சொல்லி விடுகிறேன். நீ ஒரு செண்டிமெண்டல் ப்பூல் மிருணா. எமோஷன்ல எதை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு தெரியாம பண்ணிக்கிட்டு இருக்க" கூறிய முகுந்தனைக் கோபப்படாமல் அமைதியாகப் பார்த்தாள் மிருணாளினி.

"என்ன மிருணா? நான் சொன்னதைக் கேட்டுட்டு வானத்துக்கும் பூமிக்குமா குதிக்கப் போறன்னு பார்த்தா இப்படி என்னை ஏமாத்திட்டியே?"

"இதில் கோபிக்க என்ன இருக்கு? நீங்க இப்ப சொன்னதுக்கு ஓரளவிற்கு உண்மைதானே. எனக்கு விவரம் தெரிஞ்ச நாள் முதலாக நான் எனக்காக யோசித்தேன். அப்புறம் என் சுபாவிற்கும் சேர்த்து யோசிக்க ஆரம்பித்தேன். இப்ப எங்களோட வாழ்க்கை முழுவதிற்குமாக யோசிக்க ஆரம்பித்து விட்டேன். என் மூளையெல்லாம் யோசனையிலேயே கருகி கரைந்து விடுமோன்னு கொஞ்ச நாளா எனக்கு பயமா இருக்கு..." மறுபடியும் தனக்கு முன்னால் இருந்த சூனியத்தை வெறிக்க ஆரம்பித்தவளை விசித்திரமாகப் பார்த்தான் முகுந்தன்.

"இதென்ன மிருணா இப்படிச் சொல்ற? இப்ப கொஞ்ச நாள் முன்னால தானே அத்தையும் மாமாவும் ஆக்சிடெண்டில் இறந்தாங்க. அப்படிப் பார்க்கப் போனா அதுவரைக்கும் உன்னை பற்றியும் சுபாவைப் பற்றியும் அவங்கதானே அதிகமா யோசிச்சு இருப்பாங்க? ஒரு வேளை நீ அப்பாம்மா பேச்சைக் கேட்காம உன் பிடி வாதத்துக்கு நடந்துக்குவியோ?" சீரியஸாக ஆரம்பித்து கேலியாக முடித்தவனிற்கு பதிலைக் கூற விரும்பாமல் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் மிருணாளினி.



"ஏம்ப்பா முகுந்தா? இப்படி நடு வழியில காரை நிறுத்திட்டு கதை பேசிக்கிட்டே இருந்தா எப்ப நாம வீட்டுக்குப் போறது? பசியில் காதெல்லாம் அடைக்குதுப்பா" பேத்தியின் துணைக்கு வந்தாள் காளீஸ்வரி.

"இதோ பாட்டி. பத்தே நிமிசத்துல உங்களை வீட்டுல கொண்டு போய் சேர்க்கலைன்னா என் பேர் முகுந்தன் இல்ல" கூறிக்கொண்டே காரைக் கிளப்பினான் முகுந்தன்.

"சதாசிவம் எப்படிப்பா இருக்கான்? நான் இன்னிக்கு ஸ்டேசனுக்கு அவன்தான் வருவான்னு நினைச்சேன்."

"ஆமா பாட்டி. நானும் மாமா வருவாங்கன்னுதான் எதிர்பார்த்தேன். எதனால முகுந்தன் மாமா ஸ்டேசனுக்கு வராம உங்களை அனுப்பினாரு?" கேட்ட மிருணாளினியை எதுவும் கூறாமல் முறைத்த முகுந்தன் பாட்டியைத் திரும்பிப் பார்த்தான்.

"பாட்டி.. இது மும்பை போல அல்ட்ரா மாடர்ன் சிட்டி இல்ல.."

"இப்ப அதுக்கு என்ன? எங்களுக்குத்தான் அது தெரியுமே?" பாட்டிக்குப் பதிலாக பேத்தி கேட்டாள்.

''நான் பாட்டிகிட்ட சொல்லிட்டு இருக்கேன். நீங்க பதில் சொல்லுங்க பாட்டி... இது சிட்டி இல்லை தானே?''

''ஆமாய்யா. இல்லதான்.''

''இங்கயெல்லாம் வயசுக்கு மூத்தவங்களை பேர் சொல்லிக் கூப்பிடற பழக்கம் இங்க யாருக்காச்சும் இருக்கா?''

''மரியாதை தெரிஞ்சு யாருக்கும் இல்லைதான்.''

''அப்ப அந்த மரியாதையை உங்க பெரிய பேத்திக்கு நீங்க சொல்லித் தந்து வளர்க்கலையா? இப்படி வளர்க் கிறதுக்குத்தான் நீங்க சொந்த மகனையும் மண்ணையும் விட்டுவிட்டுப் போய் மும்பையிலேயே இருந்தீங் களாக்கும்?''

''இங்க பாருங்க... எங்க பாட்டி எங்களை எப்படி வளர்த் தாங்கன்னு நான் உங்களுக்குப் புரிய வைக்கணும்னு எந்த அவசியமும் இல்ல. ஆனா அவங்க வளர்ப்பைக் குறை சொல்லுற வேலை எல்லாம் வெச்சுக்காதீங்க... சொல் விட்டேன்...'' ஒற்றை விரல் நீட்டி எச்சரித்தவளை அலட்சியமாகப் பார்த்தான் முகுந்தன்.

''நான் குறை சொன்னதுக்கே இவ்வளவு ரோசம் வருதே.. நாளைக்கு இந்த ஊரே குறை சொன்னா என்ன செய்வதாய் உத்தேசம்..?'' கேட்ட அவனை கோபத் துடன் முறைத்துப் பார்த்தாள் மிருணாளினி.

சண்டைக் கோழியாய் முறைத்துக் கொண்ட பேரனை யும் பேத்தியையும் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள் காளீஸ்வரி.




''சரிப்பா முகுந்தா.. நான் என் பேத்திகளை சரியாத் தான் வளர்த்திருக்கேன்னு உன்கிட்ட நிரூபிக்க நாங்க இப்ப என்னதான் செய்யணும்னு சொல்ற? சொல்றதை நேராக சொல்லு.''

''இன்னமும் உங்களுக்கும் புரியலையா? இல்லை புரியாதது போல நடிக்கிறீங்களா? என்னமோ உங்க பேத்திதான் என்னைப் பெத்துப் பேர் வெச்சவ மாதிரி முகுந்தன்னு அழுத்தம் திருத்தமா கூப்பிடறா? ஒழுங்கா முறையாக் கூப்பிடச் சொல்லுங்க.''

கோபத்தில் கூறுபவன் போல் கூறினாலும் பேரனின் வார்த்தைகளில் கோபத்தைவிட ஆசையே அதிகமாக இருந்ததை கவனித்து உள்ளூரச் சிரித்துக் கொண்டாள் அவனது பாட்டி.

# 11



இருவரையும் புரியாமல் பார்த்துக் கொண்டு பாதிக் கோபமும் மீதி குழப்பமுமாகப் பார்த்தாள் மிருணாளினி.

''இப்ப உங்க பேரன் என்னதான் சொல்ல வர்றார் பாட்டி?'' உண்மையிலேயே புரியாமல் கேட்டவளை காதலுடன் பார்த்தான் முகுந்தன்.

''ம்ம்ம்... சுரைக்காய்க்கு உப்பு இல்லன்னு சொல்ல வர்றேன். உன்னையெல்லாம்...'' முகுந்தனின் வார்த்தை களைக் கேட்ட சுபா கலகலவென சத்தமாகச் சிரித்து விட்டாள்.

''ஏய்... என்னடி? நீயும் அவர் கூட சேர்ந்து கிட்டு என்னை டீஸ் பண்றியா?'' தங்கையின் சிரிப்பை ஆசையுடன் பார்த்துக் கொண்டே கேட்ட மிருணாளினியைப் பார்த்துத் தன் தலையில் அடித்துக் கொண்டாள் சுபாஷினி.

''நீ சரியான டியூப் லைட்டுக்கா. அவர் உன்னை... அவரை... மாமான்னு மரியாதையா கூப்பிடச் சொல்றாரு.''

''என்னது!''

''என்ன என்னது? இது ஒண்ணும் இவ்வளவு அதிர்ச்சியா ரியாக்ஷன் குடுக்க வேண்டிய மேட்டர் இல்லக்கா. ஏன் நான் அவங்களைப் பார்த்தவுடன் மாமான்னு கூப்பிடல. அதுதானே முறை? அப்புறம் மாமா பாட்டியைக் குறை சொல்லாம என்னதான் செய்வார்?''

''போடி கிழவி. என்னாலயெல்லாம் அப்படிக் கூப்பிட முடியாது...'' பிடிவாதக் குரலில் கூறிய மிருணாளினியைத் தீர்மானமாகப் பார்த்த முகுந்தன் காரை நிறுத்தி விட்டுத் திரும்பினான்.

''அப்ப என்னாலயும் காரை எடுக்க முடியாது பாட்டி. நீங்களும் உங்க ரெண்டு பேத்திகளும் ஆளுக்கொரு பெட்டியைத் தலையில் வெச்சுக்கிட்டு, மீதி இருக்கிறதை இருட்டில் தூக்கிக்கிட்டுப் பொடி நடையா மிஸ்டர். சதாசிவம் சார் வீட்டைக் கண்டுபிடிச்சுப் போய்க்கோங்க. என்னால இனிமேல் இந்தக் காரை ஒரு இன்ச் கூட நகர்த்த முடியாது'' கூறிவிட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்து விட்டான்.

கையாலாகாத கோபத்துடன் முகுந்தனை முறைத்து விட்டு காரைத் திறக்க கை வைத்தவளின் கை மேல் கை வைத்துத் தடுத்தாள் சுபாஷினி.



''இது ஒரு சின்ன விஷயம்க்கா? இதைப் போய் எதுக்காக இவ்வளவு பிராப்ளமா ஆக்கறக்கா? இப்ப என்னைப் பாரு. நான் எவ்வளவு கேஷுவலா மாமான்னு கூப்பிடறேன்? நீயும் அப்படிக் கூப்பிட்டு விட்டுப் போயேன்?''

''என்ன சுபாஷினி... உனக்கு என்னைவிட அவர் உயர்வாப் போயிட்டாரா? நான் சொல்வதெல்லாம் உனக்கும் தவறாத் தோணுதா?'' வெற்றுக் குரலில் கேட்ட தன் சகோதரியை அவசரமாகத் தடுத்தாள் சுபாஷினி.

''ஐய்யய்யோ... என்னக்கா இது? என்னைப் பார்த்து இவ்வளவு ஹார்சா நீ இதுவரை பேசினதே இல்லையே? இப்ப போய் இப்படி ஒரு கேள்வி கேக்கறியே? எனக்கு நீதான்க்கா என்றுமே முக்கியம். இப்ப என்ன? நாம ரெண்டு பேரும் நடந்ததே மாமா வீட்டுக்குப் போகலாம்னு சொல்றியா? வா போகலாம்.''

சகோதரிகள் இருவரையும் அதிசயமாகப் பார்த்தான் முகுந்தன்.

''ஹலோ ஹலோ... கொஞ்சம் நிறுத்தறீங்களா? எப்படி இப்படி ரெண்டு பேருமே லூசு மாதிரியே பேசறீங்க... சரி சரி.. முறைக்க வேணாம். விட்டு விடுங்க. இப்ப என்ன பாட்டி? உங்க பேத்தி என்னை மரியாதையா கூப்பிட மாட்டாளாமா? சரி போகட்டும் விடுங்க. ஆனா அவளா என்னைக்காவது என்னை மாமான்னு கூப்பிடுவா.. நீங்க அதை உங்க காதால கேட்பீங்க. இப்ப இந்தப் பிரச்சினையை இத்தோட விட்டு விடுவோம்.''

முகுந்தன் இலகுவாகப் பேச்சை முடித்துவிட சுபாஷினி பெருமூச்சுடன் அக்காவைப் பார்த்தாள்.

''உஸ்... அப்பாடா. ஒரு வழியா உங்க வீட்டுக்கு எங்களைக் கொண்டு போய் சேர்த்துருங்க மாமா. உங்களுக்குப் பெரிய புண்ணியமாப் போகும்.''

''சரிய்யா ராசா. உங்க பேச்சை விடுங்க. இப்ப என் மகன் ஏன் வரலைன்னு...'' பேச்சை ஆரம்பித்த காளீஸ்வரியின் வாயை பின் சீட்டில் இருந்து குனிந்து வாயைப் பொத்தித் தடுத்தாள் சுபாஷினி.

''அம்மா... தாயே.. உனக்குக் கோடி கும்பிடு போடறேன். ஒழுங்கா வீடு போய்ச் சேருகிற வரைக்கும் யாரும் வாயைத் திறந்து எதுவும் பேச வேணாம். எனக்குப் பசியால் மயக்கமே வருது. அதைவிட அர்ஜென்ட்டாய் பாத்ரூம் வருது. இன்னமும் யாராவது ஏதாவது அழிச்சாட்டியம் பண்ணினால் நான் கொலை பண்ணக்கூட தயங்க மாட்டேன். அது பாட்டியாவே இருந்தாலும்...'' ஒற்றை விரல் நீட்டி எச்சரிக்கை செய்த பேத்தியைப் பார்த்து வாய் மூடிக் கொண்டாள் காளீஸ்வரி.

''அப்பாவுக்குக் காய்ச்சல் பாட்டி. அதனாலதான் நான் வந்தேன்'' பாட்டியைப் புன்னகையுடன் பார்த்துக் கூறினான் முகுந்தன்.

''என்னய்யா ஆச்சு? சாதாரணக் காய்ச்சல் தானே? இப்பத்தான் ஏதோ விஷக் காய்ச்சல் எல்லாம் வருதே? அது போல எதுவும் இல்லையே?'' தன் எச்சரிக்கையையும் மீறி வாய் திறந்த பாட்டியை முறைத்தாள் சுபாஷினி.

''சரிடா கண்ணு. என்ன இருந்தாலும் என்னோட மகன் இல்லையாடி'' பார்வையால் கெஞ்சினாள் காளீஸ்வரி.



''போனாப் போகுது விடுங்க ஆனா தயவு செய்து சண்டை மட்டும் போட்டுடாதீங்க'' கையெடுத்துக் கும்பிட்டாள் சுபாஷினி.

''சரிடா கண்ணு. உன் பேச்சை மீறுவேனா?''

சிறிய பேத்தியும் பாட்டியும் வம்படித்துக் கொண்டு இருக்க தன் வாய் மூடி மௌனமாக அமர்ந்திருந்த மிருணாளினியைக் கண்ணாடி வழியாகப் பார்த்தான் முகுந்தன்.

'சரியான முசுடு. எப்படிச் சிரிக்காமல் முகத்தை உர்ரென்று வைத்திருக்கிறாள் பார்.'

'ஆனால் இப்பவே இவ்வளவு அழகா இருக்காளே இவ மட்டும் சிரிச்சான்னா எத்தனை அழகா இருப்பா.'

'ஆமாமாம். இந்த உம்மணா மூஞ்சி சிரிச்சுடக் கிரிச்சுடப் போறா.'

'ஒண்ணை மட்டும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். பாட்டி சொன்னது போல் இவள் மாசில்லாத ரத்தினம்தான்.

'அத்தை மகள் ரத்தினம்.' மனதிற்குள் பேசிச் சிரித்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்த முகுந்தனைத் தான் தானும் எண்ணிக் கொண்டே ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி.

தன்னையும் அறியாமல் தன் மனம் முகுந்தனை நாடுவதை மிகவும் வேதனையுடன் உணர்ந்தாள் மிருணாளினி. இது என்ன வகையான உணர்வு என்று பிரித்தறிய அவளால் முடியவில்லை.

'இப்படியொரு மாமன் மகன் இருப்பது தெரிந்து இருந்தால் இந்த ஊரில் வந்து செட்டில் ஆகும் எண்ணமே தனக்குத் தோன்றியிராதே' என்று தனக்குள் எண்ணிக் கொண்ட அவளைப் பார்த்து அவள் உள்ளம் சிரித்தது.

'உண்மைதானா? நீ வந்திருக்க மாட்டாயா?' தன் உள்ளம் கேட்ட கேள்விக்குப் பதில் கூறத் தெரியாமல் தன் கண்களைச் சோர்வுடன் மூடிக் கொண்டு இருக்கையில் சாய்ந்து அமர்ந்து விட்டாள் மிருணாளினி.

## 12



கண்மூடித் தன் உணர்வுகளுடன் போராடிக் கொண்டு இருந்த மிருணாளினி கார் ஒரு சிறு குலுக்கலுடன் நின்று விட்டதை உணர்ந்து மறுபடியும் என்ன பிரச்சனையோ என்ற அலுப்புடன் தன் கண்களைத் திறந்து பார்த்தாள். பார்த்தவளின் விழிகளில் சிறு வியப்பு தோன்றி மறைவதை ஏமாற்றத்துடன் பார்த்தான் முகுந்தன்.

ஊருக்குச் சற்று வெளியே மிகப்பெரிய மாளிகை போன்ற தோற்றத்துடன் தனது பங்களாவை வடிவமைத்துக் கட்டியிருந்தார் சதாசிவம். அவர்களது உறவினர் அனைவரும் தங்கள் மாளிகையைப் பார்த்தவுடன் சிறு ஆசையுடன் பார்வையிடுவதை ஒருவித



பெருமையோடு கவனிப்பான் முகுந்தன். ஆனால் தன் மனம் கவர்ந்த மிருணாளினி அவ்விதமாகத் தன் வீட்டினைப் பார்க்காவிட்டாலும் ஒரு ஆராய்ச்சியாகக் கூட அந்த வீட்டைப் பார்க்காதது அவனுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது.

''என்ன பாட்டி? உங்க பேத்திக்கு எங்களோட இந்த சின்ன வீட்டைப் பிடித்திருக்கிறதா?'' குத்தலாகக் கேட்ட அவனை நிமிர்ந்து பார்த்தாள் மிருணாளினி.

''வீடு பெரிய மாளிகையாக இருக்க வேண்டியது இல்லை முகுந்தன். எனக்குத் தேவை அந்த வீட்டில் உள்ள மனிதர்களின் பரந்த உள்ளம்தான். அந்த வகையில் என் மாமாவின் அன்பு உள்ளம் மிகப் பெரியதுதான். அதனால் அவர் வீடு ஒரு குடிசையாக இருந்தால்கூட எனக்கு மிகவும் பிடிக்கும்.''

''அப்போ எங்க வீட்டை உனக்குப் பிடிச்சிருக்கு?'' இது ஆனந்தத்துடன் கேட்டவனை நேராகப் பார்த்தாள் மிருணாளினி.

''என் மாமாவின் வீடு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

அழுத்தமாகக் கூறிவிட்டு டிக்கியில் இருந்த தங்களது பெட்டிகளைத் தூக்கிக் கொள்ளக் குனிந்தாள் மிருணாளினி.

அவளது கைகளைப் பிடித்து நிறுத்திய முகுந்தனின் கைகளைக் கோபத்துடன் உதறிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள் மிருணாளினி.

''என்ன இது முகுந்தன்?'' கோபத்துடன் சீறிய அவளை சாதாரணமாகப் பார்த்த அவன் திரும்பி

அங்கிருந்த இரண்டு பணியாட்களைப் பார்வையால் அழைத்தான்.

அவனது பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட அவர்கள் பெட்டிகளை இலகுவாகத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் சென்றனர்.

"இதற்காகத்தான் தடுத்தேன். ஆனால் ஏன் என்னை இப்படி எதிரிக்காரன்போல் நடத்தற? நான் உன் மாமாவின்..."

"தேங்க்ஸ்" அவனது வார்த்தைகளை இடைமறித்து அழுத்தமாக நன்றி சொல்லிவிட்டு வேகமாக வீட்டுக்குள் சென்ற அவளது முதுகையே வெறித்தபடி நின்று விட்டான் முகுந்தன்.

'என்ன ஆணவம்!' கோபத்தால் உள்ளம் குமுற நின்றிருந்த பேரனை தன் கைகளால் அவன் தோள் தொட்டு அணைத்துக் கொண்டாள் காளீஸ்வரி.

"கோபப்படாதே ராசா. என் பேத்திக்கு இப்படி அடுத்தவர் மனம் நோக நடக்கத் தெரியாது. நான் அவளை அப்படி வளர்க்கலை. ஆனா அவ இதயத்தில் விழுந்த பெரும் அதிர்ச்சியால தன் குணமே மறந்து போய் இப்படியெல்லாம் நடந்துக்கிறா. கொஞ்ச நாள் அவகாசம் கொடு சாமி. என் பேத்தியோட உண்மையான குணம் அப்புறம்தான் உனக்குப் புரியும். அதுவரைக்கும் இந்தப் பாட்டிக்காக அவளோட இந்தக் குணத்தையும் கொஞ்சம் பொறுத்துக்க ராசா. இந்தச் சூழ்நிலையில நாமளே அவளுக்கு ஆறுதலா இல்லேன்னா அவ என்ன செய்வா?" பேத்தி சென்ற திசை பார்த்துக் கண்கள்



கலங்கக் கூறிய பாட்டியைப் புன்னகையுடன் பார்த்தான் முகுந்தன்.

"அவ இந்தக் குணத்தை மாற்றிக் கொண்டாலும் சரி. மாறாமல் இப்படியே இருந்தாலும் சரி பாட்டி, நான் உங்களுக்கு வாக்குக் கொடுத்தது போல் என்னிக்கும் அவளுக்குத் துணையா இருப்பேன் பாட்டி. கவலைப் படாதீங்க" அவளுக்கு ஆறுதலாக கூறிக்கொண்டே காளீஸ்வரியின் கரம் பற்றி அழைத்துச் சென்றான் முகுந்தன்.

வேகமாக வீட்டிற்குள் நுழைந்த மிருணாளினியின் நெஞ்சம் கோபத்தில் கொந்தளித்தது. தான் விலகிச் செல்லச் செல்ல தன்னிடம் உரிமையுடன் நெருங்கி வரும் முகுந்தனை எண்ணித் தடுமாறிக் கொண்டிருந்த அவளை நோக்கிப் பாசத்துடன் கைவிரித்து வேகமாக வந்த நடுத்தர வயதுப் பெண்மணியைத் திகைப்புடன் பார்த்தாள் மிருணாளினி.

"வாடா கண்ணு. என் ராசாத்தி. உன்னை எப்படி யெப்படியோ இந்த வீட்டுக்குள்ள வரவேற்கணும்னு நானும் உங்க மாமாவும் கற்பனைக் கோட்டை கட்டி வெச்சிருந்தோம். ஆனா..." மேற்கொண்டு பேச முடியாமல் கண்ணீருடன் விம்மிக் கொண்டே அவளை அணைத்துக் கொண்டாள் அந்தப் பெண்மணி.

என்னவென்று சொல்லத் தெரியாத பாசத்தோடு அவளது தோளில் தலை சாய்த்து பெரும் கேவலுடன் அழுக ஆரம்பித்த மிருணாளினியை முதுகில் தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்த முயன்றாள் அவள்.

"சாந்தி. நான் அவ்வளவு தூரம் சொல்லியிருந்தும் நீ இப்படி நடக்கலாமா? அதுவே எத்தனையோ துயரத்தோட நம்மளை நம்பி வந்திருக்கு. அதோட மனக் காயத்தை நாம ஆத்தி விடணுமே ஒழிய மேல மேல கீறிவிடக் கூடாது" கண்டிப்புடன் கூறிக் கொண்டே வந்த சதாசிவத்தைப் பார்த்து தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மிருணாளினி.

"பரவாயில்லை மாமா. நான்தான் அவங்களோட பாசத்தால கொஞ்சம் எமோசன் ஆகிட்டேன்" புன்னகைக்க முயன்று முடியாத மிருணாளினியை துயரத்துடன் பார்த்தார் சதாசிவம்.

"அதுக்கென்னம்மா. உன் அத்தையோட பாசம் உனக்கு ஆறுதலா இருந்தா எனக்குச் சந்தோசம்தான்டா. வா இப்படி வந்து உட்காரு" மிருணாளினியை அழைத்துச் சென்று சோபாவில் அமர்த்தித் தானும் அருகில் அமர்ந்து கொண்டார் சதாசிவம்.

"சாந்தி..." அழுகையும் கண்ணீருமாகத் தன் கைகளைப் பிடித்துக் கொண்ட மாமியாரைக் கண்ணீருடன் அணைத்துக் கொண்டாள் சாந்தி.

"அழாதீங்க அத்தை. நாம கொடுத்து வெச்சது அவ்வளவுதான். என்ன செய்யுறது? அந்த ஆண்டவன் விதிச்ச விதியை நாம மாத்த முடியுமா? அழுகாதீங்க அத்தை. பாருங்க. உங்க அழுகையைப் பார்த்து இந்தப் பச்சைப் புள்ள எப்படிக் கண்கலங்குதுன்னு" மாமியாரிடம் கூறிக் கொண்டே தன் மறு கையினால் சுபாஷினியை இழுத்து கன்னத்தில் முத்தமிட்டாள் சாந்தி.



அவளது அன்பினை உணர்ந்து மிகுந்த சொந்தத்துடன் சாந்தியை அணைத்தபடி நின்று கொண்டாள் சுபாஷினி.

## 13



சுபாஷினிக்குப் பிறந்தது முதல் அவளுக்கான அத்தனை சொந்தமாகவும் இருந்தவள் மிருணாளினி மட்டும்தான் மிருணாளினிக்காவது முதல் குழந்தை என்ற சலுகை ஷோபனாவிடம் உண்டு. ஆனால் சுபா, ஷோபனா வேண்டாம் என்று எண்ணியும் காலத்தின் கட்டாயத்தால் பிறந்தவள் என்று ஷோபனாவிற்கு மனதிற்குள் சிறு வருத்தம் இருந்ததோ என்னவோ, அவளுக்கு சுபா என்றுமே இரண்டாம் பட்சம்தான்.

எனவே அன்னையிடம் கிட்டாத பாசத்தையும் சேர்த்து அவளுக்குத் தரவேண்டியது மிருணாளினியின் கடமையாகியது. அவள் என்றுமே அதில் குறை வைத்ததும் கிடையாது. ஆனால் தன் அன்னையை ஒத்த பெண்மணி தன்னிடம் பாசத்துடன் கை நீட்டி அழைத்தவுடன் சுபாஷினிக்கு தானாகத் தன் அன்னையின் முகம் நினைவிற்கு வந்துவிட்டது. தன்னைப் பாசத்துடன் அணைத்துக் கொள்ளா விட்டாலும் அன்னை என்பவள் ஒவ்வொரு குழந்தைக்கும் மிக முக்கியமான தேவையான உறவுதானே. எனவே தன் அன்னையைத் தனக்கு நினைவிற்குக் கொண்டு வந்த

பார்த்ததும் சாந்தியின் முகம் சுபாவிற்கு மிகவும் பிடித்துப் போனது. அவள் சொந்தத்துடன் சாந்தியின் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.

சாந்திக்கோ பெண்ணில்லாத குறையைத் தீர்க்க வந்த பெண்ணாகவே சுபாஷினியைப் பற்றி எண்ணம் தோன்றியது. மேலும் தாயில்லாத குழந்தை என்ற வாஞ்சையும் சேர்ந்து கொள்ள அவள் கூடுதலான அன்புடன் சுபாஷினியை அணைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரையும் அவ்வாறு இணைத்துப் பார்க்கும்பொழுது மனதிற்குள் மெல்லிய சந்தோஷமும் பெரும் நிம்மதியும் பரவுவதை மிருணாளினி உணர்ந்தாள். அவள் தன் கண்களில் படர்ந்த கண்ணீரை மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக் கொண்டு தன் அருகில் அமர்ந்திருந்த சதா சிவத்தை ஏறிட்டாள்.

''என்ன மாமா காய்ச்சலா? இப்ப எப்படி இருக்கு? நான் நைட் போன் பண்ணினப்பக்கூட நீங்க ஒண்ணும் சொல்லலியே?'' கவலையுடன் கேட்ட தங்கை மகளைப் பார்த்தார் சதாசிவம்.

''நேத்து ஈவினிங்ல இருந்தே கொஞ்சம் காய்ச்ச லாத்தான் இருந்ததும்மா. மாத்திரை போட்டா சரியா கிடும்னு நினைச்சேன். ஆனா... நைட்டில் ரொம்ப முடியாமல் போயிடுச்சு. அப்புறம்தான் முகுந்தனுக்குப் போன் பண்ணி உங்களைப் பிக்கப் பண்ணிக்கச் சொன்னேன்.''

''போன் பண்ணிச் சொன்னீங்கன்னா.. அப்ப அவர் இங்க இல்லியா?'' எல்லையற்ற நிம்மதியுடன் கேட்ட வளைப் புரியாமல் பார்த்தான் முகுந்தன்.



''ஏன் நான் இங்க இருந்தால் உன்னைக் கடிச்சுத் தின்னுருவேனா? ரொம்ப நிம்மதியாக் கேட்குற மாதிரி இருக்கே?'' முறைப்புடன் கேட்டான் முகுந்தன்.

''ஏங்க... உங்க வீட்டில் நீங்க இருக்கிறதுல எனக்கு என்ன கஷ்டம். மாமா சொன்னதற்குத்தான் நான் கேட்டேன்.''

''நான் நேத்து பிரெண்டைப் பார்க்கப் போயிருந்தேன். லேட் ஆகிட்டதால பழனியில் இருக்கும் நம்மளோட வீட்டில் நைட் தங்கிட்டேன். அதைத்தான் அப்பா சொன்னார்'' அழுத்தமாகக் கூறியவனின் குரலில் திகைத்தாள் மிருணாளினி.

'நம்மளோட வீடா! இவன் வீடு எப்படி நம்ம வீடாகும். அது சரி. இவன் எதுக்காக தனியா நைட்டில அங்க போய் தங்கணும். சம்திங் ராங்' தனக்குள் கூறிக் கொண்ட மிருணாளினியை அழைத்தது சாந்தியின் குரல்.

''மிருணா... அம்மா மிருணாளினி. நீயும் சுபாவும் போய் குளிச்சிட்டு வாங்கம்மா. சாப்பிட்டு விட்டு அப்புறம் போய் ரெஸ்ட் எடுத்துக்கலாம். முனியா பாப்பா வுங்களுக்கு அவங்க ரூமைக் காட்டிவிட்டு, வேற ஏதாச்சும் வேலை இருந்தால் போய்ப் பாரு'' தன் கட்டளைக்காகக் காத்திருந்த வேலைக்காரனைப் பார்த்துக் கூறிய சாந்தி மிருணாளினியைப் பார்த்துப் பாசத்துடன் தலையசைத்தாள்.

தங்களுக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்த மிருணாளினியும், சுபாஷினியும் உடல் அயர்வுடன்

அங்கிருந்த சோபாவில் அமர்ந்து இயல்பான ஆவலுடன் பார்வையை அறையைச் சுற்றிச் சுழல விட்டனர்.

முன்புறம் சிறிய வரவேற்பறையும், அதைத் தாண்டி பெரிய பெட்ரூமும், அதற்கு வலப்புறத்தில் உடை மாற்றும் அறையுடன் கூடிய அட்டாச்டு பாத்ரூம் வசதியுடன் ஸ்டார் ஹோட்டலின் சூட் போன்ற தோற்றத்துடன் ஆடம்பரமற்ற அமைதியான அழகுடன் இருந்தது அந்த அறை. அறையில் இருந்த பொருட்கள் அனைத்திலும் மின்னிய கலையம்சம் மிக்க வேலைப் பாடுகள் அறையை உருவாக்கியவரின் ரசனையைப் பறைசாட்டியது.

''பரவாயில்லக்கா. இந்த ஊரிலும் இவ்வளவு அழகாகக் கட்டி இருக்காங்களே!'' இயல்பான குழந்தைத் தனத்துடன் கூறிய தங்கையைப் பார்வையால் கண்டித் தாள் மிருணாளினி.

''உஸ்..! என்ன இது சுபா. இன்னமும் நீ அந்த ஆடம் பரத்தையும் அழகையும் விரும்பறியா?''

''இல்லக்கா. நான் அப்படிச் சொல்ல வரல. நான் இந்த ரூம் அழகா இருக்குன்னுதான் சொன்னேன்.''

''ரூம் எப்படி இருந்தாலும் நாம் இங்கதான் தங்கணும் சுபா. வசதி கூடக் குறைவா இருந்தாலும் இந்தச் சொந் தங்களின் நடுவில இருப்பதுதான் நமக்குப் பாதுகாப்பு. அதற்காக உனக்கு மனதிற்குப் பிடிக்காத இடத்தில நாம் தங்கி இருக்கணும்னு நான் சொல்ல மாட்டேன். உனக்குப் பிடிக்கலைன்னா நீ தாராளமாய் சொல்ல லாம்.''



''பிடிக்கலைன்னா சொல்றதா? நான் பிடிச்சிருக் குன்னு சொன்னதுக்குத்தான் நீ இப்படி லெக்சர் அடிச் சுக்கிட்டு இருக்க...'' முகத்தைத் திரும்பிக் கொண்டாள் சுபாஷினி.

''நான் அதுக்காகச் சொல்லலைடி. இனிமேல் நாம எங்க இருந்தாலும் வசதியா இருக்கணும்னு நீ நினைக்கக் கூடாது. அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். மத்தபடி இந்த ரூம் ரொம்ப நல்லா இருக்கு'' கூறிய மிருணாளினியைப் பார்த்து முகம் சுளித்தாள் சுபா.

''போக்கா. வர வர நீ ரொம்ப போரடிக்கிற. இப்படி செய்யக் கூடாது. அப்படி இருக்கக் கூடாதுன்னு ரொம்பக் கண்டிஷன் போட்டுக்கிட்டு இருக்க. நான் என்ன மத்த பொண்ணுங்க மாதிரி உன் சொல் பேச்சுக் கேட்காமலா இருக்கறேன். அப்படி இருந்தும் எதுக் காக இத்தனை கண்டிஷன்?'' எரிச்சலுடன் கூறிவிட்டு பாத்ரூமிற்குள் நுழைந்த தங்கையின் வார்த்தைகளை கேட்டு அதிர்ச்சியுடன் அமர்ந்து விட்டாள் மிருணாளினி.

சுபாஷினி கூறியதில் இருந்த உண்மை அவளைச் சுட்டது. மிக சிறு வயதில் இருந்து ஆடம்பர மோகத் தைக் கண்டு மகள் வெறுக்கும் அளவிற்கு இருந்த அன்னையைப் பார்த்தே வளர்ந்ததால் தனக்கு இருக்கும் குணம் சுபாஷினிக்கும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்று மிருணாளினிக்கே நன்றாகப் புரிந்தது. ஆனால் சூடு பட்ட பூனையின் நிலையில் இருக்கும் தங்களது வாழ்க்கையை தன் தங்கைக்கு எப்படியாவது புரிய வைத்து விடும் தவிப்பில்

இருந்தாள் மிருணாளினி. சுபாஷினி எப்படியும் தன்னுடைய வார்த்தைகளின் பொருளையும் அர்த்தத்தையும் என்றாவது உணர்ந்து கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் தங்களது உடைகளை அங்கிருந்த அலமாரிகளில் அடுக்க ஆரம்பித்தாள் மிருணாளினி.

# 14



"கண்ணு. மிருணா. குளிச்சிட்டியா இல்லையா?" கேட்டுக் கொண்டே அறைக்குள் நுழைந்த காளீஸ்வரியின் முகம் சோர்ந்து அமர்ந்திருந்த பேத்தியின் முகத்தைப் பார்த்தவுடன் திகைத்தது.

"என்னடா மிருணா? எதுக்காக இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்க? எவ்வளவோ துன்பமான நேரத்திலும் கூட நீ சோர்ந்து நின்னு நான் பார்த்ததில்லையே? என்னடா ஆச்சு?" பேத்தியை ஆதரவாகக் கேட்டுக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தாள் காளீஸ்வரி.

"ஒண்ணும் இல்ல பாட்டி. சும்மா ஏதோ ஒரு யோசனையில் உட்கார்ந்துட்டேன். அவ்வளவுதான்."

"ஏன்டா மிருணா, பாட்டி உனக்கு அன்னியமாப் போயிட்டேனா? உன் முகம் பார்த்தே உன் மனசைப் புரிஞ்சுக்குவா உன்னோட பாட்டி, என் பேத்தியைப் பத்தி எனக்குத் தெரியாதா?"



"இல்ல பாட்டி. நீங்களும் சேர்ந்து பெரிய பேச்செல்லாம் பேசி என்னை நோகடிக்காதீங்க. ப்ளீஸ்" சோர்வுடன் கூறினாள் மிருணாளினி.

"நீங்களும்னா... அப்ப வேற யாராச்சும் உன் மனசு நோகுற மாதிரி ஏதாவது பேசினாங்களா. யாருன்னு சொல்லு. அவங்களை என்ன என்று கேட்கலேன்னா என் பேரை மாத்தி வெச்சுக்கிறேன். சொல்லுடா மிருணா..." வீரத்துடன் கூறிக் கொண்டே போன காளீஸ்வரியை புன்சிரிப்புடன் பார்த்தாள் மிருணாளினி.

"வேற யாரும் ஒண்ணும் சொல்லலை பாட்டி. உங்க பேத்தி சுபாதான் பேசிட்டுப் போறா" கூறிவிட்டுப் பாட்டியின் முகம் பார்த்தவள் வாய்விட்டுச் சிரித்து விட்டாள்.

சுபாவின் பெயரைக் கேட்டவுடன் கைகளால் வாயைப் பொத்திக் கொண்டு அமர்ந்து விட்டாள் காளீஸ்வரி.

"என்ன பாட்டி? வீர வசனமெல்லாம் பேசினீங்க? இப்ப இப்படி உட்கார்ந்திட்டீங்க?"

"என்னடா செய்யுறது? உன் தங்கச்சியைத் திட்டினால் உனக்குக் கோபம் பொத்துக்கிட்டு வந்துரும். அவளோ முகத்தை ஒரு முழம் தூக்கி வெச்சுக்கிட்டு இன்னும் ஒரு மாசத்துக்கு என் கூடப் பேசவே மாட்டேன்னு சொல்லிடுவா. இந்த வம்பு எனக்குத் தேவையா? அதான் இப்படி உட்கார்ந்திட்டேன்" அமைதியாகக் கூறினாள் காளீஸ்வரி.

"பாட்டி.. பாட்டி! என் சமர்த்துப் பாட்டி. எப்படி எங்களை கரெக்டாப் புரிஞ்சு வெச்சிருக்கீங்க. சரி.. ஒரே

நிமிசத்துல நான் குளிச்சிட்டு வந்திடுறேன். ஓகே வா'' தன்னுடைய டிரெஸ்ஸை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் ஓடிய மிருணாளினியை பார்த்த காளீஸ்வரியின் முகம் மென்மையாக மாறியது.

''வாட் காளீஸ்வரி? எங்க அக்காவைப் பார்த்து கண்ணு வைக்கிற மாதிரித் தெரியுது?'' வானத்து நீலக் கலரில் ஸ்கர்ட்டும் வெண்ணிற சட்டையுமாகப் பாட்டியின் முன் வந்து நின்ற சுபாவைப் பார்த்து முறைத்தாள் காளீஸ்வரி.

''என்ன வாய் ரொம்பத்தான் ஓவராப் போகுது. என்னமோ நீதான் எனக்குப் பேர் வெச்சவளாட்டம் இவ்வளவு தெனாவெட்டாக் கூப்புடுற?'' பேத்தியின் காதைத் திருகினாள் பாட்டி.

''ஸ்ஸ்ஸ்.. வலிக்குது பாட்டி. ஆமா.. உங்க பேத்தி ஏதோ கம்ப்ளையிண்ட் பண்ணின மாதிரி தெரியுது?''

''என் பேத்திக்கு யாரையும் குறை சொல்லிப் பழக்கமே இல்லை. அதுக்கு எல்லோரையும் ஆதரிச்சுத் தான் பழக்கம் கண்ணு.''

''எல்லோரையும் ஆதரிக்கிற அக்கா முகுந்தன் - மாமாவைப் பார்த்தால் மட்டும் ஏன் பாட்டி எரிஞ்சு எரிஞ்சு விழறாங்க?'' கேட்ட பேத்தியைப் புரியாமல் பார்த்தாள் காளீஸ்வரி.

''அப்படியா! எனக்கு அதுபோல ஒண்ணும் தோணலியே கண்ணு. அப்படியெல்லாம் மிருணா பேச மாட்டாளே..?''

''அப்புறம் எதுக்காக அவ்வளவு விரக்தியா கோபமாப் பேசினாங்களாம். எல்லாத்தையும் தெரிஞ்சு வெச்சுக்



கிட்டே ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்காதீங்க பாட்டி. எனக்கும் கொஞ்சம் விவரம் புரியும்.''

''சுபாக் கண்ணு!''

''ஆமாம் பாட்டி. நான் புரிஞ்சுதான் பேசறேன். அக்கா யாரையும் இவ்வளவு ஹார்ஷா பேச மாட்டாங்க. புடிச்சிருந்தா நல்லாப் பேசுவாங்க. இல்லேன்னா பேச்சை நிறுத்திக்குவாங்க. ஆனா மாமாகிட்ட மட்டும் வார்த்தைக்கு வார்த்தை ஆர்க்கியூ பண்ணிக்கிட்டே இருந்தாங்களே. கவனிச்சீங்கதானே?''

பேத்தியின் கேள்விக்குக் காளீஸ்வரி பதிலேதும் கூறவில்லை. அவளது உள்ளமும் அதை அறிந்தே இருந்தது.

''நீங்க பதில் சொல்ல மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும் பாட்டி. ஆனா என்னால அப்படியெல்லாம் இருக்க முடியாது. அதான் வாய் திறந்து பேசிட்டேன்'' பேசிக் கொண்டு இருந்த சுபாஷினி பாத்ரூம் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டு வாய் மூடிக் கொண்டாள்.

லைட் பிங்கில் அடர்ந்த ஊதாப் பூக்கள் சிறிதும் பெரிதுமாக மலர்ந்திருக்க அதன் ஊடாக சிவப்பு வண்ணம் சிறிய பொட்டுக்கள் வைத்த சாரியும் அதே சிவப்பு வண்ணத்தில் பிளவுசும் அணிந்து கொண்டு, தலை குளித்த முடியைத் தளர்வாக விட்டு நுனியில் சிறு கொண்டையிட்டுக் கொண்டு முகத்தைத் துடைத்தவாறு வந்த மிருணாளினி கண்ணாடியைப் பார்த்து, தன் கைப்பையில் இருந்த மிகச்சிறிய கருப்பு வண்ணப் பொட்டை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

எந்தவித ஒப்பனையும் இல்லாமலேயே பேரழகியாகத் தெரிந்த தன்னுடைய அக்காவை என்றும்போல் அன்றும் பெருமையாகப் பார்த்தாள் சுபாஷினி. தனக்காக தன் அக்கா அவளது வாழ்வையே தியாகம் செய்து கொண்டு இருப்பது சுபாஷினியின் மனதில் பெரும் வேதனையை உண்டாக்கியது.

''சாப்பிடப் போகலாமா சுபா? அப்பவே ரொம்பப் பசிக்குதுன்னு சொன்னியே?'' காற்றில் பறந்த முடியை கைகளால் ஒதுக்கிக் கொண்டே கேட்டாள் மிருணாளினி.

''போகலாம்க்கா. உனக்காகத்தான் வெயிட்டிங்'' கூறிக் கொண்டே எழுந்த தங்கையை ஆழமான குரலில் அழைத்தாள் மிருணாளினி.

''சுபா...''

''என்னக்கா?'' புரியாமல் பார்த்த தங்கையின் பிஞ்சு முகம் மிருணாளினியின் மனதைப் பிசைந்தது.

''வெளியில் அத்தை, மாமா எல்லார் கிட்டயும் கொஞ்சம் மரியாதையாப் பேசணும் சுபா. உன்னோட குணத்தை அவங்க புரிஞ்சுக்கிற வரை நீ ரொம்பப் பொறுமையாக இருக்கணும்.''

''சரிக்கா. இதையெல்லாம் நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா. நான் எல்லார்கிட்டயும் மரியாதையாத் தானே எப்பவும் நடந்துக்குவேன்?''


''இருந்தாலும்...''

''நீ கவலைப்பட வேணாம்க்கா. நான் நம்மோட நிலைமையை நன்றாகப் புரிந்துதான் இருக்கேன். அதற்காக இல்லாவிட்டாலும், நம்ம அத்தையையும்



மாமாவையும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அவங்க மனசு நோகும்படியா நான் பேசவும், நடக்கவும் மாட்டேன். அதைவிட முகுந்தன் மாமாவை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்குது. அதனால் நான் ரொம்ப நல்ல பிள்ளையாவே இருப்பேன். போதுமா?'' முகுந்தனின் பெயரைக் கேட்டதும் கன்னங்களில் செம்மை பரவ நின்றிருந்த அக்காவின் நிலையை அறியாதவள் போல் அவள் கரம் பற்றி இழுத்துக் கொண்டு வெளியேறினாள் சுபாஷினி.

## 15



''வாங்கடா கண்ணுகளா. உங்களுக்காகத்தான் மாமாவும் சாப்பிடாமக் காத்திருக்கார். வாங்க வாங்க'' அதுவரை பார்த்தேயிராத நாத்தனாரின் மகள்களை அன்னையின் அன்புடன் அழைத்த சாந்தியின் தோளைக் கட்டிக் கொண்டாள் சுபாஷினி.

''ஸோ நைஸ் டு யூ அத்தை. ஐ லைக் யூ வெரி மச்.''

''நானும் தான் உன்னை லைக் பண்றேன் கண்ணு. உன்னையும்தான் மிருணா'' தன்னைக் கட்டிக் கொண்ட சுபாவின் கைகளைப் பிடித்தபடியே கூறினாள் சாந்தி.

''நானும்தான் லைக் பண்றேன் சுபா. அப்படியே உன்னையும் தான் மிருணாளினி'' சுபாவிடம் கூறிக் கொண்டே ஆசையுடன் மிருணாளினியைப் பார்த்தான் முகுந்தன்.

அவனது வார்த்தைகளைக் காதில் வாங்காதவள் போல சாந்தியைப் பார்த்துப் புன்னகைத்தபடி டைனிங் டேபிளில் அமர்ந்தாள் மிருணாளினி. தனக்கு நேர் எதிரில் அமர்ந்தவாறு ஆழமாகப் பார்த்த முகுந்தன் அதற்கு மேல் எதுவும் கூறாமல் அவள் முன் பிளேட்டை எடுத்து வைத்தான்.

''நான் மாமா பக்கதில்தான் உட்காருவேன்'' செல்லமாகக் கூறிக் கொண்டே முகுந்தனின் அருகில் அமர்ந்து தனக்கும் ஒரு பிளேட்டை எடுத்துக் கொண் டாள் சுபாஷினி.

''நீயாவது என்கூட உட்கார ஆசைப்படுறியே. இது போதும் எனக்கு...'' மிருணாளினியைப் பார்த்துக் கொண்டே கேலிபோலக் கூறிய முகுந்தனை ஒரு நொடி நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள் மிருணாளினி.

''பேசிக்கிட்டே இருக்கியே சாந்தி. பிள்ளைகளுக்கு என்ன வேணும்னு கேட்டு வையி. பாவம் மும்பையில் இருந்து கிளம்பினதில் இருந்து சரியா சாப்பிடாம இருப்பாங்க'' தன் மனைவியை விரட்டிய சதாசிவத்தை துன்பத்துடன் பார்த்தாள் காளீஸ்வரி.

''மும்பையில் இருந்து கிளம்பியதில் இருந்தில்லை சதா. என் மக போனதில் இருந்தே இதுக ரெண்டும் சரியாச் சாப்பிட்டு நான் பார்க்கலை. அதுவும் மிரு ணாளினி ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிட்டாலே அதிகம். அத்தனை வேலைகளையும் ஆம்பிளைப் பிள்ளை மாதிரி தனியா நின்று பார்த்ததுல அதுக்கு



உட்கார்ந்து சாப்பிடக்கூட நேரம் இல்லை'' கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள் காளீஸ்வரி.

சாப்பாட்டை எடுத்து வாயில் வைக்கப் போன கை அப்படியே நின்றுவிட தன் முன் அமர்ந்திருந்தவளை வேதனையுடன் பார்த்தான் முகுந்தன்.

''ஏன் மிருணா? எதற்காக அப்படித் தனியாளாய் இருந்து கஷ்டப்பட்டாய்? ஒரு போன் பண்ணி இருந்தால் நாங்க ஓடி வந்திருப்போமே? எங்க நினைவே உனக்கு வரலியா?'' தாங்க முடியாத வேதனையுடன் ஒலித்த முகுந்தனின் குரலைக் கேட்ட மிருணாளினி யின் கண்ணில் இருந்து சொட்டுச் சொட்டாக கண்ணீர் அவள் முன் இருந்த தட்டில் விழ தலைகுனிந்து அமர்ந் திருந்தாள் மிருணாளினி.

''மிருணா...!'' கையில் இருந்த சாப்பாட்டை அப்ப டியே தன் தட்டில் போட்டுவிட்டு அமர்ந்து விட்டான் முகுந்தன்.

''என்னம்மா மிருணாளினி. என் தங்கை மகளோட தைரியத்தைப் பத்தி நான் பெருமையா நினைச்சுக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா இப்படிக் கோழை மாதிரி கண்ணீர் விடறியே. கண்ணைத் துடைச்சுக்கிட்டு சாப்பிடும்மா'' தங்கை மகளின் தலையை அன்புடன் கோதி விட்டார் சதாசிவம்.

''இல்ல மாமா. உயிரைக் குடுக்கக் கூட தயாரா இத்தனை பாசத்தோட சொந்தங்கள் இங்கிருக்க, எங் கம்மா எதைத் தேடி தேசம் விட்டு தேசம் எங்க அப்பாகூட பறந்துகிட்டு இருந்தாங்க. அப்படிப் பறந்து

பறந்து சம்பாதிச்சதெல்லாம் எதை மாமா? அச்சடித்த பேப்பரையா. அந்த அச்சடித்த பேப்பரை கோடி கோடியா கொட்டிக் கொடுத்தாலும் எங்கம்மா அமைதியா வாழ வேண்டிய வாழ்க்கையை அவங்களுக்குக் கொடுக்க லியே. பின் எதற்காக அப்படி வாழ்ந்தாங்க? அந்த வாழ்க் கையில் அவங்களுக்குக் கிடைச்சது என்ன மாமா?'' தவியாய்த் தவித்தவளை அள்ளி அணைத்து ஆறுதல் கூற முடியாத நிலையை நொந்து கொண்டவனாய் அமர்ந்திருந்தான் முகுந்தன்.

''ஒரு பொண்ணுக்கு வேற என்னம்மா வேணும்? கணவரோட அன்புதானே. அதை முழுமையா அனு பவிச்சாம்மா என் தங்கச்சி. அவரை விட்டுப் பிரியாம வாழ்ந்தா, அதே போல அவரை விட்டுப் பிரியாமலே போய்ச் சேர்ந்துட்டா. இதைவிட புண்ணியம் என்னம்மா இருக்கு?'' தங்கையின் நினைவு தந்த பாசத்துடன் கூறிய சதாசிவத்தைக் கசப்புடன் பார்த்தாள் மிருணாளினி.

''பாசம்... புண்ணியம். இந்த வாழ்க்கை தான் புண் ணியம்னா எனக்கு அப்படியொரு வாழ்க்கையே வேண் டாம் மாமா. என்னைப் பொறுத்தவரை தன் கடமைகளை சரிவர நிறைவேற்றி வாழ்வதுதான் மாமா புண்ணியம். அப்படி வாழாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையே இல்லை'' இதை எதற்காக மிருணாளினி தன்னைப் பார்த்துக் கொண்டே சொல்கிறாள் என்று புரியாமல் பார்த்தான் முகுந்தன்.

''இருக்கட்டும்மா. எதுவுமே ஒவ்வொருத்தரோட பார்வையையும் அணுகுமுறையையும் பொறுத்தது.



என்னோட தங்கையின் அணுகுமுறை அது. அது வாழ்வை அது நிறைவா வாழ்ந்துட்டுப் போயிருச்சு. உன் பார்வை எப்படியோ, அப்படியே உன் வாழ்க்கையை நீ அமைச்சுக்க. அதுக்கு இந்த மாமா என்னிக்கும் உனக்குத் துணையா இருப்பேன். வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காம இப்ப சாப்பிடு'' அன்புடன் கூறிய சதா சிவத்தின் வார்த்தைகளைக் கேட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள் மிரு ணாளினி.

''அப்புறம் மிருணா. இன்னொன்னையும் கேட்டுக்க. இந்த மாமனும் உனக்குத் துணையாக இருப்பேன். இதையும் ஞாபகம் வெச்சுக்க'' சிரிக்காமல் சொன்ன முகுந்தனைப் பார்த்த சுபாஷினி வாய்விட்டுச் சிரித்தாள்.

''பயங்கரமான டைமிங் சென்ஸ் மாமா உங்களுக்கு. இப்படி போட்டுத் தாக்கறீங்களே'' சிரித்துச் சிரித்து புரையேறிய அவளுக்கு தண்ணீர் டம்ளரை எடுத்துக் கையில் கொடுத்தான் முகுந்தன்.

''முகுந்தா. பேசாமல் சாப்பிடு முதல்ல. அப்ப தான் மத்தவங்க நிம்மதியாச் சாப்பிட முடியும்'' மகனைப் பெருமையுடன் கண்டித்த சாந்தி தன் கண்களால் அவனுக்கு மிருணாளினியைச் சுட்டிக் காட்ட அமைதியுடன் சாப்பிட ஆரம்பித்தான் முகுந்தன்.

''சாப்பாடு ரொம்ப டேஸ்டா இருக்கு அத்தை. யார் சமைத்தது? நீங்களா?'' வியப்புடன் கேட்ட மிரு ணாளினி கேள்வியால் புரையேறிய தலையைத் தட்டிக் கொண்டான் முகுந்தன்.

"அம்மா ஸாரி. உங்க பேச்சைக் கேட்காமல் நான் பேச வேண்டியது இருக்கு. இப்படித் திடீர்னு ஷாக் கொடுக் காத மிருளா" கூறிக் கொண்டே சிரித்த முகுந்தனை புரியாமல் பார்த்தாள் மிருணாளினி.

"என்ன ஷாக் கொடுத்தேன்?"

"டேஸ்ட்டான சாப்பாட்டை எங்க அம்மா சமைச் சாங்கன்னு சொல்ற. சமையல்கார வள்ளியக்கா மட்டும் இதை கேட்டாங்கன்னு வெச்சுக்க. நாளையில் இருந்து சாம்பார் சுடுதண்ணியா மாறிடும். ஜாக்கிரதை. இன் னொண்ணையும் தெரிஞ்சுக்க. உங்க அத்தை சமையல்ல கொஞ்சம் வீக். அதனால வள்ளியக்காவை ஐஸ் வெச்சுக்க பழகிக்க..." சுடச்சுட தோசைகளைக் கொண்டு வந்து தட்டி வைத்துக் கொண்டிருந்த வள்ளி முகுந்தனின் வார்த்தைகளைக் கேட்டு வெட்கத்துடன் சிரித்தாள்.

"சூடாக நெய் தோசை கொண்டு வரட்டுமா தம்பி" அவள் அக்கறையுடன் முகுந்தனைக் கேட்க, அவன் தன்னைப் பார்த்துக் கண்ணடித்ததில் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள் சுபாஷினி.

## 16



பெற்றோர் இறந்ததில் இருந்து சுபாஷினி சிரித்து ஒரு நாளும் பார்த்ததில்லை மிருணாளினி. இன்று



காலையில் இருந்து சிரித்துக் கொண்டே இருந்த தங்கையின் முகத்தைப் பரிவுடன் பார்த்தாள் மிருணாளினி.

"போதும் சுபா. சாப்பிடு" அக்கறையுடன் கூறிய அவளைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினான் முகுந்தன்.

"நீங்க முதலில் சாப்பிடுற வழியைப் பாருங்க. நாங்க சாப்பிட்டுக் கொள்வோம்" கூறிய முகுந்தனின் கையை உயர்த்தி தன் இடது கரத்தால் தட்டினாள் சுபா.

"வெல் செட் மாமா. கரெக்டாச் சொன்னீங்க" கேலியுடன் தன்னைப் பார்த்த சுபாவை முறைத்து விட்டு எழுந்து சென்ற மிருணாளினியைத் தொடர்ந்து எழுந்து சென்றான் முகுந்தன்.

தன் கையைக் கழுவிவிட்டுத் திரும்பிய மிருணாளினி அறியாமல் முகுந்தனின் மேல் மோதிக் கொண்டவள் நிமிர்ந்து அவனை முறைத்தாள்.

"கொஞ்சம் தள்ளி நிக்கலாம் இல்ல?" கேட்ட அவளை இன்னும் நெருங்கி நின்றான் முகுந்தன்.

"இவ்வளவு தள்ளி நின்றால் போதுமா?" நக்கலாகக் கேட்டான் முகுந்தன்.

"ம்ம்ம்..?" அவன் மார்பில் கை வைத்துத் தன்னை விட்டுத் தள்ளி நிற்கும்படி செய்தாள் மிருணாளினி.

"இப்படித் தள்ளி நிக்கணும்" கண்டிப்புடன் கூறினாள் மிருணாளினி.

"சரி சரி. டெய்லி இப்படியே எப்படித் தள்ளி நிக்கணும்னு எனக்குச் சொல்லிக் கொடு" அப்பாவியாய்

முகத்தை வைத்துக் கொண்டு கூறியவனின் குரலில் அவன் மார்பில் வைத்திருந்த தன் கையை அவசரமாக எடுத்தாள் மிருணாளினி.

''என்ன மிருணா இது. இப்பத்தான சொல்லிக் குடுன்னு சொன்னேன். அதுக்குள்ள கையை எடுத்துட்ட'' சலுகையாகக்'' கேட்டவனின் குரலில் முகம் சிவந்தாள் மிருணாளினி.

''ஆமா. இவர் ஒண்ணும் தெரியாத பாப்பா. நாங்க இவருக்குச் சொல்லிக் குடுக்கணும்'' சிவந்த அவளது முகத்தை கிறக்கமாகப் பார்த்தான் முகுந்தன்.

''இப்படிச் சொன்னால் எப்படி மிருணா. உன்னைப் பொறுத்தவரை நான் ஒண்ணும் தெரியாத பாப்பா தான்'' அவனது முகத்தை அதற்கு மேல் பார்க்க தைரியம் இல்லாமல் தன் அறைக்கு விரைந்தாள் மிருணாளினி.

அறைக்குள் நுழைந்து கதவடைத்து விட்டுக் கட்டிலில் சரிந்தவளின் கண்கள் மயக்கத்தில் தானாக மூடிக் கொண்டது. மூடிய கண்களுக்குள் முகுந்தனின் முகம் பிரேம், பிரேமாக போட்டோ சுருளைப் போல் ஓடத் துவங்கியது. தனக்குள் அவற்றைப் பார்த்து ரசித்துக் கொண்டே படுத்திருந்தவள் அப்படியே தன்னை அறியாமல் உறங்கி விட்டாள். சிறிது நேரம் சென்று அறைக்குள் வந்த சுபாஷினி உறங்கும் அக்காவின் மேல் மெதுவாகக் கைபோட்டு அவளது உறக்கத்தைக் கலைக்காமல் அருகே படுத்துத் தானும் உறங்கத் தொடங்கினாள்.



இருவரையும் தேடி வந்த காளீஸ்வரி பேத்திகள் இருவரும் நிம்மதியாகத் தூங்குவதை அறிந்து மெதுவாகக் கதவடைத்து விட்டுச் சென்று விட்டாள்.

மாலை மயங்கி இருள் சூழும் வேளையில் கண் விழித்த மிருணாளினிக்கு ஒரு நிமிடம் தான் எங்கு இருக்கிறோம் என்பதே தெரியவில்லை. நன்றாகக் கண்களை திறந்து பார்த்த அவள் வெளியே இருட்டத் தொடங்கி விட்டதை அறிந்து அவசரமாக எழ முயன்றாள். தன் மேல் கை போட்டு அணைத்துக் கொண்டு உறங்கிய சுபாஷினியின் கைகள் அதனை அனுமதிக்காததால் சிரிப்புடன் திரும்பித் தங்கையின் தோள்களைப் பிடித்து உலுக்கி அவளை எழச் செய்தாள் மிருணாளினி.

''குட்மார்னிங் அக்கா'' கூறிக் கொண்டே எழுந்து அமர்ந்தவளின் தலையில் செல்லமாகக் குட்டினாள் மிருணாளினி.

''குட்மார்னிங் இல்ல மக்கு. குட் ஈவ்னிங்'' கூறிய அக்காவின் குரலில் திகைத்தாள் சுபாஷினி.

''ஈவினிங்கா? அவ்வளவு நேரமா தூங்கினேன்?''

''மறுபடியும் தப்பாச் சொல்ற சுபா. அவ்வளவு நேரம் தான் தூங்கியிருக்கோம்.''

''நீயும் இப்பத்தான் எழுந்தியா?''

''ஆமாமாம். டிரெயினில் சுத்தமாத் தூங்கலியா. அதான் நல்லாத் தூங்கிட்டேன். வந்த முதல் நாளே இப்படி நேரம் காலம் பார்க்காமல் தூங்கினால் அத்தை

தப்பா நினைக்க மாட்டாங்களா? இந்தப் பாட்டியாவது நம்மை எழுப்பியிருக்கலாம் இல்ல? சரி சரி. சீக்கிரம் முகம் கழுவிக்கிட்டு வா. போய் அத்தை கிட்ட சாரி கேட்கணும்'' பரபரப்புடன் கூறிய மிருணாளினியை கையமர்த்தித் தடுத்தாள் சுபா.

''ரிலாக்ஸ் அக்கா. இப்ப என்ன ஆகிருச்சுன்னு இவ்வளவு கவலைப்படுற. அத்தைக்கும் நம்மைப் பத்தி நல்லாத் தெரியும்னு நினைக்கிறேன். அதனால அவங்க தப்பா நினைக்க மாட்டாங்க. நீ அமைதியா இரு.''

''இல்ல சுபா. எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு. நீ சீக்கிரம் வா...''

''இதோ ஒரே நிமிசம். வந்துடறேன்'' சொன்னபடி வந்த சுபாவை அழைத்துக் கொண்டு வேகமாக வெளியே வந்த மிருணாளினியை புன்சிரிப்புடன் பார்த்தாள் சாந்தி.

''மெதுவா.. எதுக்காக இப்படி அவசரமா ஓடி வர்ற... என்னாச்சு?'' கேட்ட சாந்தியைத் தயக்கத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

''மிருணாவை என்னம்மா சொல்ற? அவ ஏன் இப்படிப் பயந்துபோய் பார்க்கிறா?'' மிருணாளினியையும் தாயையும் புரியாமல் பார்த்துக் கொண்டே அருகில் வந்தான் முகுந்தன்.

''டேய்... நான் என்னடா சொல்லப் போறேன்? தூங்கி எந்திரிச்சு இப்படி வந்து நிக்கிறா'' சிரித்துக் கொண்டே கூறினாள் சாந்தி.



''இல்லத்தை நான்.. வந்து.. ரொம்ப டயர்டா இருந்ததா... அதான் நேரம் போனது தெரியாம தூங்கிட்டேன்'' மெல்லிய குரலில் கூறிய மிருணாளினியைப் பார்த்த சாந்தி புருவம் தூக்கி மகனைத் திரும்பிப் பார்த்தாள்.

''நீ என்ன லூசா மிருணாளினி?'' கோபத்துடன் பல்லைக் கடித்தான் முகுந்தன். அவனது கோபத்திற்கான காரணம் புரியாமல் திகைத்தாள் மிருணாளினி.

''இப்ப எதுக்காக இப்படிக் கோபப்படுறீங்க?''

''பின்ன கோபப்படாம? நம்ம வீட்டில் கொஞ்ச நேரம் தூங்கி எந்திரிச்சதுக்குப் போய் இப்படிப் பயந்து சாகிற? அப்ப இதை உங்க வீடா நீ நினைக்கல. அப்படித்தானே? அந்த நினைப்பை உனக்குத் தராமப் போனதுக்கு நாங்கதான் உன்கிட்டே சாரி சொல்லணும்.''

''அய்யய்யோ. அப்படியெல்லாம் நான் நினைக்கலை. அத்தை என்னைப் பத்தி தப்பா நினைச்சுக்கப் போறாங்களேன்னு கவலையா இருந்தது. அதான்'' மெல்லிய குரலில் வந்த மிருணாளினியின் வார்த்தைகள் மயிலிறகாய் முகுந்தனின் இதயம் தடவியது.

''அப்போ அத்தை உன்னை தப்பா நினைக்கக் கூடாது. அதானே உன்னோட கவலை?''

''ஆமாம்...'' கேட்ட அவனைப் புரியாமல் பார்த்தாள் மிருணாளினி.

''அவங்களோட மகனை மரியாதை இல்லாமல் கூப்பிட்டால் கூடத்தான் உங்க அத்தை தப்பாக

நினைப்பாங்க. அதைப்பத்தி உனக்குக் கவலை இல்லையா?" கேட்டவனை முறைத்தாள் மிருணாளினி.

# 17



ஏஸியின் மெல்லிய ரீங்கார ஒலியே உரத்துக் கேட்பதைப் போல் இருந்தது மிருணாளினிக்கு. அருகில் நிம்மதியான முகத்துடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சுபாஷினி தன் காலைத் தூக்கி அக்காவின் மேல் போட்டுக் கொண்டு மீண்டும் உறங்கத் தொடங்கினாள். அவளது குழந்தைத் தனம் நிறைந்த நிர்மலமான முகத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி.

எண்ணற்ற எண்ணங்கள் உள்ளத்தில் அலை மோத இந்த ஒரே நாளில் ஓராயிரம் உணர்ச்சிகள் தன்னுடைய மனதினை அலைக்கழித்துக் கொண்டிருப்பதை அலுப்புடன் உணர்ந்தாள் மிருணாளினி. பெற்றோர் இருந்தும் இல்லாமல் இருந்த சூழ்நிலையிலும், பெற்றோரை இழந்த நிராதரவான சூழலிலும்கூட மனம் தடுமாறாமல் நிதானத்துடன் இருந்த தன் உள்ளம் இன்று ஏன் இவ்வளவு சஞ்சலப்படுகிறது என்பதை மிருணாளினியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்னை தந்தையிடம் காணாத அன்பையும் பாசத்தையும் தன் அத்தை மாமாவிடம் கண்ட ஆனந்தத்தால்



இப்படி தன் உள்ளம் தடுமாறுகிறதோ என்று எண்ணிய மிருணாளினியின் உள்ளம் இந்த அன்பும் பாசமும் மாறாமல் அப்படியே நிலைத்து இருக்கச் செய்யும்படி அந்த ஆண்டவனை மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டது. ஆனால் அதெல்லாம் நடைமுறைக்கு சாத்தியம் இல்லை என்பதை அவளுடைய அறிவு அவளுக்கு உணர்த்தத்தான் செய்தது.

இளம் பெண்களான மிருணாளினியும், சுபாவும் வெகு நாட்களுக்கு சதாசிவத்தின் இல்லத்தில் தங்குவது என்பது சாத்தியமில்லாத ஒன்றுதான் என்பதை மிருணாளினி வேதனையுடன் எண்ணிக் கொண்டாள். ஆனால் பிறந்ததில் இருந்தே தமிழ்நாட்டிற்கு வந்தே இராத தங்களுக்கு இந்த ஊரும், பழக்க வழக்கங்களும் சூழ்நிலையும் பழகும்வரை அவர்கள் இருவரும் சதாசிவத்தின் வீட்டில் தங்கித்தான் ஆகவேண்டும் என்று உறுதியுடன் எண்ணிக் கொண்டாள் மிருணாளினி. ஆனால் எத்தனைதான் உறுதியான முடிவுகளை உள்ளம் எடுத்தாலும் கண்கள் உறக்கம் வராமல் தவிக்க படுக்கையில் இருந்து எழுந்து சத்தமில்லாமல் அந்த அறையில் ஒரு ஓரத்தில் இருந்த பால்கனியின் கதவினைத் திறந்து கொண்டு மெல்ல வெளியே வந்தாள்.

முழு நிலவின் ஒளியால் விளக்கு வெளிச்சம் கூட இல்லாமல் தோட்டம் மிகவும் ரம்மியமாகத் தோற்றம் அளித்தது. தோட்டத்தில் இருந்த பல்வேறு மலர்களின் வாசனை கலந்த குளிர்ந்த காற்றினை ஆழமாக உள்ளிழுத்துக் கொண்டே சுவற்றில் சாய்ந்து சரிந்து

தரையில் அமர்ந்து கொண்டாள் மிருணாளினி. மெல்லிய குளிர்ந்த காற்றின் தழுவலால் மனதின் பாரம் மெல்லக் குறைவதை உணர்ந்த மிருணாளினி அமைதியாக அங்கேயே அமர்ந்து விட்டாள்.

நாளை முதல் தான் செய்ய வேண்டிய வேலைகளை மனதிற்குள் பட்டியல் இட்டவாறு அமர்ந்திருந்தவள் தோட்டத்தில் கேட்ட அழுத்தமான காலடி ஓசைகளைக் கேட்டுத் திகைத்துக் கண்களை வேகமாகத் தோட்டத்தினை நோக்கித் திருப்பியவள் அதிர்ச்சியில் சிலையாக நின்று விட்டாள்.

வெறிகொண்டவனைப் போல் தோட்டத்தினைச் சுற்றிச் சுற்றி வேகமாக நடந்து கொண்டே இருந்த முகுந்தனைப் பார்த்தவுடன் முதலில் மிருணாளினியின் மனதில் பய உணர்ச்சிதான் தோன்றியது. பயத்துடன் சுற்றுட் முற்றும் பார்த்துவிட்டு அருகில் இருந்த தூணின் மறைவில் நின்று கொண்டு முகுந்தனைப் பார்வையால் தொடர்ந்தாள் அவள். யாரையும் கவனத்தில் கொள்ளாமல் தன் மனம்போல் தோட்டத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்த முகுந்தனின் பார்வை மட்டும் அடிக்கடித் தாங்கள் தங்கியிருந்த அறையைப் பார்ப்பதை படபடக்கும் நெஞ்சத்தோடு பார்த்த மிருணாளினி மெதுவாக நகர்ந்து தன் அறைக்குள் நுழைந்து கதவினை அடைத்துவிட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

அப்படியிருந்தும் மனதின் பயம் குறையாமல் இருக்க, மீண்டும் மெதுவாக எழுந்து பால்கனிக்குச் செல்லாமல் தன் அறையில் இருந்த ஜன்னலின் கதவினை லேசாகத் திறந்து தோட்டத்தைப் பார்த்தாள். சரியாக அதே நேரத்தில் தோட்டத்தைச் சுற்றி நடந்து கொண்டிருந்த முகுந்தனும் அந்த ஜன்னலைப் பார்த்துவிட அவனது நடை சட்டென்று நின்று விட்டது. அந்த ஜன்னலின் வழியாக வந்த அவனது பார்வை தனது நெஞ்சத்தை ஊடுருவிப் பாய்வதை உணர்ந்த மிருணாளினி உடனே கதவினை அடைத்துவிட்டு வந்து படுக்கையில் அமர்ந்து விட்டாள். தோட்டத்தில் நின்றிருந்த முகுந்தனின் முகம் ஏமாற்றத்தால் சுருங்குவதை இங்கிருந்தபடியே மிருணாளினியால் உணர முடிந்தது. அதற்கு மேலும் உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்தவள் தன்னை அறியாமல் விடியற் காலையில் ஆழ்ந்து உறங்கி விட்டாள்.



தோட்டத்தில் நின்றிருக்கும் முகுந்தன் தன்னை நோக்கி கைநீட்ட அவனது கரத்தைப் பிடித்துக் கொள்ளும் ஆவலோடு தன் கைகளை நீட்டி அவனது கரங்களைப் பற்றிக் கொண்டாள் மிருணாளினி. ஆனால் முகுந்தன் அவளது கரத்தினைப் பற்றாமல் தோள்களைத் தொட்டு உலுக்கக் காரணம் புரியாமல் திடுக்கிட்டு விழித்தாள் மிருணாளினி.

எதிரே நின்றிருந்த காளீஸ்வரியின் கண்கள் பயத்துடன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து மிருணாளினி வேகமாக படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்து கொண்டாள்.

''என்னடா மிருளா. எதுக்காக என் கையை அப்படிப் பிடிச்சு இழுத்த? என் தோள்பட்டையே கழன்று விடும் போல வலிக்குது பாரு'' ஒரு கையால் மறு கையின்

தோள் பட்டையைப் பிடித்தவாறு கேட்ட பாட்டியின் முகம் பார்க்க முடியாமல் வெட்கம் தோன்றியது மிருணாளினிக்கு.

"ஏதோ கனவு கண்டுக்கிட்டிருந்தேன் பாட்டி. அந்த சமயத்தில் நீங்க எழுப்பவும் பயத்தில் உங்க கையைப் பிடிச்சுக்கிட்டேன் போல" தயக்கத்துடன் கூறிய பேத்தியின் அருகில் அமர்ந்தாள் காளீஸ்வரி.

"அப்படியா கண்ணு. நான் கூட கொஞ்சம் பயந்துதான் போயிட்டேன். ஏதாச்சும் கெட்ட கனவா மிருணா" கேட்ட பாட்டியை யோசனையுடன் பார்த்தாள் மிருணாளினி.

"நல்ல கனவா கெட்ட கனவான்னு புரியல பாட்டி. மனசுக்கு என்னவோ போல இருக்கு" கூறிக் கொண்டே தன் மடியில் தலை வைத்துப் பத்துக் கொண்ட பேத்தியைக் குழப்பத்துடன் பார்த்தாள் காளீஸ்வரி.

அமைதியாக பேத்தியின் தலையைத் தடவிக் கொண்டே அமர்ந்திருந்த காளீஸ்வரியைப் பார்த்தவாறே அறைக்குள் காபிக் கோப்பையுடன் உள்ளே வந்த வள்ளியின் கண்கள் வியப்பில் விரிந்தது.

"அம்மா.. பெரியம்மா.. இப்ப எதுக்காகம்மா காலங்காத்தால இப்படி உட்கார்ந்திருக்கீங்க? அம்மாடி மிருணாக்கண்ணு இப்படிப் பச்சைப் புள்ளையாட்டம் பாட்டி மடியில் படுத்திருந்தால் எப்படிம்மா? உன்னை நம்பி உடன் தங்கச்சி ஒண்ணு இருக்கு இல்ல. நீதான் உன்னையும் பார்த்துக்கிட்டு உன் தங்கச்சியையும் கரை சேர்க்கணும். அதுக்கான தைரியத்தை நீதான் உனக்குள்ள



வளர்த்துக்கணும் கண்ணு. படிக்காத தற்குறி எனக்குத் தெரிஞ்சது எம்புட்டோ புடிச்சிருக்க உனக்குத் தெரிய வேண்டாமா? சட்டுப் புட்டுன்னு எழுந்து இந்தக் காபியைக் குடிச்சிட்டு மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பாரு மிருணாக் கண்ணு" தன்னுடைய மன சாட்சியாகக் கண் முன் நின்று கூறிய வள்ளியைப் பார்த்துத் தெளிவான மனத்துடன் எழுந்து அமர்ந்தாள் மிருணாளினி.

# 18



அன்று மலர்ந்த ரோஜாவாய் தன் முன் வந்து அமர்ந்தவளை ஆசையுடன் வருடியது முகுந்தனின் பார்வை. அவனது பார்வையை உணர்ந்தும் தன் தலை உயர்த்தி அவனைப் பார்க்காமல் தலை குனிந்து அமர்ந்திருந்த மிருணாளினியைப் பார்த்ததும் முந்தைய நாள் இரவில் அவள் ஜன்னலை அடைத்து விட்டுச் சென்றது ஏனோ முகுந்தனின் நினைவில் தோன்றியது.

முகுந்தனின் சிறுவயதில் இருந்தே தனக்காக ஒரு அத்தை மகள் மும்பையில் வளர்ந்து கொண்டு இருக்கிறாள் என்ற எண்ணத்தை அவனது மனதில் உருவாக்கியது சதாசிவம் தான். ஆனால் அவள் வளர வளர தன் தங்கையின் வீட்டுப் பொருளாதாரமும் மிகவும் வளர்ந்துவிட அந்தப் பேச்சைத் தொடராமல் அப்படியே

நிறுத்தி விட்டார் சதாசிவம். தன்னுடைய தங்கையும் அவளுடைய கணவரும் கொண்டிருந்த டாம்பீக குணம் கூட அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் சின்னஞ்சிறு வயதில் அவள் உள்ளத்தில் போட்ட விதை வளர்ந்து விருட்சமாக வளர்ந்திருக்கும் என்பதை சதாசிவம் அறியாமல் விட்டு விட்டார். அவர் தனது மனத்தை மாற்றிக் கொண்டது போல் முகுந்தனால் தனது மனத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு முறை சதாசிவம் மும்பை சென்று வரும்போதும் மிகவும் ஆவலுடன் தந்தையின் அருகில் அமர்ந்து அவர் தன் தாயாரிடம் சொல்லும் செய்திகளைக் கேட்டுக் கொண்டே அமர்ந்திருப்பான் முகுந்தன். என்ன காரணத்தினாலோ சதாசிவம் தன் தங்கை குடும்பத்தின் அப்போதைய புகைப்படத்தை மறக்காமல் தன்னுடன் வாங்கி வரும் பழக்கத்தை வைத்திருந்தார். ஒருவேளை தன்னுடைய காலத்திற்குப் பிறகு தன் தங்கையின் சந்ததிகள் அடையாளம் அற்றவர்களாய் ஆகிவிடக் கூடாது என்பதற்காக தன் மகனுக்கும் மனைவிக்கும் அவர்களது முகங்களை பரிச்சயம் செய்வதற்காகக் கூட அவர் அவ்வாறு செய்திருக்கலாம்.

அப்போதெல்லாம் அந்தப் புகைப்படத்தை மிகவும் ஆவலாக வாங்கிப் பார்த்து அதில் இருக்கும் முகங்களைத் தன்னுள் பதிய வைத்துக் கொள்வான் முகுந்தன். சதாசிவமும் அதை ஊக்குவிப்பவர் போல விகல்பமில்லாமல் தன் தங்கையின் குடும்ப உறுப்பினர்களை மகனுக்கு புகைப்படத்தில் அடையாளம் காண்பிப்பார். ஆனால் அனைவரின் முகங்களையும் அடையாளம் வைத்துக் கொள்ளும் முகுந்தனின் உள்ளம்



மிருணாளினியின் உருவத்தை மட்டும் தன் உள்ளத்தில் செதுக்கிக் கொள்ளும். அதன் பின்னர் சதாசிவம் அந்தப் புகைப்படத்தினை தன் ஆல்பத்தில் வைத்து விட்டாலும் அவன் மிருணாளினியின் உருவத்தைத் தன் மனக கண்களால் கோடி முறை பார்த்து விடுவான்.

பருவ வயதினை அடைந்தவுடன் தன் தந்தை சொல்லாமலே தன் அத்தையின் குடும்பப் பொருளாதார நிலையை அறிந்து கொண்டு விட்டான் முகுந்தன். சதாசிவம் பொருளாதாரத்தில் வசதியில் பின் தங்கியவர் இல்லை என்றாலும் மிருணாளினியின் தந்தைக்கும் அவனது தந்தைக்கும் இடையில் இருந்த இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் இருப்பதைப் போல் உணர்ந்தான் முகுந்தன். தன் அன்பு பணம் அந்தஸ்து என அனைத்தையும் விட உயர்ந்தது என்றாலும் தன் மனைவியை அவள் பெற்றோரை விட உயர்வாக வாழ வைக்க வேண்டும் என்ற வெறி தோன்றியது முகுந்தனுக்கு.

அந்த வைராக்கியத்தை மனதில் கொண்டே அவன் படிப்பை முடித்தவுடன் தந்தையின் தொழில்களைக் கவனிக்க எண்ணாமல் தன் நண்பனுடன் இணைந்து கம்ப்யூட்டர் கம்பெனியை ஆரம்பித்தான் முகுந்தன். அவன் ஆரம்பித்த நேரத்தில் புதுப்புது வேலைகளின் தேவைகள் அதிகரிக்க அவன் எண்ணியதைவிட அளவிற்கு அதிகமாகவே குறுகிய காலத்தில் அவனது கம்பெனி முன்னேறிவிட்டது. அதன் பலனாக நண்பனை விட்டுப் பிரிந்து தனியாகக் கம்பெனி ஆரம்பித்து நடத்தத் தொடங்கினான் முகுந்தன். தன் தந்தை

சதாசிவத்தின் பெயரைச் சுருக்கி அவன் ஆரம்பித்த, ''எஸ்.எஸ். சொல்யூசன்ஸ்'' இன்று தமிழ்நாட்டின் பெரிய நகரங்களில் மட்டும் அல்லாமல் இந்தியாவிற்குள்ளும் ஓரளவிற்குப் பெயர் பெற்ற கம்பெனியாக உருவெடுத்து இருந்தது.

தனது கம்பெனியின் கிளைகள் பல இருந்தும், முகுந்தன் தன் சொந்த ஊரிலேயே பெற்றோருடன் வசிப்பதையே விரும்பி, அவனுடைய கம்பெனியின் தலைமை அலுவலகத்தை தனது ஊரான பாளையத்திலேயே அமைத்துக் கொண்டான். மாதத்தில் பாதி நாட்கள் தனது கிளை நிறுவனங்களைச் சென்று கண்காணித்து வந்தவன் பல மல்ட்டி நேஷனல் கம்பெனிகளின் ஆர்டர்களையும் வாங்கி வெற்றிகரமாக முடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் காரணமாக தன் அத்தையின் அந்தஸ்திற்கு குறையாத அந்தஸ்துடன் தன் தந்தையை உயர்த்தி விட்டான் முகுந்தன்.

இதுவரை அவன் மிருணாளினியின் வீட்டிற்குத்தான் செல்லவில்லையே தவிர மாதத்தில் ஒரு முறை தன் அலுவலக வேலை காரணமாக மும்பை வரும் அவன் தொலைவில் இருந்து மிருணாளினியைப் பார்க்காமல் தன் ஊர் திரும்பமாட்டான். தன் அத்தை மகளை தனக்குத்தான் அடையாளம் தெரியும். தன்னை அவளுக்குத் தெரியாது என்பதே பெரிய அனுகூலமான விசயமாக இருந்ததால் அவன் தன் மனம் கவர்ந்தவளை அவளறியாமல் பார்ப்பது மிகவும் சுலபமாக இருந்தது முகுந்தனுக்கு.



மிகச் சில அரிதான நேரங்களில் அவன் மிருணாளினியைத் தன் செல்போனில் படம் பிடித்துக் கொண்டதும் உண்டு. அந்தப் படங்களை எல்லாம் பிரிண்ட் போட்டு தன் தனி ஆல்பமாக அவனுடைய அலமாரியில் லாக்கரில் பொக்கிஷம் போல் பாதுகாத்துக் கொண்டிருந்தான் முகுந்தன்.

சமீப காலமாகத் தன் மகன் முகுந்தன் தன் தங்கை மகளைப் பற்றி அதிகமாகப் பேசுவதைக் கவனித்த சதாசிவம் முகுந்தன் மிருணாளினியை விரும்புவதை உணர்ந்து கொள்ள ஆரம்பித்தார். ஒரு நல்ல நாளில் மனைவியுடன் மும்பைக்குச் சென்று தன் தங்கையிடம் பேச எண்ணியிருந்த போதுதான் அந்தச் செய்தி இடியாக வந்து அவர் மனதைத் தாக்கியது. சதாசிவத்தின் தங்கையும் அவள் கணவரும் ஒரு விபத்தில் இறந்துவிட்டதாகவும் அவர்களது இறுதிக் காரியங்கள் அதன் காரணமாக விரைவில் நடந்து முடிந்து விட்டதாகவும் வந்த செய்தியைக் கேட்டு மனம் கலங்கிவிட்டார் சதாசிவம். தன் ஒரே தங்கையை அவள் முகத்தைக் கூடப் பார்க்காமல் பறி கொடுத்து விட்டதை அவரது இதயம் ஏற்றுக் கொள்ளாமல், மாரடைப்பு வந்து ஹாஸ்பிடலில் சேர்க்கப்பட்டார் சதாசிவம்.

தன் உயிரானவள் பெற்றோரை இழந்து அங்கே நிர்கதியாய் நின்று கொண்டிருக்க, இங்கோ தனக்கு உயிர் கொடுத்த தந்தையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்க தவித்துப் போனான் முகுந்தன். சரி போனிலாவது பேசி மிருணாளினிக்கு ஆறுதலாகப் பேசலாம் என்றால் தன் உயிர்க் காதலியுடன் இத்தனை வேதனையான

தருணத்தில் முதன்முதலில் பேச அவன் மனம் விரும்பவில்லை. ஒரு வழியாக சதாசிவம் தன் உடல் நிலை தேறி வந்தவுடன் அவரை பிளைட்டில் ஏற்றி அனுப்பி வைத்தான் முகுந்தன். அவனுடைய கம்பெனியின் அவசர வேலை காரணமாக அவன் வெளிநாடு செல்லும் பொருட்டு அதற்கான பயணத் தேதி முன் கூட்டியே உறுதி செய்யப்பட்ட காரணத்தால் தந்தையுடன் செல்வதற்கு முடியாமல் அவரைத் தனித்து மும்பைக்கு அனுப்பி வைத்தான் முகுந்தன். மும்பையில் இருந்து திரும்பித் தந்தை கூறிய செய்திகள் அவனை ஆனந்தத்தில் மிதக்கச் செய்தது. தன் அத்தையின் சொத்துக்கள் அனைத்தும் கரைந்துவிட்டதை எண்ணிக் கலங்கவில்லை அவன். அதைப் போல் மூன்று மடங்கு சொத்துக்களுடன் மிருணாளினியை மகாராணியாக வாழ வைக்கும் தைரியமும் துணிவும் இருந்தது அவனுக்கு. அதனால் அவன் மிருணாளினிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை எண்ணி மனம் கலங்காமல் அவள் தன் வீட்டிற்கே வந்து சேரப்போகும் நாட்களை எண்ணத் தொடங்கினான் முகுந்தன்.

## 19



துயரமும் வேதனையும் நிறைந்த முகத்துடன், தன் கண்களில் நிறைந்திருந்த பயத்துடன் போனைக்



கையில் பிடித்துக் கொண்டு நின்றிருந்த மிருணாளினியை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் முகுந்தன். அவள் அன்று வரப்போவதை முன்கூட்டியே தந்தையின் வாயிலாக அறிந்து கொண்டவன் அதற்காகவே முதல் நாளில் இருந்தே பழனியில் தங்கி விட்டான் அவன்.

ஆனால் தன்னுடைய குரலைக் கூட அறிமுகம் இல்லாதவனாக மிருணாளினி பேசியதைக் கேட்டவுடனேயே அவனது மனதில் பொங்கிய உணர்வுகள் அனைத்தும் அடங்கி விட ஏமாற்றம் அவனது மனம் முழுவதும் வேதனையுடன் பரவியது. எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும் தன் முகம் காட்டாமல் தனது சொந்தத்தை உணர்த்தாமல் மறைந்திருந்த தன்னுடைய முட்டாள்தனத்தை முதல் முறையாக உணர்ந்தான் முகுந்தன்.

அவள் தன் வீட்டிற்கு வந்து தங்கிய நிறைவு ஒன்றே அவனது தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்ததை எரிச்சலுடன் எண்ணிக் கொண்ட முகுந்தன் அறையை விட்டு வெளியே வந்து தோட்டத்தை மெதுவாகச் சுற்றிக் கொண்டே மிருணாளினி தங்கியிருந்த அறையை நோட்டமிட்டவன் தூண் மறைவில் நின்று கொண்டிருந்த அவளைப் பார்த்து விட்டான்.

எத்தனையோ வருடங்களாக தன்னுடைய உயிராக எண்ணிப் பாசம் கொண்டிருந்த தன் காதலியை அப்படியொரு அநாதரவான நிலையில் கண்டவனின் கைகள் அவளை அள்ளி அணைத்துக் கொண்டு தன்னுடைய

உள்ளத்தை அவள் காலடியில் வைக்கத் துடித்தது. அந்தத் தவிப்பை மறக்கவே அவன் உன்மத்தம் பிடித்தவன் போல் தோட்டத்தைச் சுற்றி வேகமாக நடந்து கொண் டிருந்தான்.

''மாமா...'' மிருணாளினியின் மெல்லிய குரலில் தன் சிந்தனைகளில் இருந்து விடுபட்டவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என்னம்மா....'' தன்னை அழைத்தவளைப் பார்த்த சதாசிவத்தைக் கண்டவுடன் முகுந்தனின் இதழ்களில் ரகசிய முறுவல் தோன்றியது. மிருணாளினி தன்னைத் தான் அப்படி அழைத்தாளோ என்று எண்ணிய மன தினை தனக்குள் ஒரு குட்டு வைத்து அடக்கிக் கொண்டான் முகுந்தன்.

''சுபாஷினியின் ஸ்கூல் விசயமாக இன்று யாரையோ பார்க்கப் போகணும்னு சொன்னீங்களே?'' தயக்கத்துடன் கேட்டாள் மிருணாளினி.

''அதுக்கெதுக்கும்மா இவ்வளவு தயங்கற? இப்பக் கிளம்பிட்டின்னா போய்ப் பார்த்துட்டு வரலாம்.''

''உடம்பு முடியாமல் இருக்கும் சமயத்தில் கூட உங்களை ரெஸ்ட் எடுக்கவிடாமல் சிரமப்படுத்து கிறோமோன்னு யோசனையா இருந்தது மாமா. அதனாலதான்...''

''என் உடம்புக்கு ஒண்ணும் இல்லம்மா. காய்ச்சல் சரியாப் போச்சு. நாம சாப்பிட்டு விட்டுக் கிளம்பிப் போய்ட்டு வந்துடலாம்'' கூறிக் கொண்டே எழுந்த சதாசிவத்தைத் தடுத்தான் முகுந்தன்.



''ஸ்கூல் விசயமாகத்தானப்பா. நான் சுபாவை கூட்டிக்கிட்டுப் போயிட்டு வந்துடறேன்'' தன்னுடன் மிருணா தனியாக வரமாட்டாள் என்ற எண்ணத்துடன் கூறினான் முகுந்தன்.

''இல்லையில்லை. நானும் மாமாவும் சுபாவைக் கூட்டிட்டுப் போய் பார்த்துட்டு வந்துக்கறோம். நீங்க உங்க வேலையைப் பாருங்க'' அவசரமாகக் கூறிய மிருணாளினியை கோபத்துடன் முறைத்தான் முகுந்தன். அவன் கோபத்தைக் கண்டு தலை குனிந்த வளின் செயல் முகுந்தனின் மனதினை தென்றலாய் வருடியது.

''ஹலோ மேடம். நீங்க ரெண்டு பேரும் பார்க்கப் போறது என்னோட பிரெண்டைத்தான். எப்படியும் உங்க கூட நானும் வந்துதான் ஆகணும். அதற்கு, முடியாத அப்பாவை இழுத்துக்கிட்டுப் போகாம நாமளே போய்ப் பார்த்துட்டு வந்திரலாம் இல்ல?'' தன்னைப் பார்த்துப் புருவம் உயர்த்தியவனுக்கு பதிலளிக்காமல் அமைதி யாக இருந்தாள் மிருணாளினி.

''மாமா சொல்றதும் நல்ல ஐடியாதானக்கா. இதுக்குப் போய் இத்தனை யோசனை தேவையா? மாமா... நான் ரெடி. நாம போகலாம் கிளம்புங்க'' தன்னுடைய சர்டிபி கேட் அடங்கிய ஃபைலை எடுத்துக் கொண்டு முகுந்தனை அழைத்தாள் சுபாஷினி.

''பேசாம இருக்க மாட்டியா சுபா? உனக்கு என்ன தெரியும்னு இவரைக் கூட்டிக்கிட்டுப் போறேன்னு அடம் பிடிக்கிற?'' தன்னை கண்டித்த மிருணாளினியைப்

பார்த்து ஒற்றை விரல் காட்டி எச்சரித்தாள் சுபாஷினி.

"என்னைப் பச்சைப்புள்ளையாட்டம் ட்ரீட் பண்ணாதன்னு உன்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கேன். மறுபடியும் இன்சல்ட் பண்ணினியோ... அப்பத் தெரியும் இந்த சுபாஷினி யாருன்னு. ப்ளஸ் டூவில் சீட் கொடுத்து சேர்க்கிறதே கஷ்டம். மாமா அவர் பிரெண்டிடம் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறதாலதான் என்னைச் சேர்த்துக்கப் போறாங்க. அதற்கு மாமா கூடப் போய் அட்மிஷன் போட்டுவிட்டு அப்படியே அவரோட பிரெண்டிடம் தேங்க்ஸ் சொல்லிவிட்டு வருவதுதான முறைக்கா? அதைப் புரிஞ்சுக்காம இப்படி அடம் பிடிக்கிற? மரியாதையா எந்திரிச்சு எங்க கூடக் கிளம்பி வர்றதானா வா. இல்லன்னா பேசாம வீட்டிலேயே இருந்துக்க. நான் மாமா கூட போய் ஸ்கூல்ல ஜாய்ன் பண்ணிக்கிறேன். எப்படி வசதி?" தன் முன் கை நீட்டிக் கேட்டவளின் கேள்வியில் இருந்த நியாயம் மிருணாளினிக்கும் புரிந்தது. ஆனால் சுபாஷினியை ஸ்கூலில் விட்டுவிட்டு முகுந்தனுடன் தனித்து வரும் சூழ்நிலை அமைந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணித் தயங்கினாள் அவள்.

முகுந்தனை யாரும் அற்ற தனிமையில் சந்திக்க மிருணாளினி விரும்பவில்லை. அவனைக் கண்டது முதல் தன் உள்ளமும் சஞ்சலத்தால் தவித்துக் கொண்டிருப்பதை அவளும் உணர்ந்துதான் இருந்தாள். இந்தச் சூழ்நிலையில் அவனோடு தனிமையில் பயணம் செய்ய அவளுக்கே அச்சமாக இருந்தது. முகுந்தனின்




பார்வையும் தன்மேல் அவன் கொண்டிருக்கும் காதலை உணர்த்துவதை வேதனையுடன் அறிந்து கொண்ட மிருணாளினி அவனது காதலை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை என்பதைத் தனக்குள் பலமுறை துயத்துடன் கூறிக் கொண்டாள்.

"சரி சுபா. நீ அவருடன் போய் ஸ்கூலில் சேர்ந்துக்க. நான் நாளை வந்து உன்னுடைய டீச்சர்ஸைப் பார்த்துப் பேசிக்கிறேன்" தீர்மானமாகக் கூறிய அவளைப் பார்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டு கோபத்துடன் எழுந்து விட்டான் முகுந்தன்.

"என்னைப் பத்தி நீ என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்க? நானும் நீ வந்ததில் இருந்து பார்த்துக்கிட்டே தான் இருக்கேன். யாரோ ஒரு வழிப்போக்கனைப் பார்க்கிறது போல விட்டேத்தியா இருக்க. நான் என்ன வேலை வெட்டி இல்லாம உன் பின்னால சுத்த நினைக்கிறேன்னு நினைச்சியா. எனக்கு ஆயிரம் வேலை தலைக்கு மேல இருக்கும்மா. ஏதோ என் பாட்டிக்கு வாக்குக் கொடுத்திட்டனேன்னு நானும் ரொம்பப் பொறுமையா போய்க்கிட்டு இருக்கிறேன். இல்லைன்னா நீயாச்சு உன் வேலையாச்சுன்னு தூக்கிப் போட்டுட்டு போய்க்கிட்டே இருப்பேன் பார்த்துக்க. இப்ப ஒழுங்கு மரியாதையா எந்திரிச்சு என்கூட வர்ற. இல்லாட்டி உன்னோட தங்கச்சிய நீயா ஏதாவது ஒரு ஸ்கூல்ல கொண்டு போய் சேர்த்துக்க. நான் கிளம்பறேன். எப்படி வசதி?" வெறி கொண்டவனாய் தன்முன் இரைந்தவனை நிமிர்ந்து பார்க்கவும் அஞ்சியவளாய் எழுந்து நின்றாள் மிருணாளினி.

அவளது பயத்தைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாலும் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல் விறைப்பாகப் பார்த்தான் முகுந்தன். மகனது கோபத்தை அறிந்திருந்த சதாசிவமும் பேசாமல் கிளம்பும்படி ஜாடைகாட்ட வேறு வழியின்றி முகுந்தனுடன் கிளம்பினாள் மிருணாளினி.

# 20



உண்மையிலேயே முகுந்தனுக்கு அந்தப் பள்ளியில் கிடைத்த மரியாதையைப் பார்த்து மிருணாளினி அசந்து போய் விட்டாள்.

அந்த ஊரிலேயே பெரிய பள்ளியான அதற்குள் நுழைந்துவுடன் திருப்தியுடன் தங்கையைப் பார்த்துப் புன்னகைத்தாள் மிருணாளினி.

"மும்பை அளவிற்குப் பெரிய ஸ்கூல் இல்லாட்டியும் இதுவும் நல்ல ஸ்கூல்தான் சுபாஷினி. ஸ்டேட் லெவல் ரேங்க்கை வருசா வருசம் எப்படியாவது இந்த ஸ்கூல் வாங்கிவிடும். நீயும் கவனமா படிச்சா ஈஸியா அப்படி ஒரு ரேங்க்கை வாங்கிடுவ. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு" கூறியவனைப் புன்னகையுடன் பார்த்தாள் சுபாஷினி.



"கண்டிப்பா மாமா. மும்பை ஸ்கூலிலேயே டென்த்ல ஸ்கூல் பர்ஸ்ட் நான்தான்" பெருமையுடன் கூறிய சுபாஷினியை அமைதியாகப் பார்த்தான் முகுந்தன்.

"எனக்குத் தெரியும் சுபாஷினி. என் பிரெண்டிடம் நான் அதைச் சொல்லித்தான் ஸீட் கேட்டேன்" அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் மிருணாளினி.

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்? நான் மாமா கிட்டக்கூட இதைப் பத்தி சொல்லலியே?"

"ஆமா. இது பெரிய சிதம்பர ரகசியம்! இதை தெரிஞ்சுக்க நான் மும்பைக்கு வரணும்னு அவசியம் இல்ல. என்னோட சொந்தம்னு நான் யாரை நினைக்கிறேனோ அவங்களைப் பத்தின செய்தி எல்லாமே என்னைத் தேடித் தானாக வந்துடும். அப்படி இல்லேன்னா நான் பிஸினெஸ்ல எதையும் சாதிக்க முடியாது" அலட்சியமாகக் கூறினான் முகுந்தன்.

அவனைத் திரும்பிப் பார்த்த மிருணாளினிக்கு அவனது அந்த அலட்சிய பாவம் மிகவும் பிடித்தது. அவளது அந்த ரசனையைக் கண்டுபிடித்ததுடன் அல்லாமல் தன் ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேலியாகப் பார்த்தான் முகுந்தன். அவசரமாக அவனை விட்டுத் தன் பார்வையை விலக்கிக் கொண்டு வேறு திசையில் பார்க்க ஆரம்பித்த மிருணாளினியைப் பார்த்துச் சிரித்தன முகுந்தனின் இதழ்கள்.

அவர்களின் கார் நேராகப் பள்ளியின் அலுவல் அறைக்கு முன்பாகச் சென்று நிற்கும் முன்பே தன்னுடைய அறையில் இருந்து வெளியே வந்து முகுந்தனின்

கரம் பற்றிக் குலுக்கி உள்ளே அழைத்துச் சென்றார் பள்ளியின் முதல்வர். அவருடன் சிநேகமாகப் பேசிச் சிரித்துக் கொண்டே நடந்தாலும் பார்வையால் அவர் களைத் தன்னுடன் தொடரச் சொல்லி திரும்பிப் பார்த்துக் கொண்டே அவருடன் நடந்து சென்ற முகுந்தனின் அன்பும் பாதுகாப்பும் மிருணாளினியின் மனதிற்கு இதம் தந்தது.

சுபாஷினிக்கோ மிகவும் சந்தோஷம். அவள் எதிர் பார்த்ததை விட தரமான பள்ளியாக இருந்ததால் அவளது உற்சாகம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

அவர்களை அமர வைத்த பள்ளியின் முதல்வர் முகுந்தனின் எதிரில் அமரவே தயங்கினார். அவரை நட்புடன் தோள் பற்றி அவரது இருக்கையில் அமர வைத்த முகுந்தன் திரும்பி மிருணாளினியை அமர வைத்துப் பின் தான் அவள் அருகில் அமர்ந்து கொண் டான். அவனது உரிமையைக் கவனத்தில் கொண்ட பள்ளியின் முதல்வர் சுபாஷினிக்கு உடனே அட்மிஷன் கொடுத்ததுடன் இல்லாமல் அவளது கிளாஸ் டீச்சரை உடனே அழைத்து சுபாஷினியை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி விட்டே அவளை கிளா ஸிற்கு அனுப்பினார்.

அவர்கள் சென்ற ஐந்தே நிமிடங்களில் சுபாஷினிக்கு அட்மிஷன் கிடைத்துவிட்டதை மிருணாளினி மிகவும் ஆச்சரியத்தோடு பார்த்தாள். அவர்களுடன் பேசிக் கொண்டே இருந்த பள்ளி முதல்வர் திடீரென பதறிக் கொண்டு எழ, புயல் போல் உள்ளே வந்த பள்ளியின்



கரஸ்பாண்டென்ட்டான முகுந்தனின் நண்பன் வேகமாக வந்து முகுந்தனைத் தன்னுடன் இறுக்கமாக அணைத்து வரவேற்றான். அவனது பார்வை மிருணாளி னியை மிகவும் மரியாதையுடன் பார்த்தது.

''ஹாய்... முகுந்தன். இவங்கதான் நீ சொன்ன சுபாஷினியா?''

சுபாஷினிக்கு கால்கள் தரையில் நிற்கவே இல்லை. பள்ளியின் உரிமையாளரே தன்னை மரியாதையுடன் கேட்டதில் அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

''நீ கவலையே பட வேண்டாம் முகுந்தா. நான் உன்னோட கஸினுக்கு ஸ்பெஷல் கேர் எடுத்துக்கச் சொல்றேன். இந்த இயர் நம்ம ஸ்கூல் டாப்பர் உன்னோட கஸின்தான்'' உறுதியளித்த நண்பனை மீண்டும் அணைத்து விடைபெற்றான் முகுந்தன்.

சுபாஷினியை பள்ளியிலேயே விட்டுவிட்டுக் கிளம்பிய அவர்களைக் கார் வரை வந்து வழியனுப்பி விட்டு தானும் உடனடியாகக் கிளம்பிவிட்டான் முகுந்தனின் நண்பன். அவன் சென்ற விரைவைப் பார்த்தால் ஏதோ ஒரு முக்கியமான வேலையை நிறுத்திவிட்டு வந்த அவசரத்தில் இருப்பதைப் போல தோன்றியது மிருணாளினிக்கு. அந்த வேலையையும் அவன் தன் நண்பனான முகுந்தனுக்காக இடையிலேயே விட்டுவிட்டு வந்ததை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை அவளால்.

''என்ன... அம்மையார் இன்னிக்கு ரொம்பவும் சைலண்ட்டா இருக்கிறது போல் தெரியுது?'' வேண்டும்

என்றே தன்னை வம்பிழுக்கிறான் என்பதைத் தெரிந்தும் அவன் மேல் கோபம் வரவில்லை மிருணாளினிக்கு.

"தேங்க் யூ... தேங்க் யூ வெரிமச்..." தொண்டை அடைக்கக் கூறிய அவளை வியப்புடன் பார்த்தான் முகுந்தன்.

"எதுக்கு?!"

"எல்லாவற்றிற்கும். எல்லாவற்றிற்கும் என்றால் எல்லாவற்றிற்கும்னுதான் அர்த்தம். நான் இங்கே வந்ததில் இருந்து... இப்போ சுபாஷினி அட்மிஷன் வரை... எல்லாத்துக்குமே சேர்த்து... தேங்க்ஸ்..." நன்றியுடன் தன்னைப் பார்த்தவளை கண்களில் சிறு எரிச்சலுடன் பார்த்தான் முகுந்தன்.

"அம்மா லூசு மாதிரி உளராதே மிருணா..." கண்டிப்புடன் கூறியவனைப் பார்த்துத் திகைத்தாள் மிருணாளினி.

"லூசா... என்னைப் பார்த்தால் உங்களுக்கு அப்படியா இருக்கு?"

"நீ கோபித்துக் கொண்டாலும் சரி. எனக்கு அப்படித்தான் இருக்கு. சுபாஷினி உனக்கு மட்டும் தங்கை இல்லை. இனி எனக்கும் அவள் அப்படித்தான். அதற்காக நானும் தங்கைதான்னு சொல்லிவிடாதே தாயி. உன்னை நான் அப்படியெல்லாம் நினைக்கும் எண்ணம் இந்த ஜென்மத்தில் கிடையாது. அதுவேற... இதுவேற..." கூறி விட்டுத் தன்னைத் திரும்பிப் பார்த்தவனின் கண்களில் தெரிந்த காதல் இது எப்படிப்பட்ட உறவு என்பதை அவளுக்கு உணர்த்தியது.



"ஆனால் எனக்கு அப்படியெல்லாம் எதுவும் கிடையாது. நான் உங்களை..."

"எப்படி நினைக்கிறாய் என்பதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். அப்புறம் என்றால் அப்புறம்தான்" வேகமாகக் கூறத் தொடங்கியவனை இடைமறித்து அவளைப் போலவே அழுத்தமாகக் கூறினான் முகுந்தன்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டுத் தன் கண்களில் காதலையும் முகத்தில் வேதனையையும் நன்றாக காட்டிய அவளைக் கேள்விக்குறியோடு பார்த்தான் அவன்.

"நாம் கொஞ்ச நேரம் நம்முடைய ஆபீசுக்குப் போய் விட்டு அதற்குப்பின் வீட்டிற்குப் போகலாமா?" கேட்டவனைப் பார்த்து அமைதியாகத் தலையசைத்தாள் மிருணாளினி.

## 21



"நம்முடைய ஆபீஸ்..."

"நமது வீடு..."

"நம்ம சுபா..." முகுந்தனின் அத்தனை வார்த்தைகளுமே தனது நெஞ்சில் அறைவதைப் போல் உணர்ந்தாள் மிருணாளினி.

எதுவும் பேசாமல் அமைதியாகத் தனது சீட்டில் சாய்ந்து கண்மூடி அமர்ந்தவளின் தோற்றம் முகுந்தனின் நெஞ்சைப் பிசைந்தது.

'எதற்காக இப்படி மறுகற? உனக்கு எல்லா உறவுகளுமாக இருந்து உன்னை பாதுகாக்கவும் உன்னோட அத்தனை கடமைகளிலும் பங்கேத்துக்கவும் தயாரா நான் ஒருத்தன் இருக்கிற போது நீ எதுக்காகடி இவ்வளவு வேதனைப்படுற?' அவளைத் தன்னுள் அணைத்துக் கொண்டு அவள் தலையை ஆதரவாகக் கோதத் துடித்த தன் கைகளை மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக் கொண்டான் முகுந்தன்.

அவனது ஆவேசத்தினால் அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் கார் அவனது ஆபீஸின் முன்னால் சென்று நின்றது.

காரை விட்டு இறங்கிய அவன் சுற்றி வந்து அவளுக்காக கார்க் கதவைத் திறந்துவிட மெதுவாக இறங்கி அவனது அலுவலக கட்டிடத்தை விழியுயர்த்திப் பார்த்தாள் மிருணாளினி.

இம்முறை அவள் வியந்து நிற்க வேண்டும் என்று முகுந்தன் எதிர்பார்க்கவில்லை. தனது அலுவலகத்தை அவள் மனமார தன் உரிமையாக ஏற்றுக் கொண்டாலே போதும் என்றிருந்தது அவனுக்கு. எப்போதும் போல அலுவலகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு எதுவும் கூறாமல் அவன் முகத்தைப் பார்த்த மிருணாளினியை எண்ணி ஆச்சரியம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை முகுந்தனால்.



அந்த ஊரிலேயே மிகவும் ஆடம்பரமான கட்டிடம் என்றே முகுந்தனின் அலுவலகத்தை கூறலாம். அந்த அலுவலகத்தைத் தலைமை அலுவலகமாகக் கொண்டதால் முகுந்தன் அந்தக் கட்டிடத்தையே சலவைக் கற்களாலும், கண்கவரும் கண்ணாடிகளைக் கொண்டும் வடிவமைத்து, அலங்கார விளக்குகளாலும், ஆடம்பரமான இருக்கைகளாலும் கண்ணைக் கவரும் வகையில் வடிவமைத்திருந்தான்.

கார் பார்க்கிங்கைக் கூட மொத்தம் அரைக் கிலோ மீட்டர் அளவிற்குப் பெரிய தோட்டமும், செயற்கை நீரூற்றும், கார்கள் வந்து நிற்க வண்ண வண்ணக் கற்கள் பதித்த நடைபாதையுமாக மிகவும் ராயல் லுக்குடன் அமைத்திருந்தான் முகுந்தன்.

''நம்முடைய ஆபீஸ் எப்படி இருக்கு மிருணா?'' ஆவலுடன் தன் முகம் பார்த்தவனை அழுத்தமாகப் பார்த்தாள் மிருணாளினி.

''உங்க ஆபீஸ் ரொம்ப நன்றாக இருக்கு.'' 'உங்க'வை அழுத்தமாக அவள் சொல்லிய விதத்தில் முகம் மாறி கோபத்துடன் அவளை முறைத்தான் முகுந்தன்.

''இப்படி மனம் நோகப் பேச எங்க மிருணா கத்துக்கிட்ட? நிச்சயமாய் எங்க பாட்டி உன்னை அப்படி வளர்த்திருக்க மாட்டாங்க...''

''பாட்டி என்னை எல்லா உண்மைகளையும் அப்படியே ஏத்துக் கொள்ளும்படியாகத்தான் வளர்த்திருக்காங்க.''

''என்ன உண்மையைக் கண்டுவிட்டாய்? நான் ஆசையாகக் கேட்டதற்கு என்னை இப்படி இன்சல்ட் பண்றதுதான் நீ உண்மையை ஒத்துக்கொள்வதா?''

''முகுந்தன்... இது உங்க ஆபீஸ் தானே? நான் அதைத்தானே சொன்னேன். அதுக்கு எதுக்கு நீங்க இப்படிக் கோபப்படறீங்க?'' அவனை நேராகப் பார்த்துக் கேட்டவளை வெறுப்புடன் பார்த்தான் முகுந்தன்.

''மண்ணாங்கட்டி... இதற்கு நீ இங்க வராமலே இருந்திருக்கலாம்'' வெடித்தான் முகுந்தன்.

''நான் ஒண்ணும் நானாக இங்கே வரவில்லை. நீங்கதான் என்னை இங்க கூட்டிக்கிட்டு வந்ததா ஞாபகம்.''

''ஆமாம் தாயே. நான்தான் கூட்டிக்கிட்டு வந்தேன். அதுவும் ஆசையாக் கூட்டிக்கிட்டு வந்தேன். அதுக்காக என் புத்தியை நானே செருப்பால அடிச்சுக்கணும்.''

''முகுந்தன்!!''

''தயவுசெய்து என்னை அப்படிக் கூப்பிடாதே மிருணா. நீ அப்படிக் கூப்பிடும்போதெல்லாம் நான் உனக்கு அந்நியனா தெரியறேன். உனக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதற்குத்தான் நான் ஆசைப்படுறேன்.''

''முகுந்தன்... ப்ளீஸ்...'' சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே கெஞ்சிய மிருணாளினியின் வார்த்தைகள் முகுந்தனின் காதுகளில் விழவே இல்லை.

''ஆமாம் மிருணா. இதற்குமேல் என்னால் தாங்க முடியாது. நான் உன்னைக் காதலிக்கிறேன். என் உயிரை



விட அதிகமாக நேசிக்கிறேன். உன்னை என் இதயத்தின் ராணியா வைத்து வாழவைக்க ஆசைப்படுறேன். போதுமா? நான் என்னுடைய ஆண்மையை விட்டு உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன் மிருணா. என்னுடைய காதலை ஏத்துக்க'' தன்னுடைய கைகளைப் பிடித்து அவனது அலுவலக வாயிலில் நின்று கொண்டு கெஞ்சிய அவனை வேதனையுடன் பார்த்தாள் அவள்.

''முகுந்தன்... கண்ட்ரோல் யுவர்செல்ப்... நாம் இதைப் பற்றி அப்புறமாப் பேசிக்கலாம். இது உங்க ஆபீஸ் வாசல் முகுந்தன்...''

''தயவு செய்து இன்னொரு முறை அப்படிச் சொல்லாதே மிருணா. இனி அப்படிச் சொன்னா நானே உன்னை என் கையால் கொன்றே விடுவேன். நான் உனக்கு மாமா. இது நம்முடைய... உன்னுடைய ஆபீஸ்'' பைத்தியக்காரனைப் போல் தன்னைப் பிடித்து உலுக்கும் அவனை பயத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

என்ன செய்வது என்று புரியாமல் அவனது கரம் பற்றி இழுத்துக் காரில் அமர்த்தி டிரைவர் சீட்டில் தான் அமர்ந்து கொண்டு காரைக் கிளப்பி அங்கிருந்து வெளியேறினாள் மிருணாளினி. ஒரு குழந்தையைப் போல் அவள் அருகில் அமர்ந்து இலக்கில்லாமல் சாலையை வெறித்துக் கொண்டிருந்தான் முகுந்தன். தன் சொந்த உழைப்பாலும் முயற்சியாலும் இத்தனை பெரிய தொழில் சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கிய ஒருவன் தன் மேல் உள்ள காதலால் ஒரு குழந்தையைப் போல் அமர்ந்திருப்பதை வேதனையுடன் பார்த்தாள் மிருணாளினி. அவளுக்கு அந்த ஊர் புதிது என்பதால்

போக்குவரத்து அதிகம் இல்லாத சாலை ஒன்றின் ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு முகுந்தனை நோக்கித் திரும்பி அமர்ந்தாள் மிருணாளினி. நடக்கும் எதையும் உணர்ந்து கொள்ளும் சக்தியற்றவனாய் சாலையை வெறித்துக் கொண்டிருந்தான் முகுந்தன்.

''முகுந்தன்...'' அவன் கரம் பற்றிக் கூப்பிட்ட அவளது குரலுக்கு அவனிடம் எவ்வித அசைவும் இல்லை.

''முகுந்தன்...'' மறுமுறை அழைத்தும் பயன் இல்லாமல் போனது.

''மாமா... மாமா...'' அவனை தயக்கத்துடன் அழைத்தபடி திரும்பிய அடுத்த நொடி என்ன நடந்தது என்றே தெரியாமல் அவனது இறுக்கமான அணைப்பில் இருந்தாள் மிருணாளினி.

அவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டு அவள் முகம் எங்கும் முத்தங்களைப் பொழிந்து கொண்டிருந்தவனைத் தன்னை அறியாமல் தழுவிக் கொண்டது மிருணாளினியின் கரங்கள்.

சிறிது நேரம் சென்று அவளை விடுவித்தவனின் முகத்தில் பழைய தெளிவும் அறிவும் மீண்டிருந்தது.

''தேங்க்ஸ்...'' கூறியவனை வியப்புடன் பார்த்தாள் மிருணாளினி.

''எதுக்கு...''

''எல்லாத்துக்கும்'' அவன் அழுத்தமாகக் கூறிய விதத்தில் கன்னங்கள் சிவந்தாள் மிருணாளினி.

''எனக்கு எல்லாமே ரொம்பவும் பாஸ்ட்டா இருப்பது போல் தோணுது...'' அவள் கோபப்பட்டு விடுவாளோ



என்று தயக்கத்துடன் தன் முகம் பார்த்தவளைச் சிரிப்புடன் பார்த்தான் முகுந்தன்.

# 22



''எனக்கென்னவோ எல்லாமே ரொம்பவும் ஸ்லோவா இருப்பதைப் போலத்தான் தோணுது'' சிரிப்புடன் கூறிவிட்டு அவளை தன் இருக்கையில் அமர வைத்து டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான் முகுந்தன்.

''இனிமேல் என்னால் வெய்ட் பண்ண முடியாது மிருணா. இப்பவே போய் அப்பாகிட்டச் சொல்லி மேற்கொண்டு ஆக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யணும்'' கண்களில் கனவுகளோடு கூறிக் கொண்டே சென்றவனை அமைதியுடன் பார்த்தாள் மிருணா.

''மாமா...''

''சொல்லுடா... என்கிட்ட என்ன சொல்லணுமோ அதைத் தயங்காம சொல்லு மிருணா. இனிமேல் நீ என்ன சொன்னாலும் அதை நான் கேட்பேன். உன் இஷ்டப்படிதான் இனி எல்லாமே நடக்கும்.''

''எனக்குக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லை மாமா'' தெளிவுடன் கூறிய மிருணாளினியின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து காரை நிறுத்தினான் முகுந்தன்.

"என்ன?! என்ன சொன்ன?" வெறி கொண்டவனாய் தன்னிடம் திரும்பிய அவனைப் பயமின்றி வேதனையுடன் பார்த்தாள் மிருணாளினி.

"எனக்குக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லைன்னு சொன்னேன்" கூறி முடிக்கும் முன்பாகத் தன் கன்னத்தில் விழுந்த அறையால் துடித்துப் போய் தன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள் மிருணாளினி.

"மாமா...!"

"என்னடி மாமா? கொன்னுடுவேன் கொன்னு. கல்யாணத்தில் இஷ்டம் இல்லாதவள் எதுக்குடி கொஞ்ச நேரத்துக்கு முன்னால என் மடியில் படுத்துக்கிட்டு அமைதியா இருந்த. அப்புறம் என்ன தைரியத்தில் என்னை உரிமையோட மாமான்னு கூப்பிட்ட. உன் கண்களில் தெரிஞ்ச காதலைப் பார்த்துட்டுத் தானே நான் என்னோட காதலைச் சொன்னேன். அதையும் நீ ஏத்துக்கிட்ட தான? அப்புறம் எதனால் கல்யாணம் வேண்டாம்னு சொல்ற? காதல் மட்டும் வேணும், கல்யாணம் வேணாம்னா நம்ம பரம்பரையவே மத்தவங்க கேவலமாப் பேசமாட்டாங்க? அப்படியொரு வாழ்க்கையைத் தான் நீ வாழணும்னு ஆசைப்படுறியா? சொல்லுடி..." அவன் பேசிக் கொண்டே போக தன் காதுகளை பொத்திக் கொண்டாள் மிருணாளினி.

"மாமா... ப்ளீஸ்.. பேச்சை நிறுத்துங்க. எனக்குக் கேட்கவே அருவெறுப்பா இருக்கு."

"எனக்கும்தான் நீ சொன்னதை நினைச்சா அருவெறுப்பா இருக்கு. நான் தாங்கிக்கலை? நீயும் என்



பேச்சைத் தாங்கிக்க. ஆனா ஒண்ணு மட்டும் உறுதியாச் சொல்றேன் கேட்டுக்க. அடுத்த முகூர்த்தத்திலேயே நம்ம கல்யாணம் ஜாம்ஜாம்னு நடக்கும். நடந்தே ஆகணும். இல்லைன்னா நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது" அவளிடம் கூறிவிட்டு வண்டியை எடுத்தவன் பேய் போல் அதை ஓட்டிக் கொண்டு போய் தன் வீட்டின் வாசலில் நிறுத்தினான்.

கார் வந்து நின்ற வேகத்தையும் சத்தத்தையும் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த சாந்தி அதில் இருந்து இறங்கிய தன் மகனின் கோபத்தைக் கண்டு பதறிப் போய் வாசலுக்கு வந்தாள்.

"என்னப்பா முகுந்தா? ஏன் இவ்வளவு கோபமா வர்ற? மிருணா எங்க?" தாயின் கேள்விக்கு பதில் அளிக்காமல் காரில் அமர்ந்திருந்த மிருணாளினியைத் திரும்பிப் பார்த்து முறைத்துவிட்டு விடுவிடுவென வீட்டிற்குள் நுழைந்தான் முகுந்தன்.

"மிருணாக் கண்ணு. எதுக்குடா அவன் இத்தனை கோபமா முறைச்சுக்கிட்டுப் போறான்? நீயாச்சும் பதில் சொல்லுடா. முதல்ல காரில் இருந்து இறங்கி உள்ள வா..." ஒன்றும் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்த அவளின் கைப்பற்றி வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள் சாந்தி.

கோபத்தில் முகம் சிவக்க மூச்சு வாங்கத் தன்முன் வந்து நின்ற மகனை வியப்புடன் பார்த்தார் சதாசிவம்.

"அப்பா. நான் உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும்."

"பேசுப்பா..." கையில் இருந்த பேப்பரை மடித்துக் கொண்டே கூறினார் சதாசிவம்.

"தனியாப் பேசணும்ப்பா. பாட்டியையும், அம்மாவையும் கூட்டிக்கிட்டு மாடிக்கு வாங்க" தந்தையின் பதிலை எதிர்பாராமல் மாடியேறிய மகனின் முதுகை சிந்தனையுடன் வெறித்தார் சதாசிவம்.

அதற்குள் தன் மனைவியின் கைப்பற்றிக் கொண்டு நடக்கக் கூட தெம்பில்லாதவளாய் வெளிறிய முகத்துடன் உள்ளே வந்த மிருணாளினியைப் பார்த்த அவர் தனக்குள் மகனது கோபத்தின் பொருள் புரிந்து புன்னகைத்துக் கொண்டார்.

"என்னம்மா மிருணா? உனக்கும் முகுந்தனுக்கும் ஏதாவது சண்டையா?" அன்பாகக் கேட்ட சதாசிவத்திற்கு பதில் சொல்லாமல் மௌனமாகக் கண்ணீர் விட்ட மிருணாளினியை குழப்பத்துடன் பார்த்தாள் சாந்தி.

"சாந்தி... ஒரு நிமிஷம்" கண்களால் ஜாடை காட்டிக் கொண்டே படியேறிய கணவரை ஒன்றும் புரியாமல் பின் தொடர்ந்தாள் சாந்தி.

தாயாருடன் மகனது அறைக்குள் வந்த சதாசிவம் அறையைப் பூட்டிவிட்டு மகனுக்கு எதிராக அமர்ந்து கேள்வியாக அவனை ஏறிட்டார்.


"அப்படிப் பார்க்காதீங்கப்பா. நான் ஒரு தப்பும் செய்யலை" தந்தையின் பார்வையைத் தாங்காமல் அவர் முன் சரணடைந்தான் முகுந்தன்.



"என் மகன் தப்பு செய்ய மாட்டான்னு எனக்கு நல்லாத் தெரியும்பா. ஆனா எதுக்காக இத்தனை கோபம்? அங்க என்னடான்னா அந்தத் தாயில்லாப் பொண்ணு கண்ணீர் விட்டுக்கிட்டு இருக்கு. இதெல்லாம் நல்லாவா இருக்கு முகுந்தா? நீ இன்னும் கொஞ்சம் பொறுமையா இருக்கலாம்னு நான் நினைக்கிறேன்ப்பா."

"இன்னும் பொறுமையான்னா? இன்னும் எத்தனை வருசம்ப்பா நான் பொறுமையாக் காத்துக்கிட்டு இருக்கிறது? நானா அவள் மேல ஆசைப்பட்டேன்? நீங்க தான அவள் பிறந்தது முதல் என் மனசில் ஆசையை வளர்த்தீங்க. இத்தனை வருசமா நான் ஊண் உறக்கம் இல்லாம ஓடியாடிச் சம்பாதிச்சதெல்லாம் எதுக்காகப்பா? அவளை ராணியாட்டம் இந்த வீட்டுக்குள்ள அழைச்சுக்கிட்டு வரத்தானே? இப்ப தெய்வமே அவளை என்கிட்டக் கொண்டு வந்து சேர்த்திருக்கு. இதுக்கும் மேல நான் பொறுமையா இருந்துதான் ஆகணுமாப்பா?" தந்தையின் முகம் நோக்கி கேட்டான் முகுந்தன்.

"தப்பு முகுந்தா. இது ரொம்பத் தப்பு. அந்தப் புள்ளை அப்பா அம்மாவை இழந்து முழுசா ஆறு மாசம் கூட ஆகலை. அது மனசு சமாதானம ஆகிறதுக்காவது நாம டயம் கொடுக்கணும் முகுந்தா. அத்தோட அவ மனசுல யாரு, என்ன இருக்குன்னு தெரியாம நாமளா ஒரு முடிவுக்கு வர கூடாதுப்பா. எதுக்கும் ஒரு முறை இருக்குல்ல" மகனைக் கண்டிப்புடன் பார்த்த சதாசிவத்தை துயரத்துடன் பார்த்தான் முகுந்தன்.



# 23

சதாசிவத்திற்கு தன் மகன் மேல் என்றுமே தனிப் பிரியமும் நம்பிக்கையும் உண்டு. முகுந்தன் ஒன்றைக் கூறினால் அதில் அர்த்தம் இருக்கும் என்று முழு மனதாக நம்புகிறவர் அவர்.

அப்படிப்பட்ட தந்தையே தனது வார்த்தைகளை மறுத்துப் பேச வேறு வழியின்றி அமைதியாக அவரைப் பார்த்தான் முகுந்தன்.

"சரிங்கப்பா. நான் நீங்க சொல்கிறபடியே பொறுமையா இருக்கேன். அடுத்த வாரம் ஒரு பாரின் காண்ட்ராக்ட் வருது. அதுக்காக நம்ம கம்பெனி ஸ்டாப்சை ஒரு டீமா அங்க அனுப்பப் போறோம். அவங்க கூடவே நானும் பாரின் போறேன். உங்களுக்கும் உங்க மருமகளுக்கும் எப்ப என்னோட ஞாபகம் வருதோ அப்ப நான் நம்ம நாட்டுக்குத் திரும்ப வர்றேன். சரிதானேப்பா?" கேட்ட மகனை கோபத்துடன் முறைத்தார் சதாசிவம்.

"இதென்ன பிடிவாதம் முகுந்தா? எதுக்காக நீ இப்படி ஒரு முடிவெடுக்கிற?" கேட்ட தந்தையைப் பார்த்து வேதனையில் வெடித்தான் முகுந்தன்.

"பின்ன என்னை வேற என்னப்பா செய்யச் சொல்றீங்க. அவ என்னைக் காதலிக்கிறாளாம். ஆனால் கல்யாணம் பண்ணிக்க மாட்டாளாம்..."



"என்னடா சொல்ற...?" பேசிய மகனை இடைமறித்துக் கேட்டார் சதாசிவம்.

"அவ அப்படித்தான் உளறிக்கிட்டு இருக்காப்பா. நீங்க சொன்னது போல நான் அவ மனசைத் தெரிஞ்சுக்காம அவசரப்படல. அவளோட அன்பைத் தெரிஞ்சுக்கிட்டு தான் பேசிக்கிட்டு இருக்கேன். அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்குப்பா. ஆனா ஏதோ ஒரு காரணத்தால கல்யாணத்தையே அவ வெறுக்கிறாப்பா. இப்படியே விட்டா அவ தனக்குள்ளேயே மறுகி உருக்குலைச்சு போயிருவாப்பா. எனக்கு என்னோட மிருணா வேணும்ப்பா. அவளோட ஆரோக்கியம் எனக்கு ரொம்ப முக்கியம்பா. அவளோட நிலைமை தெரிஞ்சு தான் நான் இத்தனை தூரம் போராடுறேன். இப்ப இந்தக் கல்யாணத்தை மட்டும் நீங்க நடத்தி வைக்கலைன்னா நான் இத்தனை வருசமா எந்த மிருணாளினிக்காக காத்திருந்தேனோ அவ என்னை விட்டுப் போயிருவாப்பா. ஒண்ணு உயிரோட என்னைப் பிரிஞ்சு போயிடுவா இல்லைன்னா உயிரை விட்டு விடுவா. இரண்டில எது நடந்தாலும் அதுக்கப்புறம் நானும் உயிரோட இருக்க மாட்டேன்பா. அதுக்கு மேல உங்க இஷ்டம்ப்பா" உறுதியான குரலில் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டான் முகுந்தன்.

மகனது வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப் போய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் சதாசிவம் தம்பதிகள். ஆனால் நடந்த அத்தனையையும் பார்த்துக் கொண்டே அமைதியாக நின்றிருந்த காளீஸ்வரி மட்டும் மனதிற்குள் ஆண்டவனுக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தாள்.

''இப்ப என்னம்மா பண்றது? இவன் இப்படிச் சொல்லிட்டுப் போறானே?'' செய்வது அறியாமல் தாயிடம் கேட்டார் சதாசிவம்.

''என் பேரன் சொல்வது நூத்துக்கு நூறு உண்மை தான் சதா. மிருணா அப்படிச் செய்யக்கூடிய பெண் தான்.''

''என்னத்தை நீங்க வேற எங்க வயித்துல புளியைக் கரைக்கிறீங்க? நாங்க போய் அந்தப் பொண்ணுகிட்ட என்ன சொல்லி கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கிறது? என்னடா இவங்க வீட்டுக்கு வந்ததால தான நம்ம வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதுன்னு அவ நினைச்சுட்டா அப்புறம் நாங்க என்ன செய்வோம்? எனக்கு ஒண்ணுமே புரியலியேத்தை...'' புலம்பிய தன் மருமகளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள் காளீஸ்வரி.

''நீ ஒண்ணும் கவலைப்படாத சாந்தி. நான் இருக்கேன்ல. நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன். நம்ம மிருணாகிட்ட எப்படிப் பேசணுமோ அப்படிப் பேசி அவளைக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கிறேன்'' நம்பிக்கையுடன் கூறிய மாமியாரைப் பார்த்துவிட்டு தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் சாந்தி.

''மிருணாளினிக்கு சம்மதம் இல்லாட்டி இந்தக் கல்யாணத்தை நான் நடத்தவே விடமாட்டேம்மா. எனக்கு என் தங்கை மகளின் மனசுதான் முக்கியம்'' எச்சரிக்கையாகக் கூறினார் சதாசிவம்.

''அடப்போடா. என் பேத்தி மனசு எனக்கு தெரியாதா? நான் அவ பிறந்ததில் இருந்து அவளோட



குணத்தைத் தெரிஞ்சுக்கிட்டு வளர்த்தவடா. என் பேத்தியோட கண் அசைவை வெச்சே அவ மனசுக்குள்ள என்ன நினைக்கிறான்னு தெரிஞ்சுக்கிட்டு அதுப்படி நடக்கிறவ நானு. அது மனசு விருப்பப்படாட்டி, இந்த கல்யாணத்தை நீ என்ன நிறுத்தறது... நானே நிறுத்திடுவேன். ஆனா என் பேரனை மிருணா மனசார விரும்புதுய்யா. அது எனக்கு நல்லாத் தெரியும்'' உறுதியுடன் கூறினாள் காளீஸ்வரி.

''அப்புறம் ஏன் கல்யாணம் வேணாம்னு சொல்லுது? ஒருவேளை சுபாஷினியை நினைச்சு...''

''இப்பத்தான் நீ மிருணாவைக் கரெக்டாப் புரிஞ்சுக்கிட்டுப் பேசற. அது மனசுல அதைத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கு. சுபாஷினியும் நம்ம பிள்ளை தான்றதை நாமதான் அதுக்குப் புரிய வைக்கணும். அதுக்கும் மேல பிடிவாதம் பிடிச்சுச்சுன்னா நாமளும் பிடிவாதமா இருந்து இந்தக் கல்யாணத்தை நடத்த வேண்டியதுதான். மருந்து கசக்கத்தான் செய்யும். அதுக்காக நோய் தீர்க்கணும்னா அதை குடிச்சித்தான ஆகணும்.''

தன் உடலே தனக்குப் பாரமாகத் தோண கட்டிலில் சோர்வுடன் படுத்திருந்த மிருணாளினியின் அருகில் அமர்ந்து அவள் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்தாள் காளீஸ்வரி.

''மிருணாக் கண்ணு. இப்ப என்ன ஆகிடுச்சுன்னு நீ இப்படிப் படுத்துக்கிட்டு இருக்க? எல்லாம் நல்லதுக்குத் தான்னு நினைச்சுக்க ராசாத்தி.''

"என்னால அப்படியெல்லாம் நினைச்சுக்கிட்டு என் சுபாவை அனாதையா விட்டு விட முடியாது பாட்டி."

"ஏன்டா இப்படி பெரிய பேச்செல்லாம் பேசுற. நம்ம புள்ளை எதுக்காக அனாதையா நிக்கணும். அதுவும் நம்ம முகுந்தன் அதை அப்படி இருக்க விட்டுவிடுவானா?"

"பெத்த தகப்பனும் தாயுமே எங்களை அப்படி அநாதையாகத்தான நிக்க விட்டாங்க பாட்டி? நீங்க மட்டும் இல்லேன்னா அந்த வேலைக்காரங்க மத்தியில் நாங்க அநாதையாத்தான வளர்ந்திருப்போம். அப்படி இருக்கையில் எனக்கு வரப்போகும் கணவன் என் தங்கையை பாசத்துடன் பார்த்துக்குவார்னு நான் எப்படிப் பாட்டி நம்பறது? என்னதான் மாமா மகன்னாலும் தன் பொண்டாட்டி தனக்கு மட்டும்தான் உரிமையானவள்னு அவர் நினைச்சுட்டா நம்ம சுபா என்ன பாட்டி செய்வா?" பேத்தியின் கேள்விகளில் இருந்த நியாயம் புரிந்து அமைதியாக அமர்ந்து விட்டாள் காளீஸ்வரி.

"அப்படியே அவர் மனசு மாறாமல் சுபா மேல இதே அன்போட இருந்தாலும், நான் என் அம்மாவைப் போல சுயநலமா மாறிட்டா? ஒருவேளை நான் அவர் மேல வெச்ச பாசத்தால அம்மா எப்படி தன் புருசன்தான் உலகம்னு மாறினாங்களோ அதே போல நானும் மாறிட்டா அப்ப என்ன பாட்டி பண்றது? எப்படிப் பார்த்தாலும் என் கல்யாணம் சுபாவின் வாழ்வைப் பாதிக்கத்தான் செய்யும் பாட்டி. நான் அதுக்கு ஒரு நாளும் சம்மதிக்கவே மாட்டேன்" உறுதியுடன் கூறிய மிருணாளினியைப் பார்த்தபடி



எதுவும் கூறாமல் அறையை விட்டு வெளியேறினாள் காளீஸ்வரி.

## 24



இரவின் நிசப்தம் தன் புண்பட்ட மனதிற்கு அமைதியைக் கொடுக்க எல்லையில்லாத அந்த இருட்டுக்குள் வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் மிருணாளினி. ஏனோ அந்த இருட்டும் தன் எதிர் காலமும் ஒன்றுதான் என்று எண்ணிக் கொண்டது அவளது மனம்.

விளையாட்டுப் போல அவள் இங்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. அன்று மிருணாளினியிடம் வந்து பேசிவிட்டுச் சென்ற காளீஸ்வரி தன் பேரன் முகுந்தனிடம் என்ன கூறினாளோ தெரியாது. அதன் பின் எக்காரணம் கொண்டும் முகுந்தன் மிருணாளினியிடம் பேச முற்படவில்லை. முழுமையாக அவளிடம் பேச்சை நிறுத்திக் கொண்டது மட்டும் இல்லாமல் அவளைப் பார்ப்பதையும் அவள் கண்களில் படுவதைக் கூட முழுமையாகத் தடுத்துவிட்டான். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் அவளது பார்வையில் பட்டுவிட்டாலும் கூட அவசரமாக அந்த இடத்தில் இருந்து அகன்று விடுவான்.

அவனது நடவடிக்கைகளைப் பார்த்த மிருணாளினியும் நத்தை கூட்டுக்குள் ஒடுங்குவதைப் போல முகுந்தன் வீட்டில் இருக்கும் நேரங்களில் தன் அறைக்குள் அடைந்து கொள்வாள்.

காலையிலும் மாலையிலும் சுபாஷினியோடு மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருக்கும் முகுந்தனின் குரலை மட்டும் கேட்டுக் கொண்டே அமைதியாக அமர்ந்திருக்கும் பேத்தியைப் பார்த்த காளீஸ்வரி பெருமூச்சு விட்டுக் கொண்டே அவளை விட்டு அகன்றுவிடுவாள். தனது வாழ்க்கையே தனிமைச் சிறைக்குள் அகப்பட்டுக் கொண்டதைப் போல மூச்சு முட்டிய நிலையிலும் கூட அந்த தனிமையை தவிர்க்கும் எண்ணமே தோன்றாதவளாய் அந்தத் தண்டனையையும் விரும்பி அனுபவித்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி.

மிருணாளினியிடம் மட்டும் தான் முகுந்தன் விட்டேற்றியாக இருந்தானேயொழிய சுபாஷினியை அவன் முழுமையாகத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான். சுபாஷினியை காலையில் பள்ளியில் கொண்டு போய் விட்டுவிட்டுத்தான் முகுந்தன் தன் அலுவலகம் செல்வான். அதேபோல மாலையிலும் சரியாக அவளது பள்ளி விடும் நேரத்தில் முகுந்தனின் கார் சுபாஷினிக்காக அவளுடைய பள்ளியின் வாசலில் நிற்கும். சுபாஷினியை அழைத்துக் கொண்டு போய் டியூசனில் விட்டுவிட்டுத் தன் வேலையை பார்க்கச் சென்றுவிடும் முகுந்தன், அவளையும் அழைத்துக் கொண்டு தான் வீடு திரும்புவான்.

தன் ஒரே மகன் தன் நாத்தனாரின் மகளுக்காக இப்படி விரைவிலேயே வீட்டை விட்டு கிளம்பி விட்டு



லேட்டாக வீடு திரும்புவதை எண்ணி சாந்தி என்றுமே தன் முகம் சுளித்ததில்லை. மாறாக அவளும் தன் பங்கிற்கு சுபாஷினிக்குப் பிடித்த சமையல், சுபாஷினிக்குப் பிடித்த பூ, என்று சுபாஷினியை அன்னையில்லாத குறை தெரியாமல் வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தாள். தன் மகனை மணக்க மறுத்தவள் தானே என்ற எண்ணம் இல்லாமல் மிருணாளினியையும் கூட அதே பாசத்துடன் அரவணைத்துக் கொண்டிருந்தாள்.

சதாசிவமோ எல்லாவற்றையும் கண்காணிப்பவராக அனைத்தையும் கவனித்துக் கொண்டே தன் தங்கை மகள்களை மகிழ்ச்சியாக வாழ வைப்பது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டவராக அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டார்.

பெற்ற மகன் வீடிருந்தும் அநாதையாக வெளியில் சுற்றிக் கொண்டிருக்க வீட்டில் இருக்கும் மிருணாளினி லேசாக முகம் சுளித்தாலும் கூட அவளது முகமாற்றத்தைக் கவனித்து அவளது கவலையை நீக்கி விடத் துடித்த தன் அத்தையையும் மாமாவையும் எண்ணி குற்ற உணர்ச்சியில் துடித்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி.

தோட்டத்தில் இருந்து வந்த குளிர் காற்று உடலை ஆதரவாக தழுவ மிருணாளினியின் துன்பம் அவளது கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீராக அவளது கன்னங்களில் வழியத் துவங்கியது. யாருமற்ற தனிமையான சூழல் அவள் தன் துன்பத்தைக் கண்ணீரால் ஆற்றிக் கொள்ள வழிச் செய்து கொடுத்தது. சத்தமில்லாமல்

விம்மிக் கொண்டே பால்கனியின் சுவரில் லேசாகச் சாய்ந்து நின்று கொண்டாள் மிருணாளினி.

'எம்மா இப்படியொரு சுயநலமான முடிவை நீங்க எடுத்தீங்க? நாங்க என்ன பாவம் செய்தோம்? போகணும்னு முடிவெடுத்திருந்தா எங்களையும் உங்களோட கூட்டிக்கிட்டுப் போக வேண்டியதுதானே? நாங்க மறுத்திருக்க மாட்டோமே? இப்படி எங்களைத் தனியா தவிக்க விடும் தண்டனையைக் கொடுக்கும்படி நாங்க உங்களை அப்படியா சிரமப்படுத்தினோம். கஞ்சிக்கு வழியில்லாத ஏழைத்தாய் கூட தன் பிள்ளைகளை இப்படி அநாதையா தவிக்க விட்டுவிட்டுப் போக யோசிப்பாளே? கோடீஸ்வரியான உங்க மனசில் மட்டும் எதனால அந்தப் பாசம் இல்லாமல் போனது?' என்றும் போல அலையலையாய் கேள்விகளை இறந்து போன தாயிடம் மானசீகமாகக் கேட்டுக் கொண்டே விம்மிக் கொண்டிருந்த மிருணாளினியை இருட்டில் மறைந்து நின்று கொண்டிருந்த முகுந்தன் வேதனையுடன் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான். அவனது கண்களில் இருந்தும் மிருணாளினியின் மீது அவன் கொண்ட காதலின் அடையாளமாகக் கண்ணீர் வழிந்தது. அதைத் துடைக்கும் மனமின்றி இருட்டோடு இருட்டாக மறைந்து அமர்ந்திருந்தான் முகுந்தன்.

என்று தன்னை மணக்க மிருணாளினி மறுத்துவிட்டாளோ அன்றே முகுந்தனின் உறக்கம் அவனது கண்களை விட்டுச் சென்றுவிட்டது. அவன் சதாசிவத்திடம் கூறியதுபோல மிருணாளினி தன்னை விட்டுப் பிரிந்துவிட்டால் என்ன செய்வது என்ற நினைவில்



தூக்கத்தைத் தொலைத்தான். தன்னுடைய அன்பினை மறுத்த மிருணாளினியை நேரடியாகப் பார்க்கக் கூட விரும்பாத அவனது உள்ளம் அவளை விட்டுப் பிரியவும் அஞ்சியது. இரவின் தனிமையில் இருட்டில் துணையோடு மிருணாளினி இருக்கும் அறையைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருப்பான் முகுந்தன். தன்னையறியாமல் தூக்கம் தன் கண்களை அழுத்தினால் மட்டுமே அவ்விடத்தை விட்டுச் செல்வான்.

அப்படி அமர்ந்திருக்கும் நேரங்களில் எல்லாம் மிருணாளினியும் தன்னைப் போலவே தூக்கமில்லாமல் அமைதி இல்லாமல் தவித்துக் கொண்டிருப்பதை அறிந்தவனின் உள்ளம் இனம்புரியாத வகையில் அமைதியடைந்தது. தன்னுடைய காதலை மிருணாளினி மறுத்தாலும் தன்மேல் அவளுக்கு எல்லையற்ற காதல் இருப்பதை அவளது இந்த கண்ணீரால் அவன் உணர்ந்து கொண்டான்.

ஒருவர்மேல் ஒருவர் எல்லையற்ற அன்பினை மனதில் கொண்டிருந்தாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் சூழ்நிலை அமையாத அந்தக் காதலர்களை ஆறுதலாகத் தழுவியது தோட்டத்தின் தூய்மையான காற்று. புல் பூண்டிற்கும் கூட வித்தியாசம் இல்லாமல் தன்னுடைய தன்னொளியைப் பாரபட்சம் இல்லாமல் அள்ளி வழங்கும் நிலவும் கூட அவர்களின் துன்பத்தை அறிந்து மேகத்தின் பின்னால் சோகத்துடன் மறைந்து கொண்டது.

# 25



''மிருணாக் கண்ணு... சாப்பிடும்மா. சாப்பாட்டை இப்படிப் பார்த்துக்கிட்டே உட்கார்ந்திருந்தா வயிறு நிறைஞ்சிடுமா?'' நான்கே மாதங்களில் பாதி உடம்பாகப் போய் விட்ட பேத்தியை வேதனையுடன் பார்த்தாள் காளீஸ்வரி.

'இந்தப் பாழாய்ப் போன காதல் இரண்டு பேரையும் வாழ வைக்காமல் இப்படி உயிரோடு சாகடிச்சுக்கிட்டு இருக்கே? இதுக்கு முடிவுதான் என்ன' மனதிற்குள் குமைந்து கொண்டு பேத்தியின் தலையை வருடினாள் காளீஸ்வரி.

''போதும் பாட்டி. சாப்பிட முடியல'' தன் முன்னால் இருந்த தட்டைத் தள்ளி வைத்துவிட்டு எழுந்துவிட்டாள் மிருணாளினி.

''ஏன்டா கண்ணு? சாப்பாடு நல்லா இல்லையா? நான் வேணும்னா வேற ஏதாச்சும் செஞ்சு எடுத்துக்கிட்டு வரவா?'' பதறிய பாட்டியைப் பார்த்த மிருணாளினியின் இதழ்கள் வேதனையுடன் புன்னகைத்தது.

''சாப்பாடெல்லாம் நல்லாத்தான் இருக்கு பாட்டி. ஆனால் என் மனசுதான் நன்றாக இல்லை.''

''ஏன்டா கண்ணு இப்படிப் பேசுற? உன் மனசு சங்கடப்படறதை பார்க்கவா நான் உயிரோட உன்கூட



இருக்கேன். இந்தத் துன்பம் எல்லாமே உனக்கு நீயாக வரவழைச்சுக்கிட்டது மிருணாம்மா. நீ மட்டும் சரின்னு சொல்லு. உலகத்தின் அத்தனை சந்தோசத்தையும் உன் காலடியில் கொண்டு வந்து கொட்டுவான் உன் மாமன்.''

''காலடியில் கொட்டினா சந்தோஷத்துக்கு மதிப்பிருக்காது பாட்டி. அதுபோலத்தான் யாருமே இருக்கிற இடத்தில் இருந்தால்தான் மரியாதை. அதை விட்டுக் கொஞ்சம் கீழே இறங்கினாக் கூட அவங்க வாழ்க்கை அவங்க கிட்ட இருக்காது.''

''இப்படியே நூத்துக் கிழவி மாதிரி பேசிக்கிட்டே இருந்தா இதுக்கு முடிவுதான் என்ன கண்ணு? உனக்கும் வயசு ஏறிக்கிட்டே போகுதில்ல? எதுவுமே அந்தந்த காலத்தில் நடந்தால்தான் நல்லது மிருணா. இப்பவுமே ரொம்ப லேட் தான் மிருணா. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளு தாயி.''

''நாலே மாசத்தில எனக்கு வயசாகிடுமா பாட்டி? இதே வார்த்தையை நாம மும்பையில் இருந்தப்ப நீங்க சொல்லலியே?''

''அப்ப இந்தக் கேள்வியை உங்கப்பா கேட்டுக்கிட்டு இருந்தாரு மிருணா. அவர்கிட்ட நீ மறுத்துச் சொன்னதுக்கு அப்புறமும் நான் உன்னை என்ன சொல்வது?''

''அதே போலத்தான் இப்பவும். எனக்கு கல்யாணத்தில் விருப்பம் இல்லை. ஏன்... நான் கல்யாணமே பண்ணிக்கவும் மாட்டேன். என் சுபாவின் வாழ்க்கை மட்டும்தான் எனக்கு முக்கியம். தயவு செய்து என்னை என் பாதையில் விட்டுவிடுங்க.''

"ஆத்தாடி... என் தலையில கல்லை தூக்கிப் போட்டு விடாத தாயி. என் கையில் உன்னைப் பிடிச்சுக் கொடுத்திருக்க தைரியத்தில்தான் உங்கம்மா மகராசியாப் போயிட்டா. நான் எப்பவும் உங்க ரெண்டு பேத்தையும் கரை சேர்த்துடுவேன்னு நம்பித்தான் என் பொண்ணு ஆத்மா என்னைச் சுத்திக்கிட்டு இருக்கு. நீ என்னடான்னா இப்படிப் பெரிய பெரிய முடிவை எல்லாம் சாதாரணமாச் சொல்ற?"

"இப்ப எதுக்குப் பாட்டி இப்படிச் சத்தம் போடறீங்க? அத்தை மாமா காதில விழுகப் போகுது..." பதறினாள் மிருணா.

"விழுகட்டும்... நல்லாக் கேட்கட்டும். அப்பத்தான் அவங்களுக்கும் நாலு நல்லதை எடுத்துச் சொல்ல சமயம் வாய்க்கும். நீ தப்பா நினைச்சுக்குவன்னு தான் அவங்க வாயை மூடிக்கிட்டு அமைதியா இருக்காங்க. இப்ப நீயே இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கன்னு தெரிஞ்சாலாவது வாய் திறந்து பேசுவாங்கள்ல?" உரத்த குரலில் கூறிய தன் பாட்டியின் வாயை பயத்துடன் பொத்தினாள் மிருணாளினி.

"நான் ஒரு முடிவை எடுத்தா அதில் இருந்து மாற மாட்டேன்னு உங்களுக்கே தெரியும்தானே? அப்புறம் எதுக்கு இப்படி கூப்பாடு போட்டு அடுத்தவங்களை இதில் இழுக்கறீங்க? நான் சொன்னா சொன்னதுதான். இதுக்கு என்கூட உங்களுக்குத் துணையா இருக்க முடிந்தால் இருங்க. இல்லைன்னா உங்க பேரன் தான் உங்களுக்கு உயர்வுன்னா அவர் கூடவே இருந்துக்கங்க. எங்கலள நான் பார்த்துக்கறேன். எனக்கு அந்த



தைரியமும் துணிச்சலும் நிறையவே இருக்கு" உறுதியுடன் கூறிய பேத்தியைப் பார்த்துத் தன் நெஞ்சில் கை வைத்துக் கொண்டே சிலையாக நின்றுவிட்டாள் காளீஸ்வரி.

"அதுமட்டும் இல்லை பாட்டி. நான் நம்மோட வீட்டுக்குக் குடிபோகலாம்னு இருக்கேன்..." தயக்கத்துடன் சொன்ன பேத்தியைப் புரியாமல் பார்த்தாள் அவள்.

"நம்ம வீட்டுக்குன்னா... திரும்பவும் மும்பைக்கா."

"நான் மும்பை வீட்டைப் பத்திச் சொல்லலை. இங்க பழனியில் நாம வாங்கியிருக்கோமே... அந்த வீட்டிற்குப் போவதைப் பற்றிச் சொன்னேன். ஏற்கெனவே நம்மோட மும்பை வீட்டில் இருந்த சாமானெல்லாம் அந்த வீட்டில் தான் வந்து இறங்கியிருக்கு. வீட்டுக்குள் போட்டுப் பூட்டி வெச்சிருக்கேன். நாம ரெண்டு பேரும் நாளைக்குப் போய் அதையெல்லாம் செட் பண்ணி வெச்சுட்டு வந்திடலாம். காலையில் கிளம்பி ரெடியா இருங்க."

"என்னம்மா மிருணாளினி? திட்டம் எல்லாம் பலமா போட்டுக்கிட்டு இருக்க? இத்தனை நாளா நம்மளை வெச்சுத் தாங்கிக்கிட்டு இருக்க என் மகன் சதாசிவம் கிட்ட ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? நீயா எல்லாத்தையும் முடிவெடுக்க இது மும்பை இல்லை. பாளையம். நான் என் மகன்கிட்டக் கேட்காம எந்த முடிவையும் உன்னைத் தனியா எடுக்க விடமாட்டேன். நாளைக்கு ஏதாவது ஒண்ணுன்னா நமக்காக அவனும் என் பேரனும்தான் வந்து நிக்கணும். தனியா ரெண்டு வயசுப்

பொண்ணுங்க வாழறதுன்றது அவ்வளவு ஈஸியான காரியம்னு நினைச்சியா? சின்னப்புள்ளைன்றது சரியாத் தான் இருக்கு...'' முதல்முறையாகத் தன்னை எதிர்த்துப் பேசிய காளீஸ்வரியின் வார்த்தைகள் மிருணாளினிக்கு வியப்பைத் தந்தது.

''என்ன பாட்டி இது? என் பேத்தி முடிவெடுத்தா எதுவுமே சரியா இருக்கும்னு சொல்ற நீங்களா இப்படிப் பேசறீங்க...?''

''அப்பல்லாம் நீ சரியான முடிவுகளை எடுத்த மிருணா. நான் அதையெல்லாம் ஆதரிச்சேன். ஆனா இப்ப நீ எடுத்திருக்க இந்த முடிவு உணர்ச்சிவசத்தால எடுத்த முடிவு. இதை நான் ஆதரிச்சா உங்களை இத்தனை காலம் வளர்த்து ஆளாக்கினதுக்கு அர்த்தம் இல்லாம போயிடும் மிருணா. இதை நான் ஒரு நாளும் ஒத்துக்க மாட்டேன் கண்ணு. தயவு செய்து உன் முடிவை மாத்திக்க. காலப்போக்குல எல்லாம் சரியாப் போயிடும். என்னை நம்பு...'' பேத்தியின் தாடையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் காளீஸ்வரி.

''இல்ல பாட்டி. நீங்க என்ன சொன்னாலும் நான் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் கேட்க மாட்டேன். நாம தனியாப் போறதுதான் நம்ம எல்லோருக்கும் நல்லது பாட்டி. முக்கியமா... உங்க பேரனோட வாழ்க்கைக்கு அதுதான் ரொம்ப நல்லது. நான் சொல்வதைப் புரிஞ்சுக் கங்க'' உறுதியாகக் கூறிய தன் ஆசைப் பேத்தியின் மனதைப் புரிந்து கொண்ட காளீஸ்வரி மேற்கொண்டு பேச நாவெழாமல் திக்பிரமை பிடித்தவள் போல் நின்று விட்டாள்.



# 26



மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்டு இருந் ததைக் கூட அறியாதவளாய் காலத்தையும் கவனத்தில் கொள்ளாமல் அமர்ந்திருந்தாள் காளீஸ்வரி.

''அத்தை... அத்தை... காபி எடுத்துக்கங்கத்தை'' மாமியாரின் முகத்தைக் குழப்பத்துடன் பார்த்தாள் சாந்தி.

''என்னங்கத்தை... எதுக்காக இப்படி விளக்கு வைக்கிற நேரத்தில கன்னத்தில் கை வைச்சுக்கிட்டு உட்கார்ந் திருக்கறீங்க?'' கவலையுடன் கேட்ட மருமகளின் முகத்தைப் பார்த்த காளீஸ்வரியின் துக்கம் அணை உடைத்த வெள்ளமாய் பெருகியது.

''நான் என்னத்தை சொல்ல சாந்தி? என் பேத்திகள் ரெண்டு பேரையும் கந்தலில் கட்டி வெச்ச மாணிக்கமாய் பாதுகாத்து இதுவரை நல்லபடியா வாழவெச்சுட்டேன். ஆனா இப்ப அதுகளோட வாழ்க்கையே இருட்டாயிடும் போலத் தோணுதே? இந்தக் கொடுமையை நான் யாருகிட்டச் சொல்ல? எதைச் சொல்லி என் மனசை ஆத்திக்க? எனக்கு ஒண்ணும் புரியலியே சாந்தி? நான் என்ன செய்வேன்?'' துக்கத்தால் தொண்டை அடைக்கக் கம்மிய குரலில் புலம்பிய மாமியாரின் வார்த்தைகள் சாந்தியின் உள்ளத்தில் பீதியைக் கிளப்பியது.

''என்னங்கத்தை சொல்றீங்க? நீங்க சொல்ல வர்றதை கொஞ்சம் தெளிவாத்தான் சொல்லுங்களேன். நீங்க இப்படிப் பூடகமாப் பேசுறதைப் பார்த்தா என் ஈரக் குலையே நடுங்குதே... என்னதான் நடந்தது... சொல்லுங்கத்தை..'' தன் மாமியாரைப் பார்த்துப் பதட்டத்துடன் கேட்டாள் சாந்தி.

''நம்ம மிருணாளினி பழனியில் வாங்கியிருக்கிற வீட்டுக்குத் தனியாப் போய் இருந்துக்கலாம்னு சொல்லுதும்மா. வயசுப் பொண்ணுங்க ரெண்டு பேரும் தனியா வாழற மாதிரியா ஊர் உலகம் இருக்கு? நான் எவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் கேட்காம தன் முடிவிலேயே உறுதியா நிக்குது. ஏதோ நான் உயிரோட இருக்கிற வரைக்கும் அதுகளுக்குத் துணையா இருந்துருவேன். அதுக்கப்புறம் இந்தப் புள்ளைகளோட கதி என்ன ஆகும்?''

''இதுக்குத்தான் இப்படிப் பதறினீங்களாத்தை. நாங்க மிருணாவை அப்படியெல்லாம் தனியாகப் போக விட்டுவிடுவோமா. நீங்க பேசாம இருங்க. உங்க மகன் வந்ததும் நான் மிருணாகிட்ட அவரைப் பேசச் சொல்றேன். மாமாவின் பேச்சை நம்ம மிருணாளினி தட்டாது. அதனால நீங்க கவலைப்படாம இருங்கத்தை'' தனக்குத் தைரியம் சொன்ன சாந்தியை தைரியம் அற்றவளாகப் பார்த்தாள் காளீஸ்வரி.

''உனக்கு மிருணாளினியைப் பத்தித் தெரியாது சாந்தி. மும்பைல அத்தனை பெரிய பெரிய ஆளுங்களைக் கூட தைரியமா எதுத்து நின்னு தன்னோட சொத்தைக் காப்பாத்தின பொண்ணு அது. அதோட



துணிச்சலும் தைரியமும் எனக்கு மட்டும்தான் தெரியும். அது ஒரு முடிவை எடுத்தா அதை யார் சொன்னாலும் மாத்திக்காது. அது மனசுக்கா சரின்னு பட்டால் மட்டும்தான் அந்த முடிவை மாற்ற முடியும்.''

''அது மனசுக்கு சரின்னு படற மாதிரியே உங்க மகனைப் பேசச் சொல்றேன். அதையும் தான் பார்ப்போமே'' மிகவும் சுலபமாகக் கூறினாள் சாந்தி.

ஆனால் மிருணாளினியின் மனதை அவ்வளவு சுலபமாக சதாசிவத்தால் மாற்ற முடியவே இல்லை. அவர் எவ்வளவோ வாதாடிப் பார்த்தும் அவரது வார்த்தைகளால் மிருணாளினியின் முடிவைத் தடுக்க முடியவில்லை. அவள் மிகவும் தெளிவாகவும் மரியாதையாகவும் தன் முடிவில் உறுதியாக நின்றுவிட்டாள்.

''தயவுசெய்து என்னைத் தவறாக நினைக்க வேண்டாம் மாமா. நான் என்னோட வீட்டில் இருக்குறதுதான் சரின்னு படுது. அதற்காக உங்களைப் பிரிச்சுப் பார்க்கறேன்னு நினைக்காதீங்க மாமா. எங்களுக்கு ஒண்ணுன்னா நாங்க உங்ககிட்டத்தான் வருவோம். அது எங்க உரிமை. ஆனா அந்த உரிமையைக் கொஞ்சம் தள்ளி நின்னு அனுபவிக்கணும்னு நினைக்கிறேன். இதனால எல்லோர் வாழ்க்கையுமே நல்லா அமையும்னு எதிர்பார்க்கிறேன் மாமா. அதனால என்னை என் போக்கில விட்டுவிடுங்க'' மிகவும் தெளிவுடன் கூறிய தங்கை மகளைத் தடுக்க வார்த்தைகள் அற்று திகைத்தார் சதாசிவம். அவரது அந்த சிறு மௌனத்தையே சம்மதமாகக் கொண்டு தன் அறைக்குத் திரும்பிவிட்டாள் மிருணாளினி.

சுபாஷினியோடு பேசிச் சிரித்துக் கொண்டே வந்த முகுந்தனின் முகம் கவலையுடன் அமர்ந்திருந்த மூவரையும் பார்த்துக் குழப்பமடைந்தது. சுபாஷினியும் எதையோ புரிந்து கொண்டவளாய்த் திரும்பி முகுந்தனின் முகம் பார்த்தாள்.

ஒன்றும் புரியாமல் தன் அருகில் அமர்ந்து தன் தோளைத் தொட்ட சுபாஷினியைப் பார்த்ததும் காளீஸ் வரியால் அதற்கு மேல பொறுமையாக இருக்க முடியவில்லை. அவள் பேத்தியின் கைகளைப் பற்றிக் கொண்டு அனைத்தையும் கொட்டித் தீர்த்துவிட்டாள்.

பாட்டியின் குமுறலைக் கேட்ட சுபாஷினி பயத்துடன் முகுந்தனின் முகம் பார்த்தாள். அவளது கண்களில் தெரிந்த பயத்தைக் கண்ட முகுந்தனின் முகம் கனிந்தது.

"நீ ஏன் சுபா பயப்படுற? உங்க அக்கா எப்படித் தனிக் குடித்தனம் போறான்னு நானும்தான் பார்க்கிறேனே. நீ போய் பிரெஷ்சாகிட்டு வந்து படிக்கிற வேலையைப்பார். மத்த கவலையெல்லாம் உனக்கு வேண்டாம்'' இந்த ஆறுதலையும் அன்பையும்தான் சுபாஷினி எதிர்பார்த் தாள். எதிர்பார்த்தாள் என்பதை விட ஏங்கினாள் என்று கூட சொல்லலாம்.

என்னதான் மிருணாளினி தன் உயிரைக் கொடுத்து பாதுகாத்தாலும், அன்பு காட்டினாலும் ஒரு ஆணின் பாதுகாப்பையும் அரவணைப்பையும் தர அவளால் முடியாது என்பது சுபாஷினிக்கு நன்றாகப் புரிந்தது. தாங்கள் வந்த அன்று மிருணாளினி சொன்ன வார்த்தை அவளது அடி மனதில் ஆழமாகப் பதிந்து அதன் முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டாள் சுபாஷினி.



"இந்த சொந்தங்களின் நடுவில் இருப்பதுதான் நமக்குப் பாதுகாப்பு சுபா'' அன்று தன் அக்கா கூறிய வார்த்தைகள் சுபாஷினியின் காதில் அப்படியே ஒலித்தது.

அன்று சொன்ன வார்த்தைகளின் பொருள் இன்று எப்படி மிருணாளினிக்குப் புரியாமல் போனது என்று எண்ணித் திகைத்தாள் சுபாஷினி.

அதற்கான காரணம் முகுந்தன்தான் என்பதை புரிந்து கொள்ள முடியாத குழந்தை அல்ல சுபாஷினி. ஆனால் முகுந்தன் தான் தன் அக்காவிற்கு நல்ல கணவனாக இருக்க முடியும் என்பதை உறுதியாக நம்பினாள் அவள்.

முகுந்தன் மிருணாளினியின் மேல் கொண்டு இருந்த ஆழமான காதலை சுபாஷினி உணர்ந்துதான் இருந்தாள். அதனாலேயே முகுந்தனிடம் அவள் மிகுந்த அன்பு கொண்டிருந்தாள். மிருணாளினியும் முகுந்தனை மனமாரக் காதலிக்கிறாள் என்பதும் சுபாவிற்குத் தெரியும். எத்தனையோ இரவுகளில் உறக்கம் வராமல் இருட்டை வெறித்துக் கொண்டு நின்றிருக்கும் மிருணாளினியைப் பார்த்து வேதனையுடன் தானும் உறங்காமல் விழித் திருப்பாள் அவள்.

"பாட்டி... அக்கா இப்படியொரு முடிவுக்கு வருவ தற்கு வேற ஏதாவது காரணம் இருக்கும் பாட்டி. ஏன்னா நாம இங்கதான் இருக்கணும்னு அக்கா நாம இங்க வந்த அன்னிக்கே தெளிவா என்கிட்ட சொன்னாங்க. ஆனா இப்ப அவங்களே தனியாப் போகணும்னு சொன்னா அதுக்கான காரணம்...'' தன் வார்த்தைகளை (மடிக்காமல்

தன்னைப் பார்த்த சுபாஷினியின் பார்வையின் பொருள் புரிந்த முகுந்தனின் கை முஷ்டி இறுகியது.

''ஆனா அக்கா ஒரு முடிவெடுத்தா அதை மாத்தறதும் கொஞ்சம் கஷ்டம்தான். ஏன்னா...'' சுபாஷினியின் பேச்சைப் பாதியில் நிறுத்தியது முகுந்தனின் குரல்,

''அதையும் பார்ப்போம்...'' அழுத்தமாகக் கூறி விட்டு மிருணாளினியின் அறைக்குள் நுழைந்து கதவை அடைத்த முகுந்தனின் கோபத்தைப் பார்த்துப் பதறிய காளீஸ்வரியின் கரத்தை அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள் சுபாஷினி.

# 27



அறைக்குள் புயல்போல் நுழைந்து கதவடைத்த முகுந்தனின் வரவை ஓரளவிற்கு மிருணாளினி எதிர் பார்த்தே இருந்தாள். எனவே அவள் திரும்பியும் பார்க்காமல் தன் முன் இருந்த பெட்டிகளில் ஆடைகளைக் குனிந்து அடுக்கிக் கொண்டே இருந்தாள்.

''மகாராணி அவங்களோட அரண்மனைக்குப் போக ரெடியாகிறாங்க போல இருக்கு. பேக்கிங்கெல்லாம் நடக்குது?'' குத்தலாகக் கேட்ட முகுந்தனை நிமிர்ந்துக் கூடப் பார்க்கவில்லை மிருணாளினி.

''ஏன்... இந்த வீட்டில் உங்களுக்கு ஏதாவது வசதி குறைச்சலா இருக்கா?''



''..........''

''ஏதாவது தேவைன்னா உடனுக்குடன் செய்து கொடுத்து விடுகிறோம் ராணி. இதுக்காகவெல்லாம் நீங்க இந்த ஏழையோட வீட்டை விட்டுப் போகத் தேவையில்லை.''

''........''

''உங்களுக்கு உங்களோட மும்பை அரண்மனையைப் போல சகல வசதிகளோட இந்த வீடு இல்லாமல் போகலாம். ஆனால் இந்த வீட்டில் இருக்கிறவங்களுக்கு நீங்கதான் உயிரா இருக்கீங்களே... அதுவாவது உங்களுக்குத் தெரியுமா?'' முகுந்தனின் கேள்விகள் ஒவ்வொன்றும் தன் இதயத்தில் ஈட்டியாகப் பாய்ந்தாலும் தன் வாயை திறக்கவில்லை மிருணாளினி. அவள் தன் போக்கில் வேலையை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த முகுந்தனின் கோபம் கூடியது.

''ஒருவேளை நான் இந்த வீட்டில் இருப்பதுதான் உங்களுக்கு இடைஞ்சலா இருந்ததுன்னா... நான் வேணுமின்னா எங்காவது போய்க்கிறேன். நீங்க தாராளமா...'' அவனது வார்த்தைகளைக் கேட்டவள் வேகமாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாளேயொழிய கைகள் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தது.

''வாயைத் திறந்து பேசு மிருணா. என்னை ரொம்பச் சோதிக்காத. அப்புறம்...''

''........''

''என்னடி திமிரா? நீ பெரிய கோடீஸ்வரியா இருந்தா உன்னோட. என்னைப் பார்த்தால் உனக்கு

இளிச்சவாயன் மாதிரித் தெரியுதா? பதில் பேசு மிருணா. என்னைக் கொலைகாரனா மாத்தாத...'' பல்லைக் கடித்தவனின் கோபத்தில் பயம் தோன்றினாலும் அவனை ஏறிட்டும் பார்க்காமல் தன் துணிகளை எடுத்து அடுக்கிக் கொண்டே இருந்தவளின் கைகள் அவளை யறியாமல் நடுங்கியது.

தான் இவ்வளவு பேசியும் தன்னை நிமிர்ந்தும் பார்க் காத மிருணாளினியின் செயல் முகுந்தனின் கோபத்தை எல்லை மீறச் செய்தது.

வேகமாக அவள் அருகில் வந்து அவள் முன் இருந்த பெட்டியைத் தூக்கி அவள் தலை மேல் போட வெறி யுடன் ஓங்கிய முகுந்தன், மிருணாளினியின் பயந்த பார்வையால் அதைத் தூக்கி எதிரில் இருந்த சுவரில் ஓங்கி அடித்தான்.

சுக்கல் சுக்கலாகச் சிதறிய பெட்டியைப் பார்த்து அலறவும் வாய் வராமல் திக்கித்து நின்றாள் மிருணாளினி.

அறைக்குள் இருந்து வந்த சத்தத்தில் குலை நடுங்க எழுந்த காளீஸ்வரியை அதட்டி அமர வைத்தாள் சுபாஷினி.

''ஐயோ கண்ணு, மிருணா பூ மாதிரிடா. இந்த முரட்டுக் கோபத்தை அதால தாங்கிக்க முடியாதுடா'' கைகள் நடுங்கக் கூறிய காளீஸ்வரியை அணைத்துக் கொண்டாள் சுபா.

''பாட்டி... இப்படிப் பொத்திப் பொத்தி வெச்சுத்தான் அதுக்கு நல்லது கெட்டது தெரியாம பிடிவாதம் பிடிக்குது. மாமா அக்காகிட்ட பேசட்டும் பாட்டி...''



''உன் மாமா பேசற லட்சணம்தான் தெரியுதே. அந்த பச்சப்புள்ளையை இப்படியா மிரட்டுவான்..'' சதாசிவம் தன் தலையில் கை வைத்துக் கொண்டார்.

'நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் ஒண்ணும் ஆகாது. மாமா எங்க அக்கா மேல ஒரு துரும்பைக் கூடப் போட மாட்டார். சும்மா அக்காவை வாயால மிரட்டுவார். அவ்வளவுதான்...'' தான் அறியாத தன் மகனின் குணத்தை நேற்று வந்த சிறு பெண் கூறியதைக் கேட்டு வியந்தாள் சாந்தி.

அறைக்குள் தன் எதிரில் பயத்தில் திக்பிரமை பிடித்து நின்ற மிருணாளினியைப்பார்த்த முகுந்தன் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

அவன் மெதுவாக மிருணாளினியின் கையை பிடித்தான். அவள் வேகமாகத் தன் கையை உருவிக் கொள்ள முகுந்தனின் கோபம் மறுபடியும் தலை தூக்கியது.

''உன் மனசில் என்ன தான்டி இருக்குது? அதை தயவு பண்ணி சொல்லித் தொலை... ஒருவேளை வேற யாராவது ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்க நீ விரும்பறியா'' அவன் கேட்டு வாயை மூடும் முன் முகுந்தனின் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள் மிருணாளினி.

''ச்சீ... இவ்வளவுதான் நீங்களா? நீங்க நல்லா இருக்கணும்னுதான நான் இப்படியொரு முடிவை எடுத்தேன். என்னைப் போய்...'' அவன் முகத்தை வெறுப்புடன் பார்த்த மிருணாளினியின் கழுத்தில் கை

வைத்து சுவரோடு அவராக அழுத்திப் பிடித்தான் முகுந்தன்.

''ஏன்டி... உனக்கு எவ்வளவு ஆணவம் இருந்தால் என்னைக் கை நீட்டுவ? கொன்னுடுவேன் கொன்னு. நானும் போனால் போகுதுன்னு பார்த்தால் ரொம்பத்தான் திமிர் காட்டற?'' மூச்சு விட முடியாமல் திணறியவளைப் பார்த்து விட்டுத் தன் கையை எடுத்துக் கொண்டவன் அவள் தோள்களைப் பற்றி உலுக்கினான்.

''இப்ப என்னடி உன் பிரச்சனை? நான் தான் உன் கண்ணில் கூட படாமல் விலகித்தான போய்க்கிட்டு இருக்கேன். அப்புறம் என்னடி உனக்கு? பேசாம ராணியாட்டம் இங்க இருக்குறதை விட்டுப்புட்டு தனிக் குடித்தனம் போறாளாம். இந்த முகுந்தனை யாருன்னு நினைச்ச? உன் நிழல் கூட என்னை விட்டுப் பிரியறதை நான் அனுமதிக்க மாட்டேன் தெரிஞ்சுக்க...'' வேகமாக நிமிர்ந்து தன்னைப் பார்த்தவளைக் கூர்ந்து பார்த்தான் முகுந்தன்.

அவன் பார்வையின் வெப்பம் தாளாமல் தன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள் மிருணாளினி.

''இங்க பார். நான் சொன்னாச் சொன்னதுதான். ஒண்ணு வாழ்ந்தால் இந்த வீட்டில் இருந்து ராணி யாட்டம் வாழு. உன் அருகில் இருக்கும் சந்தோசம் மட்டும் போதும் எனக்கு. உன் மூச்சுக் காற்றின் சுவாசத்தை நானும் சுவாசம் பண்ணிக்கிட்டே நானும் வாழ்ந் திடுவேன். அப்படி இல்லைன்னா, பேசாம செத்துடு. நீயே போனதுக்கு அப்புறம் எனக்கு மட்டும் இங்க என்ன



வேலை? நானும் உன் கூடவே செத்துவிடுகிறேன். ஆனால் வாழ்வோ... சாவோ... அது இனி என்கூட மட்டும்தான். என்னோட வீட்டில்தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. இதை யாராலயும் மாத்தவும் முடியாது. நீ கூட...''

அவனது வார்த்தைகளை விழி விரியக் கேட்டபடியே அசையாமல் நின்று கொண்டிருந்தவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு வேகமாகக் கதவருகில் சென்ற முகுந்தன் திரும்பி அவளைப் பார்த்தான். அவன் தள்ளிய வேகத்தில் தரையில் விழுந்தும் அதே நிலையில் கிடந்த மிருணாளினியின் தோற்றம் அவனது இதயத்தைத் தொட்டது.

வேகமாக அவளை நெருங்கிக் குனிந்து தூக்கியவன் ஆவேசமாகத் தன்னுள் அவளை அணைத்து அவள் உச்சியில் முகம் புதைத்தான். அவனது கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் மிருணாளினியின் உச்சந் தலையை நனைத்தது.

முகுந்தனின் மார்பில் முகம் புதைத்துக் கதறித் தீர்த்துக் கொண்டிருந்த மிருணாளினியை அணைத்த வாறே அருகில் இருந்த சோபாவில் அமர்ந்து அவளை தன் தோள்களின் மீது சாய்த்துக் கொண்டான் அவன். தன் துக்கம் தீரும் வரை அவளை அணைத்துக் கதறிய வளின் அழுகை மெல்ல மெல்லத் தேய்ந்து சிறு விம்ம லாகக் குறைந்தது. அவளது தோள்களின் மீது கைபோட்டு அணைத்திருந்த முகுந்தனின் கரம் அவளது முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தது.

# 28



பிறந்ததில் இருந்தே அடுத்தவரின் ஆதரவை எதிர்பார்க்காமல் வளர்ந்தவள் மிருணாளினி. அதனாலேயே அவள் தன் அன்னையின் பாசத்தை எண்ணிக் கூட ஏங்கியதே கிடையாது.

அப்படிப்பட்டவளின் உள்ளம் இன்று முகுந்தனின் அரவணைப்பிலேயே தனது உயிர் போய்விடாதா என்று தவித்தது. தன் மேல் கோபம் கொண்ட முரடனாக நின்ற முகுந்தனின் ஆண்மை அவளைத் தடுமாற வைத்தது. தன் பெண்மையை அவனிடம் ஒப்புவித்துத் தன் காதலை அவனுக்கு உணர்த்த மிருணாளினியின் மனம் துடித்தது.

தன்னை விட்டு விலக விரும்பாமல் தன்னுடைய மார்பில் முகம் புதைத்துத் தன் துன்பத்தைத் தீர்த்துக் கொண்ட மிருணாளியின் பெண்மை முகுந்தனை நிலை குலையச் செய்து கொண்டிருந்தது. அவன் அறைக்கு வெளியே அவர்கள் இருவருக்காகவும் காத்துக் கொண்டிருந்த அனைவரையும் மறந்தான். அவனது எண்ணத்தில் அவனும் மிருணாளினியும் மட்டும்தான் நிறைந்து இருந்தார்கள். முகுந்தன் மெல்லத் தன் அணைப்பைத் தளர்த்த தன் முகம் உயர்த்தி அவனைக் கேள்வியாகப் பார்த்தாள் மிருணாளினி. அவளது



பார்வை அவனது ஆண்மையைத் தூண்ட அவன் மெல்லக் குனிந்து மிருணாளினியின் துடித்துக் கொண்டிருந்த இதழ்களுடன் தன் இதழ்களை இணைத்தான். எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் அவன் இதழ்களிடம் தன் இதழை ஒப்படைத்தாள் மிருணாளினி.

பொங்கிப் பெருகிய பிரவாகத்தின் அலைகளால் அடித்துச் செல்லப்படுபவர்களைப் போல் உணர்வுகளின் பிரவாகத்தால் அடித்துச் செல்லப்பட்ட இருவரும் ஒருவரை ஒருவர் அன்புடன் தழுவிக் கொண்டனர். தன் முதுகில் பரவிப் படர்ந்த மிருணாளியின் கரங்கள் முகுந்தனுக்குப் புது சொந்தத்தை உணர்த்தியது. தன் மேல் படிந்த முகுந்தனின் இதழ்கள் மிருணாளினிக்கு புது சொர்க்கத்தை தந்தது.

''மிருணா...'' கிறக்கத்துடன் ஒலித்தது முகுந்தனின் குரல்.

''ம்...?'' மயக்கத்துடன் கேட்டாள் மிருணாளினி.

''என்னை விட்டுப் போய்விடுவியாடி...?'' அவள் கையை எடுத்துத் தன் மார்பில் வைத்துக் கொண்டான் முகுந்தன்.

''போக மாட்டேன்...'' அவன் நெற்றியில் படிந்த கூந்தலை தன் விரல்களால் கோதிக் கொடுத்தாள் மிருணாளினி.

''அப்புறம் ஏன்டி அப்படியொரு முடிவை எடுத்த?'' ஆறாத ரணத்துடன் கேட்டான் முகுந்தன்.

''ம்ப்ச்... அதை விடுங்க...'' முற்றுப்புள்ளி வைத்து பேச்சை முடித்தாள் அவள்.

''மிருணா...''

''ம்ம்...''

''நீ என்னை விரும்பறியா இல்லையா?''

''ம்ப்ச்...''

''பதில் சொல்லுடி... விரும்பறியா இல்லையா?''

''விரும்பறேன்...''

''அப்ப என்னைக் கல்யாணம்...?''

''பண்ணிக் கொள்வேன்...''

''என் மேல நம்பிக்கை வந்திடுச்சா?''

''என்னை விட நான் உங்களை அதிகமா நம்பறேன்'' அழுத்தமாக வந்தது மிருணாளினியின் வார்த்தைகள். அந்த வார்த்தைகளைக் கேட்ட முகுந்தனின் உள்ளம் ஆனந்தக் கூத்தாடியது.

''அப்புறம் ஏன்டி என்னை விட்டுவிட்டுப் போகத் துணிஞ்ச...?''

''ம்ப்ச்... அந்தப் பேச்சை விடவே மாட்டீங்களா?''

''என்னால மறக்கவே முடியாதே. இந்த ஜென்மம் பூராவும் இந்த எண்ணம் என்னைத் துரத்துமே. நீ என்னை வெறுத்தப்பவும் கூட நான் உன்னை விட்டுப் பிரியாம இங்க தான இருந்தேன்? நீ மட்டும் எப்படி இப்படி...'' தாள முடியாமல் தவித்தவனின் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டாள் மிருணாளினி.

''இனி இந்தத் தப்பை நான்... உங்க மிருணா... செய்ய மாட்டாள். போதுமா...''



''போதும்...'' நிம்மதியுடன் அவளை தன்னுள் இறுக்க அணைத்துக் கொண்டவன் அவள் நெற்றியில் அன்புடன் முத்தமிட்டு விலகினான்.

''சரி... வா. நமக்காக வெளியில் எல்லாரும் பயத் தோட காத்திருப்பாங்க. அவங்ககிட்ட இந்த நல்ல விசயத்தைச் சொல்லலாம்'' தன்னை நோக்கிக் கை நீட்டி அழைத்தவனைத் தயக்கத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

''என்னடி...? வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறுது. என்ன யோசனையாப் பார்க்கிற?''

''என்னை வேதாளம்னு சொல்றீங்களா. அடி விழும் பார்த்துக்கங்க.''

''எத்தனை அடி வேணும்னாலும் இப்ப என்னை அடிச்சுக்க. நான் கோபப்பட மாட்டேன். ஆனா எதுக்கு அப்படிப் பார்த்த?'' பிடிவாதமும் பயமுமாகக் கேட்ட வனை வெட்கத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

''இல்ல... இந்த நிலைல... இல்ல... இப்ப நாம... எனக்கு அத்தை மாமாவைப் பார்த்துப் பேச சங்கடமா இருக்குங்க. சுபா வேற அங்க இருக்கா. என்னைப் பார்த்தா அவள் என்ன நினைப்பா? எனக்கு ரொம்ப அன் ஈஸியா இருக்குங்க...'' அவன் முகத்தைப் பார்த்துக் கெஞ்ச லாக கூறிய அவள் அருகில் அமர்ந்து அணைத்துக் கொண்டான் முகுந்தன்.

''இதுக்கு எதுக்காகடி இவ்வளவு சங்கடப்படுற? நீ என்ன நினைக்கிறியோ அதை செஞ்சு முடிக்கத்தான் நான் இருக்கேன்ல. நீ கவலைப்படாம இரு. அங்க எல்லோர் கிட்டயும் நான் பேசிக்கிறேன். யாரும் உன்னை

ஒரு கேள்வியும் கேட்க மாட்டாங்க. அப்புறம் இன்னிக்கு நைட் முழுவதுமே யாரும் உன்னை டிஸ்டர்ப் பண்ணவும் மாட்டாங்க. நான் கதவைப் பூட்டிட்டு போறேன். நீ நிம்மதியாப் படுத்துத் தூங்கு... இல்லாட்டி என்னை நினைச்சு கனவு கண்டுக்கிட்டு இரு. சரியா? மறுபடியும் சொல்றேன்.... எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். நீ நிம்மதியா இரு... எனக்கு நீதான் முக்கியம்'' அவள் கன்னத்தில் முத்தமிட்டு வெளியேறிய முகுந்தனின் வார்த்தைகள் அவளைச் சுற்றி வட்டமிடுவதைப் போல உணர்ந்த மிருணாளினி நிம்மதியுடன் கண்களை மூடிப் படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

## 29



அறையை விட்டு வெளியே வந்த முகுந்தனின் முகத்தை அனைவரின் கண்களும் ஆவலும் பயமுமாகப் பார்த்தது. ஒரு கணம் அனைவரையும் பார்த்துத் தயங்கிய முகுந்தனின் பார்வை மறுகணமே ஒருவித நிமிர்வுடன் அவர்களைப் பார்த்தது.

''என்னப்பா முகுந்தா? மிருணாளினி என்ன தான் சொல்லுது?'' அவசரமாகக் கேட்டார் சதாசிவம்.

தன் தங்கைதான் தன்னை விட்டு விலகிச் சென்று இறுதியில் அவள் முகத்தைப் பார்க்கும் கொடுப்பினை கூட இல்லாமல் செய்துவிட்டாள் என்றால் அவள்



மகளும் அதே தவறைச் செய்து விடுவாளோ என்ற தவிப்பு அவரது குரலில் இருந்தது.

''என்னய்யா முகுந்தா? சதாசிவம் கேட்டுக்கிட்டே இருக்கான். நீ அதுக்கு இன்னும் பதில் சொல்லாமல் பார்த்துக்கிட்டே இருக்கியே...'' தவிப்புடன் பேரனின் கையை பிடித்துக் கொண்ட பாட்டியின் கையை அழுத்தமாகத் தட்டிக் கொடுத்தான் முகுந்தன்.

''பதறாதீங்க பாட்டி. எல்லாம் நல்ல படியாத்தான் முடிஞ்சிருக்கு. அப்பா... இனிமே உங்க மருமக உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டா...'' மிருணாளினியை தன் மகன் 'உங்க மருமகள்' என்று சொல்லிய விதமே அவர்களின் சொந்தத்தை உணர்த்த நிம்மதியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் சதாசிவமும், சாந்தியும்.

''அப்பா... பழனிமலை முருகா. என் வயித்தில பாலை வார்த்திட்ட சாமி. உனக்குக் கோடிக் கும்பிடுய்யா'' தன் தலைக்கு மேல கை உயர்த்திக் கும்பிட்டாள் காளீஸ்வரி.

''சரி மாமா. நான் போய் அக்காவைப் பார்த்திட்டு வர்றேன். எல்லோரையும் என்ன பாடு படுத்திடுச்சு அதைப் போய் நான் கலாய்ச்சுட்டு வந்திடுறேன்'' கூறிக் கொண்டே எழுந்த சுபாஷினியை அவசரமாகத் தன் அருகில் இழுத்து அமர்த்திக் கொண்டாள் காளீஸ்வரி.

''வேண்டாம் சுபா. இப்ப நீ அக்காகிட்டப் போய் எதுவும் பேச வேண்டாம். அதைக் கொஞ்ச நேரம் தனியா இருக்க விடு. அப்பத்தான் அது மனசு தெளிவாகும்.

எதுக்கும் நீ இன்னிக்கு என் கூடப் படுத்துக்க. மிருணாவை இன்னிக்கு யாரும் தொந்தரவு பண்ண வேண்டாம். எதுவாக இருந்தாலும் நாளைக் காலைல பேசிக்கலாம்'' தான் எதுவும் கூறாமலே மிருணாளினியின் மனநிலை புரிந்து பேசிய காளீஸ்வரியை வியப்புடன் பார்த்தான் முகுந்தன்.

''தேங்க்ஸ் பாட்டி. நானும் இதைத்தான் உங்க கிட்டச் சொல்லலாம்னு இருந்தேன்.''

''நான் வளர்த்த என் தங்கத்தைப் பத்தி எனக்குத் தெரியாதா ராசா. அது மனசு பூ மாதிரி. அதைக் கசக்க நான் என்னிக்கும் ஒத்துக்க மாட்டேன்'' பேரனின் முகத்தை ஆராய்ச்சியுடன் பார்த்துக் கொண்டே கூறினாள் காளீஸ்வரி.

''அப்புறம் இன்னொண்ணையும் நீ தெளிவாப் புரிஞ்சுக்க ராசா. மிருணாளினி இன்னிக்குத் தன்னோட மனசை மாத்திக்கிட்டு இருக்குன்னா அதுக்குக் காரணம் அது உன்மேல வெச்சிருக்கிற பாசம் மட்டும்தான் ராசா. அத மட்டும் என்னிக்கும் நீ மறந்துடாத. இன்னைக்கு ஏதாவது நல்லது நடந்துராதா என்ற ஆசையால தான் நான் அமைதியா இருந்தேன். இன்னொரு முறை நீ இப்படி முரட்டுத்தனமா என் பேத்திக்கிட்ட சண்டை போட்டேன்னாப் பார்த்துக்க. நான் பொல்லாதவளா மாறிடுவேன். என் கோபத்தைப் பத்தி உனக்குத் தெரியாது. உன் அப்பனிடம் கேளு, அவன் சொல்லுவான். இந்த காளீஸ்வரிக்குக் கோபம் வந்தா பத்ரகாளியாவே மாறிடுவா. புரிஞ்சு நடந்துக்க...'' கிழட்டுப் பெண் புலியாய் சீறிய பாட்டியின் கோபத்தை சிரிப்புடன் பார்த்தான் முகுந்தன்.



''அவ என் பொண்டாட்டி பாட்டி. அவளை நான் என்ன வேணும்னாலும் செய்வேன்...''

''அப்புறம் உன்னை நான் கொன்னே போட்டுருவேன். என் பேத்தியை யாருன்னு நினைச்ச... அது என் குல தெய்வம்'' மிருணாளினியின் மேல் தன் பாட்டி கொண்டிருந்த அன்பு முகுந்தனையே பொறாமை கொள்ள வைத்தது.

''நானும்தான் உங்க பேரன். அதுவும் உங்க ஒரே மகன் வயித்துப் பேரன். உங்க வாரிசு. அப்படியென்ன என்னை விட அவள் உங்களுக்கு உயர்வாப் போயிட்டா...'' உண்மையான கோபத்துடன் கேட்டான் முகுந்தன்.

''அதான் சொல்லிட்டேனே. என் குலதெய்வம்னு. அதோட அவதான் என்னோட உயிர். நான் விடுற மூச்சுக் காத்து கூட அவளுக்காகத்தான். நீ பிறந்ததில் இருந்து உனக்கு ஆயிரம் சொந்தங்கள் கூட இருக்கு. ஆனா அவ பிறந்ததில் இருந்து அவளுக்காக நான் மட்டும்தான் இருக்கேன். எனக்கும் அவ மட்டும்தான் முக்கியம். மத்த எல்லோரும் அவளுக்கு அடுத்ததாத்தான். இங்க பாரு சதாசிவம். நான் என் பேத்தியை உன்னை நம்பித்தான் இந்த வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். உன் மகன் இன்னொரு தடவை மிருணாவை இப்படி மிரட்டினான்னு வையி. அப்புறம் நானே அவளைக் கூட்டிக்கிட்டுத் தனியாப் போயிடுவேன். அவன்கிட்டச் சொல்லி வையி...'' பூட்டிய கதவைப் பார்த்துக்

கொண்டே தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த ஆத்திரம் தீரக் கத்திவிட்டுப் போய்விட்டாள் காளீஸ்வரி.

அதுவரை அன்னையின் கோபத்தினால் வாய் திறக்காமல் அமர்ந்திருந்த சதாசிவத்தை ஆச்சரியமாகப் பார்த்தான் முகுந்தன்.

''என்னப்பா? பாட்டி இப்படி வாங்குவாங்குனு வாங்கிட்டாங்க? நான் கூடப் பாட்டியை என்னவோன்னு நினைச்சேன். அவங்களுக்கு இவ்வளவு கோபம் வருமா...?'' தந்தையைப் பார்த்துக் கேட்ட முகுந்தனைப் பார்த்துத் தன் வாய் மூடிச் சிரித்தாள் சுபா.

''மாமா... எங்க பாட்டியை என்னன்னு நினைச்சீங்க? ஏதோ இந்த மட்டிலும் உங்களைச் சும்மா விட்டாங்களே. அதை நினைச்சு சந்தோசப்படுங்க. மும்பையில் எங்க அம்மா அப்பா கூட என் அக்காவை ஒரு வார்த்தை திட்டிட முடியாது. பாட்டி போடுற போடுல அவங்க ஒரு வருசத்துக்கு வாயே திறக்க முடியாது. அந்த மாதிரி திட்டிடுவாங்க. எங்க அப்பாவே எத்தனையோ தடவை பாட்டிக்கிட்ட திட்டு வாங்கிட்டார். நீங்கள்லாம் என்ன? ஜூஜூபி...'' அலட்சியமாகக் கூறிக் கொண்டே பாட்டியைப் பின் தொடர்ந்தாள் சுபாஷினி.

தன்னை காளீஸ்வரி திட்டியதை விட தன் மிருணாளினியின் மேல் அவள் கொண்டிருந்த அன்பு முகுந்தனுக்கு ஆனந்தத்தையே கொடுத்தது. அவன் காளீஸ்வரியை மனமாரப் பாராட்டிக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்து உடை மாற்றிப் படுக்கையில் சாய்ந்தான்.



தன் மேலிருந்து தோன்றிய நறுமணம் மிருணாளினியை ஞாபகப்படுத்த தூக்கம் வராமல் அவளது நினைவுடன் படுக்கையில் புரண்டான் முகுந்தன்.

# 30



அன்றைய காலைப் பொழுது மிகவும் அழகாக இருப்பதாகத் தோன்றியது மிருணாளினிக்கு. முதல் நாள் இரவு நடந்த சம்பவங்கள் அனைத்தும் பசுமையான நினைவுகளாய் அவளது உள்ளப் பெட்டகத்தில் பொக்கிஷமாகப் பதிந்திருந்தது. அந்த எண்ணங்கள் தந்த ஆனந்தமே அவளது அழகைப் பல மடங்கு கூடுதலாகக் காட்டியது.

''மிருணாக் கண்ணு...'' நிம்மதியுடன் அழைத்த பாட்டியின் குரல் கேட்டுத் திரும்பினாள் மிருணாளினி.

அதிகாலையே எழுந்து குளித்து உடைமாற்றி நின்ற மிருணாளினியின் தோற்றமே அவளுடைய உள்ளத்தின் ஆனந்தத்தை காளீஸ்வரிக்கு உணர்த்தியது.

''என்னடா... அதுக்குள்ள எந்திரிச்சுக் குளிச்சுட்டு நிக்கிற? ஆச்சரியம்தான் போ. என் பேத்திக்கு இப்பொழுதே குடும்பப் பொறுப்பு வந்திடுச்சு போல இருக்கே?'' பாட்டியின் கேலியால் மிருணாளினியின் கன்னங்களின் செம்மை கூடியது.

''பாட்டி! என்னைக் கலாய்க்கக் கூடாதுன்னு சொல்லிட்டு எங்க அக்காவை நீங்க ஓட்டிக்கிட்டு இருக்கீங்களா! டு பேட்'' கூறிக் கொண்டே அக்காவின் பின்னால் இருந்து அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு அவள் கன்னத்தில் முத்தம் பதித்தாள் சுபா.

''என் பேத்தியை நான் கிண்டல் பண்ணுவேன். யாரும் கேட்கக் கூடாது. ஆனா... என் பேத்தியை வேற யாராவது கிண்டல் பண்ணினா... நான் கேட்பேன். அதை வேற யாராலயும் தடுக்க முடியாது'' காளீஸ்வரியின் வார்த்தைகளால் மிருணாளினி வாய்விட்டுச் சிரித்தாள்.

''ஹை! பாட்டி! பஞ்ச் டயலாக்கெல்லாம் பேசறீங்க. ஆனா இது ரொம்ப ஓல்டு டயலாக் பாட்டி. ஏதாவது லேட்டஸ்ட் பஞ்சா அள்ளி விடுங்க!''

''நான் என்ன சுபா பண்றது. டிவியில நேத்து இந்த டயலாக்கைத்தான் பார்த்தேன். அதான் அதையே சொல்லிட்டேன்'' அலட்சியமாகக் கூறினாள் காளீஸ்வரி.

''பாட்டி! நீங்க ரொம்பத் தேறிட்டீங்க! இதே ரேஞ்சில் போனீங்கன்னா நானும் அக்காவும் தான் ஓல்டா ஆகிடுவோம். அக்கா ஆல்ரெடி பாதி ஓல்டா ஆகியாச்சு. அதனால அதுக்குக் கவலை இல்லை. ஆனா எனக்குத் தான் கொஞ்சம் கவலையா இருக்கு...'' யோசனையோடு தாடையில் கை வைத்துக் கொண்ட சுபாவின் கையைத் தட்டி விட்டாள் மிருணாளினி.

''போடி அரட்டை. போய் உன் படிக்கிற வேலையைப் பார். சும்மா நின்னு வெட்டிப் பேச்சுப் பேசாம ஸ்கூலுக்குக் கிளம்பற வழியைப் பாரு'' கூறிய மிருணாளினியை விழி விரியப் பார்த்தாள் சுபாஷினி.



''ஐயோ! என்னா கடமை உணர்ச்சிக்கா உனக்கு. ஞாயித்துக்கிழமை கூட ஸ்கூலுக்குப் போகச் சொல்றியே? எங்க டீச்சர்ஸ் எல்லாம் பாவமில்ல?''

''ஏன்டி நீங்க மட்டும் பாவமில்லையா. ஏதோ ஞாபக மறதியாய்ச் சொல்லிட்டேன். அதுக்குப் போய் இப்படி ஓட்டுற?''

''ஞாபகம் மறதியெல்லாம் இல்லக்கா. நீ இந்த உலகத்தையே மறந்துட்ட. கல்யாணப் பேச்சை எடுத்தவுடனே இந்தப் பொண்ணுங்க எல்லாம் எப்படி இப்படி மாறிப் போயிடுறாங்க...?'' தன்னை நோக்கிக் கேலியாகக் கேட்ட சுபாஷினியை விழி விரிய அதிர்ச்சியுடன் பார்த்தாள் மிருணாளினி.

''என்ன சுபா சொல்ற நீ? நான் மாறிடுவேன்னு நீ நினைக்கிறியா?'' மிருணாளினியின் குரலில் தோன்றிய மாற்றத்தைப் புரிந்து கொண்ட காளீஸ்வரி பதட்டத்துடன் சுபாவின் கையைப் பற்றி அவளைத் தடுத்தாள்.

ஆனால் காளீஸ்வரியின் எண்ணம் புரியாமல் அக்காவைச் சீண்டும் வேகத்துடன் சிறு பிள்ளைத் தனமாய் தன் வாய் பொத்திக் கேலியாய் சிரித்தாள் சுபா.

''என்னக்கா நீ? இவ்வளவு சின்னப்புள்ளைத் தனமா இருக்க? மாறிடுவேனான்னு கேட்கிறியேக்கா? நீ ஆல்ரெடி மாறிட்ட தான! அதனாலதான் என்னோட ஸ்கூல் டேஸ் கூட உனக்கு மறந்துடுச்சு?'' நக்கலாகக் கேட்ட சுபாவின் வார்த்தைகள் மிருணாளினியின் இதயத்தில் கூர்மையாகப் பாய்ந்தது.

"சுபா..!" கேலியாகச் சிரித்துக் கொண்டே அக்காவின் முகம் பார்த்த சுபா அவள் கால்கள் நடுங்க சோபாவில் தளர்ந்து அமர்வதைப் பார்த்துப் பதட்டத்துடன் அவள் அருகில் சென்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"என்னாச்சுக்கா? ஆர் யூ ஆல்ரைட்?" கவலையுடன் கேட்ட சுபாவின் கையைப் பிடித்துக் கொண்டாள் மிருணாளினி.

"சுபா... நான் என்னிக்கும் மாற மாட்டேன்டா. எனக்கு நீதான் ரொம்ப முக்கியம். அக்காவை நீ சந்தேகப்படாதே" குரல் நடுங்கக் கூறிய அவளைப் புரியாமல் பார்த்தாள் சுபா.

"லூசாக்கா நீ? கேலிக்குப் பேசுவதற்கெல்லாம் இப்படிக் கவலைப்படுற? நாளைக்குக் கல்யாணம் ஆன பின்னாடி மாமாவையும் நீ இப்படித்தான் ட்ரீட் பண்ணு வியா? உன் கேரக்டரைக் கொஞ்சம் மாத்திக்கக்கா" பெரிய மனுஷியாய் தனக்குப் புத்தி சொன்ன சுபாவின் வார்த்தைகள் மிருணாளினியின் காதில் விழவே யில்லை.

"எனக்கு வேற யாரைப் பத்தியும் கவலை இல்லை சுபா. யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். ஆனால் நீ மட்டும் என்னைப் பற்றி எந்த சூழ்நிலையிலும் தவறா நினைச்சு என்னை விட்டுத் தள்ளி நின்னுவிடாதே சுபா. என்னால அதை மட்டும் தாங்கிக்க முடியாது. எனக்கு நீதான்டா எல் லாமே. உனக்கு அடுத்துத்தான் மற்ற எல்லா உறவு களும். அது கட்டின புருசனா இருந்தாலும் சரி. நம்ம



அம்மா பண்ணின தப்பை நான் எந்தக் காலத்திலும் செய்ய மாட்டேன். உன்னை வளர்த்து ஆளாக்குற கட மையில் இருந்து எந்த உறவுக்காகவும் நான் மாறமாட் டேன். என்னை நம்பு... சுபா" தன்னை அணைத்துக் கொண்டு குழந்தை போல் கெஞ்சிய மிருணாளினியின் மனம் புரிந்த சுபா அதிர்ச்சியில் உறைந்து விட்டாள்.

தன் அக்காவின் வாழ்க்கை தன் மேல் அவள் வைத்திருக்கும் அன்பினால் எவ்வளவு சிக்கலாக மாறிக் கொண்டு இருக்கிறதென்பதைச் சுபா அந்த நொடி மிகத் தெளிவுடன் உணர்ந்து கொண்டாள்.


ஆனால் தன்னை வாழ வைப்பதற்காகத் தன் அக்கா அவளுடைய வாழ்வை நிறைவுடன் வாழாமல் இருக்கப் போவதை சுபாஷினியால் ஒத்துக் கொள்ள முடிய வில்லை. தன்னால் தன் அக்காவின் வாழ்க்கை கெட்டு விடக் கூடாது என்ற உறுதியுடன் அவள் மிருணாளி னியின் கரம் பற்றி அவளைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

"அக்கா.. நான் உன்னை என்றுமே தவறாக நினைக்க மாட்டேன். என்றுமே நீ எனக்கு அக்கா மட்டும் இல்லை என்னோட அம்மா. நான் அப்படித்தான் இதுவரை நினைத்திருக்கேன். ஆனா எனக்கு நீ உண்மையா இருக்கிறதைப் போல உன்னுடைய மற்ற உறவு களுக்கும் உண்மையா நீ நடக்கணும்க்கா. என்னால உன்னோட வாழ்க்கை பாதிக்கப்பட்டா அந்த குற்ற உணர்ச்சியே என்னைக் கொன்னுரும்க்கா. நான் சொல் வதைக் கேளுக்கா. நீ உன் வாழ்க்கையை சந்தோசமா வாழ்ந்தாத்தான் நான் சந்தோசமா இருப்பேன். என்னை நினைச்சுக்கிட்டு நீ உன் வாழ்க்கையில் ஏதாவது

பிரச்சனையை இழுத்திக்கிட்டின்னா அப்புறம் நானும் அம்மா போன இடத்துக்கே போயிடுவேன்'' கூறிய சுபாஷினியின் வாயில் கை வைத்துப் பொத்தி அவளைத் தன்னுடன் இழுத்து அணைத்துக் கொண்டாள் மிருணாளினி.

''ஆண்டவனே! யாராருக்கோ எப்படி எப்படியோ வாழ்க்கையைக் குடுத்திருக்க. ஆனால் மனசால கூட யாருக்கும் ஒரு கெடுதலும் நினைக்காத என் பேத்தி களை மட்டும் ஏன் இப்படி வேதனைப்படவிட்டு வேடிக்கை பார்க்கிற. உன் மனசு என்னிக்குத்தான் இரக்கப்படுமோ தெரியலையே'' தானும் புலம்பிக் கொண்டே தன் இரு பேத்திகளையும் அணைத்துக் கொண்டாள் காளீஸ்வரி.

# 31



தன் முன் இருந்த உணவுகளை சுபாஷினியின் பக்கமாக நகர்த்திக் கொண்டே அவள் முகம் பார்த்தான் முகுந்தன். சுபாஷினியின் குழந்தைத் தனமும் குறும்பும் என்றுமே அவன் மிக விரும்பும் ஒன்று. அவள் வந்த பின்தான் வீடே உயிர்ப்புடன் இருப்பதை மனமார உணர்ந்து அந்த உணர்வினை மிகவும் விரும்பினான் முகுந்தன்.

''சுபா... சாப்பாடு உன் முன்னால இருக்கு. எதிர்வீட்டு டைனிங் டேபிளில் இல்ல. பின் எதுக்காக இப்படி



வாசலை வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்க?'' சிரித்தபடி கேட்ட முகுந்தனை சிரிக்காமல் பார்த்தாள் சுபாஷினி.

அவள் அருகில் வந்த காளீஸ்வரி கண்களால் அவளை அதட்டி அடக்குவதையும் அதைக் கண்டு தன் பார் வையை சுபா விலக்கிக் கொள்வதையும் கண்ட முகுந்தனின் கண்களில் கேள்விக்குறி தோன்றியது.

''என்ன... பாட்டியும் பேத்தியும் ஏதோ ரகசியம் பேசுவது போல இருக்கு?'' கேலியாகக் கேட்பது போல அவளது பார்வையை ஊடுருவிப் பார்த்த முகுந்தனை தயக்கத்துடன் பார்த்தாள் சுபாஷினி.

''அதுசரி சுபா. உங்க அக்காவை எங்க காணோம்? இன்னமும் ரூமுக்குள்ளேயே தவம் இருக்காளா? பாட்டி. உங்க பேத்தியை நல்லாத்தான் வளர்த்திருக்கீங்க. சரியான நத்தை மாதிரி...''

''நீ சொன்னாலும் சொல்லாட்டியும் உண்மை அது தான் முகுந்தா. என் வளர்ப்பில் ஏதோ குறை வெச்சுட் டேன் போல எனக்கே மனசு அடிச்சுக்குதுப்பா'' கண்களில் வந்த கண்ணீரை கண்சிமிட்டி மறைத்தாள் காளீஸ்வரி.

''இன்னிக்கு நீங்களும் சுபாவும் இயல்பாவே இல்லை பாட்டி. எதையோ மறைக்கிறது போலவே இருக்கு. சுபா, நீ என்னைப் பாரு... என்ன விசயம்?'' கண்டிப்புடன் கேட் டான் முகுந்தன்.

தயக்கத்துடன் பாட்டியைப் பார்த்துவிட்டு முகுந் தனின் முகம் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண் டாள் சுபாஷினி.

"இப்ப என்னைப் பார்த்து உண்மையைச் சொல்லப் போறயா இல்லையா சுபா? அப்ப நான் உனக்கு வேற்று மனுசனாத் தெரியறேன். இல்ல?" தன் கையை உதறி விட்டு சாப்பிடாமல் எழுந்துவிட்ட முகுந்தனின் பின் னால் ஓடினாள் சுபா.

"ஐயோ மாமா! பெரிய பேச்செல்லாம் பேசாதீங்க. அது என்னை ரொம்ப ஹர்ட் பண்ணுது. நான் உங்கக் கிட்ட ஷேர் பண்ணிக்காம வேற யார்கிட்ட ஷேர் பண் ணிக்கப் போறேன். ஆனா அதை எப்படி சொல்வதுன்னு தான் எனக்குப் புரியல மாமா" குழந்தையாய் குற்ற வுணர்வுடன் தன்னைப் பார்த்த சுபாஷினியை குழப் பத்துடன் பார்த்தான் முகுந்தன்.

"என்கிட்ட நீ உன்னோட எல்லா பிராப்ளத்தையுமே ஷேர் பண்ணிக்கலாம் சுபா. ஐ ஆம் ஆல்மோஸ்ட் யுவர் பாதர். என்னிடம் உனக்கு எந்தவிதமான தயக்கமும் தேவையில்லை. நீ சொல்வதை அது என்னவாக இருந் தாலும் நான் புரிஞ்சுக்க முயற்சி பண்றேன். ஆனா என்கிட்ட எதையும் மறைக்க மட்டும் செய்யாத."

"மாமா. எனக்கு உங்ககிட்ட எதையும் மறைக்கும் எண்ணமே தோன்றாது. உண்மையில் நான் இங்க வந்த பிறகுதான் ரொம்பவும் பாதுகாப்பாக உணர்கிறேன். ஆனா இப்ப நான் பேசப் போறது என்னைப் பத்தி இல்லை. என் அக்காவைப் பற்றி. உங்களைப் பற்றியும் கூடத்தான். அதான் எப்படி ஆரம்பிக்கிறதுன்னு புரியாம தவிக்கிறேன்."



"மிருணாளினியைப் பற்றியா? அப்படி என்னதான் சொல்ல வர்ற? ஸ்ரெய்ட்டா மேட்டருக்கு வா சுபா. எனக்கு டென்சனா இருக்கு. ஏன்னா உங்க அக்கா எப்ப எந்த குண்டைத் தூக்கிப் போடுவாளோன்னு எனக்குப் பயமாகவே இருக்கு. சீக்கிரம் சொல்லு..." பரபரப்பாகக் கேட்டான் முகுந்தன்.

"நீங்க டென்சனாகக் கூடிய விசயம்தான் மாமா. எங்க அக்கா... வந்து... ஓகே மாமா. எல்லாவற்றையும் நீங்கதான் கண்டிப்பா புரிஞ்சுக்கணும். அக்கா என்னை நினைச்சுத்தான், அவங்க கல்யாணம் பண்ணிக்கிறதை கன்பியூஸ் பண்ணிக்கிறாங்க மாமா. அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் தனியாளாய் ஆகிருவேனோன்னு அவங்க ரொம்ப பயப்படுறாங்க மாமா."

"என்ன சுபா சொல்ற? இதில் அவ பயப்பட என்ன இருக்கு?"

"எனக்குத் தெரியும் மாமா. இதில் பயப்பட எதுவும் இல்லை. அதுவும் உங்களைப் போல ஹஸ்பெண்ட் கிடைக்க அக்கா கொடுத்து வெச்சிருக்கணும் மாமா. ஆனா மாமா, நான் பிறந்ததில் இருந்தே அம்மாவோட இடத்தில் இருந்து என்னை வளர்த்தது அக்காதான். நான் வாய் வார்த்தைக்குத் தான் அவங்களை அக்கான்னு கூப்பிடறேன் மாமா. ஆனா அவங்க உண்மையில் எனக்கு அம்மா. அப்படித்தான் நாங்க இதுவரை வாழ்ந் தோம்..." சுபாவின் குரல் வேதனையில் உடைந்தது.

"அதில் எந்த மாற்றமும் இல்லை சுபா. என்ன இனி மேல் அம்மாவுடன் இந்த அப்பாவும் உன்கூட இருப் பேன். அவ்வளவுதான்" அமைதியாகக் கூறிய முகுந்

தனின் கையை பாசத்துடன் பற்றிக் கொண்டாள் சுபாஷினி.

''அது எனக்கு நல்லாப் புரியுது மாமா. நான் உங்களை அப்படித்தான் நினைக்கிறேன். ஆனா அது எங்க அக்காவுக்குப் புரியலியே. இதை நான் என் சுயநலத்துக்காக சொல்வதாக என்னைத் தப்பா நினைச்சுடாதீங்க மாமா. நான் அதனாலதான் இதைப்பத்திப் பேச தயங்கினேன்.''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம் சுபா. நான் என் பொண்ணை என்னிக்குமே நம்புவேன்.''

''மாமா!! அதை என் அக்காவுக்குப் புரிய வைங்க மாமா. எனக்கு அக்காவோட வாழ்க்கை என்னிக்கும் சந்தோசமா இருக்கணும். அவங்க உங்க கூட வாழற வாழ்க்கையை எந்தவிதமான உறுத்தலும் இல்லாமல் நல்ல விதமா ஆரம்பிக்கணும்னு நினைக்கிறேன். இனி இதை நீங்க பார்த்துக்குவீங்கன்னு நம்பறேன் மாமா'' பேசிய சுபாஷியை யோசனையோடு பார்த்தான் முகுந்தன்.

பெற்றோர் இல்லாத இரண்டு பெண்களும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த அன்பினைக் கண்ட முகுந்தன் தனக்கு ஒரு உடன் பிறப்பில்லாத குறையை அன்று மிகவும் வேதனையோடு உணர்ந்தான். அந்தக் குறை தீர்க்க வந்த சுபாவை அவன் அன்புடன் பார்த்தான். அவனது பார்வை கொடுத்த நம்பிக்கையில் தன் மனக்கவலையை மறந்தாள் சுபாஷினி.



# 32



மங்கல வாத்தியங்கள் முழங்க, புனிதமான மந்திரங்களை ஐயர் ஓதிக் கொண்டிருக்க, தன் அருகில் அமர்ந்திருந்த மிருணாளினியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டு அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்ட முகுந்தன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அவன் அருகில் அமர்ந்திருந்த மிருணாளினி அவன் முகத்தைக் கேள்வியுடன் பார்த்தாள். ஆனால் மணப்பெண்ணான அவள் அவனிடம் பேச முடியாமல் அந்தக் கேள்வியை தன் மனதிற்குள் புதைத்துக் கொண்டு கல்யாண சம்பிரதாயங்களில் தன் கவனத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சுபா தன்னிடம் பேசிய வார்த்தைகளைத் தன் மனதிற்குள் ஆயிரம் முறை கேட்டாலும் தன் உணர்வுகளை மிருணாளினிக்கு எவ்விதம் புரிய வைப்பது என்பது முகுந்தனுக்குத் தெரியவில்லை.

வாய் வார்த்தைகளை மிருணாளினி நம்ப மாட்டாள் என்பது முகுந்தனுக்கு நன்றாகத் தெரியும். அதற்கு மேல் தன்னை அவளுக்கு உணர்த்த அவன் முயன்று, மிருணாளினி ஒரேயடியாகக் கல்யாணமே வேண்டாம் என்று கூறிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் தோன்றியது அவனுக்கு.

சுபாஷினி, தனக்கும் மிருணாளினியைப் போலவே முக்கியமானவள் என்பதை அவருக்கு உணர்த்தும் முன்பாகத் தன் மனைவியாக மிருணாளினியை ஆக்கிக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்த முகுந்தன் நேராகத் தன் தந்தையின் அறைக்குள் சென்று அவர் முன் அமர்ந்தான். மகன் தன்னிடம் கூறிய வார்த்தைகளின் முழு உண்மைகளை அறிந்து கொண்ட சதாசிவம், அடுத்த முகூர்த்தத்திலேயே தனது மகனுக்குத் திருமணத்தை நடத்தி வைக்க முடிவெடுத்து அதன்படியே நடத்தியும் விட்டார்.

அவ்வளவு விரைவில்தன் திருமணத்தை எதிர்பார்க்காத மிருணாளினியின் ஆட்சேபத்தை அந்த வீட்டில் இருந்த எவருமே கேட்கத் தயாராக இல்லாததால், அவளும் வேறு வழியின்றித் திருமணத்தை ஒத்துக் கொண்டாள்.

திருமணத் தேதி குறித்ததில் இருந்து சுபாஷினியை விட்டு ஒரு கணமும் பிரியவில்லை மிருணாளினி. சுபாஷினி பள்ளிக்குச் சென்றுவிட்ட நேரத்திலும் கூட ஏதோ ஒரு யோசனையுடன் தனிமையில் அமர்ந்து விடும் அவளை யாரும் எந்த வகையிலும் தொந்தரவு செய்யாத வகையில் முகுந்தன் பார்த்துக் கொண்டான்.

தனது கல்யாணப் புடவையைக் கூட சுபாவின் விருப்பப்படியே தேர்ந்தெடுத்த மிருணாளினியைப் பார்த்துத் தன் தலையில அடித்துக் கொண்டான் முகுந்தன். அவளது குணம் தெரிந்தே சுபாஷினியிடம் தான் விரும்பிய புடவையை தெரிவித்து விட்டான்



முகுந்தன். சுபாஷினியும் அந்த புடவையையே தேர்ந்தெடுப்பது போல எடுத்து விட்டாள்.

மணப்பெண் அலங்காரத்தில் பேரழகுடன் ஜொலித்த தன் மனைவியை ஆசையுடன் பார்த்து நெருங்கி அமர்ந்து கொண்டவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தாள் சுபா.

''என்ன மாமா? இன்னும் லவ் பீலிங் போகலியா? எங்க அக்கா இப்ப உங்க பொண்டாட்டி மாமா. திருட்டுத்தனமா சைட் அடிக்காம நேராகவே சைட் அடிக்கலாம். உங்களுக்கு அதுக்கான லைசென்ஸ் கிடைச்சிருச்சே...'' சிரித்த சுபாவைப் பார்வையால் அடக்கினாள் மிருணாளினி.

''நீதான் உம்மணாம்மூஞ்சியா இருக்கேன்னா நானும் அப்படியே இருக்கணுமா? என்னாலயெல்லாம் அப்படி இருக்க முடியாதுக்கா. உன்னோட மிரட்டலை எல்லாம் உன் ஹஸ்பெண்ட் கிட்ட வெச்சுக்க... நான் ப்ரீ பேர்ட்'' அழகான பல் வரிசை தெரியச் சிரித்த சுபாஷினியை ஆசையுடன் பார்த்தாள் முன் வரிசையில் அமர்ந்திருந்த தேவன். தேவன் சுபா படித்த பள்ளியின் உரிமையாளரின் தம்பி. சுபாஷினி தங்கள் பள்ளியில் வந்து சேர்ந்த நாள் முதலாக அவளை தன் உள்ளத்தில் அமர்த்திக் கொண்ட தேவன் உரிய நாள் வருவதற்காகக் காத்திருந்தாள்.

வீடே கல்யாணக் களைப்பில் உறங்க தன் அறையில் சுகந்தமான நறுமணத்தைக் கொடுத்த பூக்கள் மற்றும் ஊதுபத்தியின் வாசனையை மயக்கத்துடன் உள்ளே

இழுத்து மணத்தை அனுபவித்தபடி மிருணாளினியின் வரவை எதிர்பார்த்தபடி அமர்ந்திருந்தான் முகுந்தன்.

கையில் பால் சொம்புடனும் முகத்தில் தாங்க முடியாத வெட்கத்துடனும் அறைக்குள் நுழைந்த மிருணாளினியின் மேலிருந்து எழுந்த அவருக்கேயுரிய நறுமணம் தன் அறையெங்கும் பரவுவதை ஆனந்தத் துடன் உணர்ந்தான் முகுந்தன். தன் அருகே வந்து தன் கால்களைப் பணிய குனிந்தவளை அவசரமாகத் தடுத்து தன் அருகில் அமர்த்திக் கொண்டு அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை தன் கண்களில் நிறைத்துக் கொள் பவனைப் போல பார்த்தவளின் பார்வையில் முகம் எல்லாம் செந்தாமரையாக மாற அவளது கண்களைத் தன் கரங்களால் மூடினாள் மிருணாளினி.

தன் கண்களை மூடிய அவளது கரத்தை எடுத்து அதில் தன் இதழ் பதித்த முகுந்தன். அவளது கையை விடாமல் தன் மார்பில் வைத்து மூடிக் கொண்டான். அவனது செயல் முகுந்தனின் அளவற்ற காதலை உணர்த்த அதே காதலைத் தன் கணகளில் நிறைத்து அவனைப் பார்த்தாள் மிருணாளினி.

''இந்த நாளுக்காக நான் எத்தனை வருடங்களாக தவம் கிடந்தேன் தெரியுமா மிருணா'' கரகரப்பான குரலில் உணர்ச்சியுடன் கேட்ட அவனைத் திகைப்புடன் பார்த்தாள் அவள்.

''வருடங்களா? நாம சந்திச்சே நான்கைந்து மாதங்கள் தானே ஆகுது? ஒருவேளை என்னைப் பார்க்காமலே காதலித்தீர்களா..?''



''பார்க்காமலேயே காதலா? நான் எதற்காக அப்படிக் காதலிக்க வேண்டும் மிருணா? நீ பிறந்தது முதல் இன்றுவரை உன்னுடைய அத்தனை அசைவுகளும் எனக்குத் தெரியும் மிருணா. நான் உன்னை எப்பொழுதும் என்னுடைய கண்காணிப்பில்தான் வைத்திருந்தேன் மிருணா'' கூறிய அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் மிருணாளினி.

''உங்களுடைய கண்காணிப்பிலா... என்ன என் கிட்ட பீலா படறீங்களா?'' தலைசாய்த்து அவள் கேட்ட விதத்தில் முகுந்தனின் கண்கள் மின்னியது.

''எனக்குப் பீலா விடவெல்லாம் தெரியாதும்மா. ஒன்லி ஆக்சன் மட்டும்தான் தெரியும்'' அவளை இழுத்து தன் மார்பில் சாய்த்துக் கொண்ட முகுந்தனின் இதழ்கள் அவளது இதழ்களைத் தேடியது.

''என்னமோ பேசிக்கிட்டு இருந்தீங்களே... அதுக் குள்ள..'' மயக்கத்துடன் சிணுங்கினாள் மிருணாளினி.

''அதையெல்லாம் எப்ப வேணும்னாலும் பேசலாம். ஆனால் இதை இப்ப பேசலைன்னா என் பரம்பரையே என்னை மன்னிக்காதுடி..'' கூறிக் கொண்டே அவளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு கட்டிலில் சாய்த்த முகுந்தன் அவள் மேல் ஆசையுடன் பரவிப் படர்ந் தான். அவளது ஆசைக்கு இணங்கி அவன் கேட் டதை மறுக்காமல் வாரி வழங்கினாள் மிருணாளினி. அந்த முதல் இரவு உறங்காத இரவாக விடிந்தது அவர் களுக்கு.

# 33



பழனி முருகன் சந்நிதியில் முகுந்தனுடன் இணைந்து நின்று கண்மூடி மனம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி. தன் பேரனும் பேத்தியும் தன் கண்ணெதிரில் தம்பதி சமேதராய் நிற்பதைக் கண்ணும் மனமும் நிறையப் பார்த்துக் கொண்டிருந்தாள் காளீஸ்வரி.

''அப்பா முருகா. எங்கோ பிறந்து வளர்ந்த என் பேத்தியை உன் காலடிக்குக் கொண்டு வந்து அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையையும் அமைச்சுக் கொடுத்து என் வயித்துல பாலை வார்த்திட்ட ஐயா. இன்னிக்குப் போல என்னிக்கும் இவங்க ரெண்டு பேரும் இதைப் போலவே சந்தோஷமா வாழ நீதான் அருள் புரியணுமய்யா'' மனம் உருக பழனி முருகனைப் பிரார்த்தித்துக் கொண்டாள் அவள்.

சந்நிதானத்தில் இருந்து வெளியே வந்தவுடனே மனைவியை இடையில் கைகொடுத்து அணைத்துக் கொண்டான் முகுந்தன்.

''ஸ்ஸ்... என்னங்க இது? அத்தை மாமா எல்லோரும் பார்த்துக்கிட்டிருக்காங்கன்ற கூச்சமே இல்லையா உங்களுக்கு. கையை எடுங்க மாமா'' கெஞ்சலாகக் கூறிய மனைவியை முறைத்தான் முகுந்தன்.



''அங்க பாரு. யாராவது நம்மளைக் கவனிக்கிற வங்களை பாரு. நீயேன் இப்படி ஓவரா ரியாக்ட் பண்ற'' கணவன் கைகாட்டிய திசையில் பார்த்தாள் மிருணாளினி.

அவர்கள் இருவரையும் கவனத்தில் கொள்ளாமல் சுபாசினிக்கு அந்தக் கோவிலின் பெருமைகளை கூறிக் கொண்டிருந்த சதாசிவத்தை அனைவரும் கவனித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் பேசிச் சிரித்துக்கொண்டே பிரகாரத்தைச் சுற்றி நடக்க அதை சிறு ஏமாற்றத்துடன் கவனித்தாள் மிருணாளினி.

''நம்மளை யாருமே கவனிக்காம அவங்க பாட்டுக்கு போய்க்கிட்டு இருக்காங்க?'' மனைவியின் குரலில் தெரிந்த ஏமாற்றத்தைக் கவனித்த முகுந்தனின் கை மேலும் அவளை தன்னுடன் இறுக்கிக் கொண்டது.

''ஏய்.. உன்னைக் கவனிக்கத்தான் நான் இருக்கேன்டி. அது போதாதா உனக்கு தன் மகனையே உனக்காகக் கொடுத்திட்டுப் போறாங்க உங்கத்தையும் மாமாவும். அதைக் கூட உணராம நீ அவங்களைப் பார்த்துக்கிட்டு நிக்கிற.''

அவள் வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்த மிருணாளினி அவனை வியப்புடன் பார்த்தாள்.

''உங்களால் மட்டும் எப்படி மனிதர்களின் மனங்களையும் எண்ண வோட்டத்தையும் உடனுக்குடன் புரிஞ்சுக்க முடியுது. எனக்குக் கொஞ்சம் கஷ்டம்தான்.''

''உனக்கும் சேர்த்துத்தான் நான் புரிஞ்சுக்கிறேனே. நீ ரிலாக்ஸ்டா என்னைக் கவனி. அது போதும்'' சிம்பிளாகக் கூறியவனின் கை சேலை மறைவில் அவள் இடையைத் தடவியது.

''அதான் கவனிச்சுக்கிட்டுத்தான இருக்கேன்? ஆனா உங்களுக்குத்தான் எதிலும் அவ்வளவு ஈஸியா திருப்தியே வராதே?'' உதடு சுழித்து பழிப்புக் காட்டிய மனைவியின் இதழ்களை ஆசையுடன் வருடியது முகுந்தனின் பார்வை.

''ஏய். இது கோவில்டி. இங்க வந்து என்னை உசுப்பேத்தற வேலை எல்லாம் வேண்டாம்டி. ஆல் ரெடி நான்...'' அவள் சொல்லாமல் விட்ட செய்தியை இடை அணைத்த கை விரல்களின் அழுத்தம் உணர்த்த முகம் சிவந்து தலைகுனிந்தாள் மிருணாளினி.

சிறிது தூரம் தள்ளி நின்று தங்களுக்காகக் காத்திருந்த குடும்பத்தினர் அனைவரையும் பார்த்துக் கையை விலக்கிக் கொண்ட முகுந்தன் மனைவியுடன் சென்று அவர்களுடன் இணைந்து கொண்டான்.

வைலட் கலர் சுடிதாரில் பட்டு நூலில் எம்ராய்டரிங் செய்யப்பட்டிருந்த டாப்சும், அதே வைலட் கலர் பேண்டும், சாலும் அணிந்து கடைந்தெடுத்த சந்தனச் சிலையாய் காற்றில் பறந்த கூந்தலை நாசூக்காக ஒதுக்கியபடியே நின்றிருந்த சுபாஷினியை அனைவரும் ஒரு முறை நிமிர்ந்து பார்த்தவாறே செல்ல, தன் அழகினை அறியாமல் இயல்பாக முகுந்தனுடன் சிரித்துப் பேசிக் கொண்டே சென்று கொண்டு இருந்தாள் சுபாஷினி.

ஒரு பக்கம் மனைவியும், மறுபக்கம் சுபாஷினியும் உடன் வர நடந்து கொண்டிருந்த முகுந்தனின் பார்வை



ஒரு சிறு கல்மிஷமும் இல்லாமல் முழுமையான தூய்மையான அன்புடன் சுபாஷினியைப் பார்ப்பதை பெருமையுடன் பார்த்து ரசித்தவாறே சென்று கொண்டிருந்தாள் மிருணாளினி.

சுபாஷினி விரும்பிய அனைத்தையும் வாங்கிக் கொடுத்த, முகுந்தன் அவை அனைத்தையும் அடங்கிய கேரி பேக்கைத் தன் கையில் பிடித்துக் கொண்டு மலையிறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த சதாசிவம் தம்பதியினரும் ஒரு சிறு முகச் சுளிப்பும் இல்லாமல் ஆனந்தமாய் அவர்களைப் பார்த்தபடியே வந்து கொண்டு இருப்பதை நன்றியுடன் பார்த்த மிருணாளினி கணவனின் கைகளில் இருந்த பேக்கை வாங்கக் கை நீட்டினாள்.

''நீ உன் வேலையை மட்டும் பாரு மிருணா. இது என் டியூட்டி.. சுபாவிற்கா நான் இதைக்கூட செய்ய மாட்டேனா? ஆனால் உன் டியூட்டி என்னைக் கவனிப்பது. அதை மட்டும் நீ மறக்காமல் செய்தால் போதும்'' விளையாட்டாகக் கூறிய கணவனின் தோளில் செல்லமாக அடித்தாள் மிருணாளினி.

''எப்பப்பாரு. இதே பேச்சு தானா? வேற பேச்சே இல்லையா?'' கேட்ட மனைவியை முறைத்தான் முகுந்தன்.

''நீதானடி என்னை இப்படிப் பேச வைக்கிற. நீ உன் டியூட்டியைக் கரெக்டா பார்த்தா நான் எதுக்காக இப்படி ஞாபகப்படுத்தப் போறேன்.''

''ஆமா. டியூட்டியைப் பார்த்தவுடன் பெருமைப்படுடனே திருப்தியாகிடுவாரு இவரு. என்னதான் கவனிச்சாலும் உங்களுக்குத் தான் பத்தாதே'' கன்னச் சிவப்புடன் பேசிய மிருணாளினியை காதலுடனும் ஆர்வத்துடனும் பார்த்தான் முகுந்தன்.

''என்னடி! இப்படிப் போட்டுத் தாக்கற. உனக்கு இப்படி எல்லாம் கூடப் பேசத் தெரியுமா? அப்ப நான் தான் உன்னை சரியாப் புரிஞ்சுக்காத கேனையா!''

''சரி சரி. அடக்கி வாசிங்க. பக்கத்துல சுபா இருக்கிற நினைப்பு இல்லையா?''

''நீ பேசுனதைக் கேட்டதும் எனக்கு யாருமே தெரிய மாட்டேங்கறாங்கடி. நீ மட்டும்தான் என் கண்ணுக்குத் தெரியுற என்னை நீதானே உசுப்பேத்திவிட்ட?''

கண்களில் ஆசையுடன் தன்னை நெருங்கிய கணவனுக்குப் பழிப்புக் காட்டிவிட்டு, கடையில் நின்று கொண்டு இருந்த சுபாவின் அருகில் சென்று நின்று கொண்டாள் அவள். அவளது செயலைக் கண்டு கண்களில் சிறு ஏமாற்றம் தோன்றினாலும் அதை மறைத்துக் கொண்டு அவர்களுடன் சென்று இணைந்து இன்று கடையை வேடிக்கை பார்த்த முகுந்தன் அவர்கள் வாங்க வேண்டியதை வாங்கி முடித்தவுடன் அனைவருடனும் சேர்ந்து காருக்கு வந்தாள்.

## 34



''அப்பா நீங்களும், மத்தவங்களும் நேரா வீட்டுக்கு போங்கப்பா. நான் மிருணாளினியுடன் கொஞ்சம் வெளியில போயிட்டு வர்றேன்'' தங்கள் காரில் ஏறுவதற்காகக் கார்க் கதவைத் தங்கைக்காகத் திறந்து விட்டு



விட்டு நின்று கொண்டிருந்த மிருணாளினி திகைப்புடன் நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''சொல்லவே இல்லை. திடீர்னு இப்படிச் சொல்லறீங்க? எங்க போறோம்?'' கணவனை இயல்பாகக் கேட்டுக் கொண்டே சுபாஷினியைப் பார்த்த மிருணாளினி அவன் காலை விட்டு இறங்கியதை அவசரமாகத் தடுத்தாள்.

''இப்ப நீ எதுக்குடி கீழ இறங்கற? நாம இந்தக் காரிலேயே போகலாம் சுபா, உட்காரு.''

''இல்லக்கா. மாமா எங்கயோ போகணும்னு சொல்றாங்கல்ல. நீங்க ரெண்டு பேரும் போய்ட்டு வாங்க. நான் பாட்டி. அத்தையோட சேர்ந்து அந்தக் காரில் வீட்டுக்குப் போறேன்'' அக்காவின் பேச்சைக் கேட்க விருப்பம் இல்லாமல் வேகமாக இறங்கினாள் சுபாஷினி.

''ஏன் சுபா? பரவாயில்லை. நீயும் வாயேன்'' அவளை வற்புறுத்தாமல் மேலோட்டமாகக் கூறிய கணவனின் குரலைப் புரிந்த பாவனையில் இருவரையும் பார்த்துக் கொண்டே குமுறும் நெஞ்சத்துடன் நின்று கொண்டிருந்தாள் மிருணாளினி.

''இருக்கட்டும் மாமா. நீங்க போயிட்டு வாங்க. எனக்குக் கொஞ்சம் படிக்க வேண்டியது இருக்கு. அதனால நான் அந்தக் காரில் வீட்டுக்குப் போய்க்கிறேன்..'' கூறிக் கொண்டே இறங்கி சதாசிவத்தை நோக்கிச் சென்ற சுபாஷினியின் கையை பிடித்துத் தடுத்து தன்னருகில் நிறுத்திக் கொண்டாள் மிருணாளினி.

''இல்ல சுபா. நாம எல்லோருமே வீட்டுக்கே போகலாம். உன்னை விட்டுவிட்டு தனியாக எங்கும் போக

வேண்டிய வேலை இல்லை. அப்படியே வேலை இருந்தாலும் அதை மாமா போய்ப் பார்த்துவிட்டு வரட்டும். நாம எல்லோரும் வீட்டுக்குப் போகலாம்'' தங்கையின் கைப் பற்றி இழுத்துக் கொண்டு முகுந்தனின் பதிலை எதிர்பார்க்காமல் சென்று சதாசிவத்தின் காரில் அமர்ந்து கொண்டாள் மிருணாளினி.

''என்னக்கா ப்யூல் மாதிரி பிஹேவ் பண்ற. முதல் முதலாக உன்னோடு வெளியில் போகணும்னு மாமா கூப்பிக்கிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா இப்படி வீம்பு பண்ணிக்கிட்டு இருக்க?'' கோபத்துடன் கேட்டாள் சுபா.

''சுபா. நான் சொன்னால் சொன்னது தான். உன்னை விட்டு விட்டு நான் போக மாட்டேன். அதற்கு அவசியமும் இல்ல. மாமா காரை எடுங்க மாமா'' பிடிவாதமாகக் கூறிவிட்டுக் காரிலேயே அமர்ந்து கொண்ட அக்காவின் முகத்தை யோசனையோடு குழப்பமாகப் பார்த்த சுபாஷினி முகுந்தனைப் பார்த்து லேசாகத் தலையசைத்துவிட்டு காரில் ஏறி அக்காவின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

அவர்களது கார் கிளம்புதற்கு முன்பாகவே தன் காரில் ஏறி அமர்ந்து கார்க் கதவை அறைந்து மூடிக் கொண்டு பேய் போல வேகமாகக் காரைக் கிளப்பிக் கொண்டு பறந்து விட்டான் முகுந்தன்.

தன் மகனது கார் வேகமாகச் சென்ற திசையைப் பயத்துடன் பார்த்துவிட்டு கவலையுடன் காரில் ஏறி அமர்ந்த சதாசிவம் தம்பதியினர் வீடு வரும் வரை எதுவுமே பேசாமல் அமைதியாகவே இருந்தனர். கார்



வீட்டு வாசலில் நின்றும் நிற்காமலும் இருக்கும்போதே அவசரமாகக் கார்க் கதவைத் திறந்து இறங்கி வேகமாக வீட்டுக்குள் சென்று தன் அறைக்குள் மறைந்து விட்டாள் சாந்தி.

எந்த சூழ்நிலையிலும் நிதானம் இழக்காத சதாசிவம் கூட அன்று கொஞ்சம் டென்சனாக இருப்பதை சற்று கவலையுடன் பார்த்த சுபாஷினி, அதைப் பற்றி எதையுமே கண்டு கொள்ளாதவளாகத் தன் கரம் பற்றி இறங்கிய மிருணாளினியை துயரத்துடன் பார்த்தாள்.

''அக்கா, எனக்கென்னவோ நீ நடந்து கொள்வது சரின்னு படலை. உனக்குன்னு ஒரு மருமகனா, மனைவியா சில கடமைகள் இந்த வீட்டில் இருக்கு. அதையெல்லாம் நீதான் செய்யணும். அப்படிச் செய்யா விட்டால் பிறகு அதற்காக நீ ரொம்ப வருத்தப்பட வேண்டியது இருக்கும்க்கா. கையில் கிடைச்சிருக்கிற நல்ல அமைதியான வாழ்க்கையை நீயே கெடுத்துக்காதக்கா'' கிடைத்த தனிமையில் மிருணாளினியின் கைப்பற்றித் தவிப்புடன் கூறினாள் சுபாஷினி.

''அவர் என்னை மட்டும் தனியாக வெளியில் கூப்பிட்டது தப்பு சுபா. நாம எல்லோரும் ஒண்ணாக போயிருக்கும் வேலையில் என்னை உன்னிடம் இருந்து பிரிச்சுக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு நினைச்சது எனக்குப் பிடிக்கலை. அப்படி வெளியில் போகணும்னா நாளைக்கு நீ ஸ்கூலுக்குப் போயிருக்கும்போது போகலாமே. இன்றே போக வேண்டிய கட்டாயம் என்ன?''

''மாமா என்ன வேலை வெட்டி இல்லாதவன்னு நினைச்சியா? எல்லா நேரத்திலும் அவர் ஊர் சுத்திக் கிட்டு இருக்க முடியுமாக்கா. இன்னிக்கு சன்டே. அவர் இன்னிக்குத்தான் ப்ரீயா இருக்க முடியும். அதனாலதான நாம இன்னிக்குக் கோயிலுக்குப் போனோம்?''

''அதைத்தான் சுபா நானும் கேட்கறேன். நாம இப்ப ப்ரீயா கோயிலுக்குப் போய் என்ஜாய் பண்ணினோம் தானே. அதேபோல வேற எங்காவது போகணும்னா எல்லோரும் ஒன்றாகவே போகலாமே?'' கேட்ட மிருணாளினியைப் பார்த்துத் தன் தலையில் அடித்துக் கொண்டாள் சுபா.

''அவர் உன் ஹஸ்பெண்ட்க்கா. உங்களுக்குள்ள பர்சனல்னு எதுவும் இருக்காதா?''

''உனக்குத் தெரியாமல் அப்படி எதுவும் இல்ல சுபா. இருக்கவும் கூடாது. அப்படி உன்னையும் என்னையும் பிரிக்கிற எதுவும் எனக்குத் தேவை இல்லை. அது ஹஸ்பெண்டா இருந்தால் கூட..'' அழுத்தமாகக் கூறிவிட்டு எழுந்து சென்று ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து டி.வி.யைப் பார்க்க ஆரம்பித்தாள் மிருணாளினி.

அவளுக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து இருந்த சாந்தி தன் முகத்தைக் கூர்ந்து கவனிப்பதை அறிந்தும் அவளைப் பார்க்காமல் டி.வி.யே குறியாகப் பார்த்துக் கொண்டு பிடிவாதமாக அமர்ந்திருந்தாள் மிருணாளினி. சிறிது நேரம் மருமகளையே பார்த்துக் கொண்டிருந்தவள் பின் ஒரு பெருமூச்சுடன் எழுந்து சமையல் அறைக்குள் நுழைந்தாள் சாந்தி.



''சாந்தி.. உன் முகத்தில் என்னிக்கும் இல்லாமல் இன்னிக்குக் கோபத்தைப் பார்க்கிறேன் சாந்தி. உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன். என் பேத்தியை கோபக் கண்ணோடு பார்க்காத. அது உலகம் புரியாம நடந்துக்கிட்டு இருக்கு. நான் அதை புத்தி சொல்லித் திருத்தப் பார்க்கிறேன். நீ மட்டும் கொஞ்சம் பொறுமையா இரும்மா...'' தன் முன் கெஞ்சலாகக் கூறிக் கொண்டு நின்றிருந்த மாமியாரை அமைதியாகப் பார்த்தாள் சாந்தி.

''என் ஒரே மகனோட வாழ்க்கை சந்தோசமா இருக்கணும்னு நினைச்சுத் தானத்தை மிருணாவையே அவனுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சோம். ஆனா அவன் வாழ்க்கையை நாம எல்லோரும் சேர்ந்து கெடுத் துட்டோமோன்னு இந்த நிமிசம் எனக்குக் கவலையா இருக்கு. கட்டின பொண்டாட்டி கூடக் கொஞ்ச நேரம் தனியா வெளியில போகணும்னு ஆசைப்படறது என்ன தப்பா அத்தை? சரி, அவன் கூடப் போக இஷ்டம் இல்லேன்னா அதை அவன் மனம் நோகாம சொல்லக் கூடாதா? அப்படி அவன் என்ன கொலைக்குத்தமா பண்ணிட்டான்? அவன் பொண்டாட்டியைத்தான வெளியில் போக கூப்பிட்டான்? இந்தச் சின்ன சந் தோசத்தைக்கூட தர முடியாத உங்க பேத்தி நாளைக்கு என் மகனோட வாழ்க்கையின் அத்தனை இன்ப, துன்பத்திலும் அவன் கூடவே துணையா இருப்பான்னு நான் எப்படி நம்பறது? இல்லைத்தை. நாம எல்லோரும் சேர்ந்து முகுந்தனோட வாழ்வைக் கெடுத்துட்டோம்...'' அதற்கு மேல் பேசப் பிடிக்காதவளாய் அங்கிருந்து

சென்றுவிட்ட சாந்தியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சாட்டையாகச் சுழன்று காளீஸ்வரியை ரணமாக்கியது. தன் பேத்தியின் வாழ்க்கையைச் சூழ்ந்து கொண்டிருக்கும் சூறாவளியை விரட்டும் வகை தெரியாமல் திகைத்து நின்றாள் காளீஸ்வரி.

# 35



அன்றைய இரவு உணவின்போது எப்போதும் போல ஒருவருடன் ஒருவர் கலகலப்பாகப் பேசிச் சிரித்தபடியே உண்ணாமல், ஒவ்வொருவரும் அவரவர் சிந்தனையில் மூழ்கியபடி எதையோ பெயருக்குக் கொறித்துவிட்டு எழுந்தனர். சாந்தி அதையும்கூட செய்யாமல் வெறும் வயிற்றுடன் சென்று படுத்து விட்டதைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபாஷினி.

இரவு தங்கள் அறைக்குள் நுழைந்து கதவடைத்து விட்டு ஒன்றும் நடக்காதவள் போல படுக்கப் போன மனைவியை ஆத்திரத்துடன் பார்த்தான் முகுந்தன்.

''எந்திரிடி முதல்ல. என்னமோ ஒண்ணும் தெரியாதவ போல, எதுவுமே நடக்காத மாதிரி வந்து படுக்கிற. எந்திரிச்சு உட்கார்'' கணவனின் கோபத்தை எதிர்பார்த்திருந்த மிருணாளினி எழுந்து அமர்ந்து அவன் முகம் பார்த்தாள்.



''உன் மனசில என்னதான்டா நினைச்சுக்கிட்டு இருக்க? எதுக்காக இன்னிக்கு என்கூட வெளியில வரமாட்டேனு சொன்ன?'' ஆத்திரத்துடன் கேட்டான் முகுந்தன்.

''நீங்க எதுக்காக என்னை மட்டும் கூப்பிட்டீங்க?''

''ஏன்டி.. நான் என் பொண்டாட்டியைக் கூப்பிடாம ஊரில் இருப்பவனையா கூப்பிட முடியும்.''

''நம்ம கூட சுபாவும் வந்திருந்தாள்ல. அவளை விட்டு விட்டு நாம மட்டும் தனியா போனா அவ மனசு கஷ்டப்படாது?''

''ம்ம்.. உன் தங்கச்சி மனசு கஷ்டப்படக் கூடாது. ஆனா கட்டின புருசன் வேதனைப்பட்டாப் பரவாயில்ல. அப்படித்தான?''

''எனக்கு சுபாதான் முக்கியம்.''

''அப்ப நான் உனக்கு முக்கியம் இல்ல?'' புருவம் உயர்த்தி எரிமலையாகக் கேட்ட கணவனை முதல் முறையாகத் தயக்கத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

''நான் அப்படியா சொன்னேன். சுபாவைப் பார்த்துக்க வேண்டியது நம்ம கடமையில்லையா?''

''அந்த ஈர வெங்காயமெல்லாம் எங்களுக்கும் தெரியும். பேச்சை பேச்சை மாத்தாத. நான் உனக்கு முக்கியமா இல்லையா? அதுக்கு முதல்ல பதில் சொல்லு..'' பிடிவாதமாகக் கேட்ட கணவனை பயத்துடன் பார்த்தாள் மிருணாளினி. பின் திடமான முகத்துடன் அவன் கண்களை ஏறிட்டு அழுத்தமாகக் கூறினாள்.

''எனக்கு எல்லோரையும் விட என் சுபாதான் முக்கியம். அதுக்கு அப்புறம்தான் எல்லோரும்'' கூறிய மிருணாளினியை திரும்பியும் பார்க்காமல் அந்த அறையில் இருந்த சோபாவில் தன் தலையணைகளைப் போட்டு அவளுக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டான் முகுந்தன்.

அவனை வேதனையுடன் பார்த்துக் கொண்டே வெகு நேரம் உறங்காமல் அமர்ந்திருந்தாள் மிருணாளினி.

காலையில் கண் விழித்தவுடன் நேற்றைய நிகழ்வுகள் திரைப்படமாக மனதிற்குள் ஓட மெதுவாக எழுந்து கணவன் படுத்திருந்த சோபாவினைப் பார்த்தாள் மிருணாளினி. சோபாவில் இருந்த முகுந்தனின் போர்வையும் தலைகாணியும் அழகாக கட்டிலில் அடுக்கப் பட்டிருக்க அவனை அறையில் காணாது திகைத்தாள் அவள்.

''பாட்டி... அவர் எங்க?'' அப்பாவியாகக் கேட்ட பேத்தியைக் கவலையுடன் பார்த்தாள் காளீஸ்வரி.

''முகுந்தன் காலைல வெள்ளனமாவே வெளிய போயிட்டானே. ஏதோ பிளைட்டப் பிடிக்கணும்னு சொன்னான்'' கூறிய பாட்டியைக் குழப்பத்துடன் பார்த்தாள் மிருணாளினி.

''பிளைட்டைப் பிடிக்கவா?''

''பாரின் போகிறவன் பஸ்ஸைப் பிடிச்சாப் போக முடியும். பிளைட்டைத் தான் பிடிச்சுப் போக முடியும். ஒரு புருசன்காரன் எங்க போறான் வர்றான்னு கூடத் தெரியாம ஒரு பொண்டாட்டி! இந்த அதிசயம் நம்ம



வீட்டில்தான் நடக்கும்'' குத்தலாகக் கூறிக் கொண்டே தன் கையில் காபிக் கோப்பையைத் திணித்த சாந்தியை கலக்கத்துடன் கேட்டாள் மிருணாளினி.

''என்கிட்ட அவர் சொல்லவே இல்லை அத்தை. நான் தப்புப் பண்ணினாலும் என்னிடம் சொல்லாமல் அவர் பாரின் போகலாமா? வர எத்தனை நாளாகும்னு சொன்னாரா அத்தை?'' தான் குத்தலுடன் கூறியதைக் கூட பெரிதாக நினைக்காமல் இயல்பாக அதை ஏற்றுக் கொண்ட மருமகளின் மனம் சாந்திக்கு ஆறுதலைக் கொடுத்தது.

''சரிம்மா படு. அவன் ஏதோ கோபத்தில் இப்படிப் பண்ணிட்டான். அவன் கோபமெல்லாம் எத்தனை நாளைக்கு இருக்கும்? உன் மேல அவன் உயிரையே வெச்சிருக்கான். அதனால சீக்கிரம் சமாதானம் ஆகிடு வான் பாரு. பாரின்ல ஏதோ முக்கியமான வேலையாப் போயிருக்கான். ரெண்டு நாள்ல வந்திருவான். நீயும் அவன் மனசைப் புரிஞ்சுக்கிட்டு நடந்திருக்கணும் மிருணா'' தன் மேல் அக்கறையுடன் அறிவுரை சொன்ன சாந்தியின் முகத்தை ஆறுதலாகப் பார்த்தாள் மிருணாளினி.

ஆனால் சாந்தி சொன்னதைப் போல முகுந்தன் இரண்டு நாட்களில் ஊர் திரும்பவில்லை. பத்து நாட்கள் ஆகி விட்ட நிலையிலும் மிருணாளினியுடன் போனில் கூடப் பேசாதது அவளுக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்தது. முகுந்தனின் நம்பருக்குப் போன் பண்ணினாலும் அவளது குரலைக் கேட்டவுடன் போனை வைத்து விடுவான் முகுந்தன். கணவனின் கோபத்தைச்

சமாதானம் செய்யும் வகையறியாமல் துன்பத்துடன் வீட்டை வளைய வந்து கொண்டிருக்கும் மிருணாளினியின் கவலையை உணர்ந்த அனைவரும் அவளைத் தேற்றம் வகையறியாமல் திகைத்தனர்.

முகுந்தனின் பிரிவுதான் மிருணாளினிக்கு அவள் அவன் மேல் கொண்டிருக்கும் அளவில்லாத காதலை உணர்த்தியது. அவனது பத்து நாள் பிரிவிலேயே அவளுக்கு அந்த வீடே சூனியமாகத் தெரிந்தது. சுபாஷினியைக் கூட அவளால் முழு மனதுடன் கவனிக்க முடியவில்லை. அவளது எண்ணங்களை எல்லாம் முழுக்க முழுக்க நிறைத்திருந்தது முகுந்தனின் முகம் தான்.

முடிவே இல்லாத நாட்களை வேதனையுடன் அவள் கடந்து கொண்டிருந்த ஒரு நாளில், விடிகாலைப் பொழுதில் முகுந்தனின் குரல் ஹாலில் இருந்து ஒலிப்பதைக் கேட்டு திடுக்கிட்டு படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள் மிருணாளினி. அது வெறும் பிரம்மையாக இருக்குமோ என்ற சந்தேகத்துடன் உற்றுக் கேட்டவளின் முகம் மறுபடியும் முகுந்தனின் குரலைக் கேட்டு மலர்ந்தது.

வேகமாக அறைக்கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்கு வந்த மிருணாளினி அங்கிருந்த முகுந்தனைப் பார்த்தவுடன் கால்கள் அசையாமல் அப்படியே நின்று விட்டாள். பத்து நாள் பிரிவிலேயே பாதியாக இளைத்திருந்த அவளின் கண்களிலும் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிவதைக் கண்டுமே அசையாமல் அவள் முகம் பார்த்தபடி அமர்ந்திருந்தான் முகுந்தன்.



அங்கிருந்த அனைவரையும் மறந்து ஓடிவந்து அனைவரின் எதிரிலேயே கணவனைக் கட்டித் துன்பத்துடன் தழுவிக் கொண்டது முகுந்தனின் கரங்கள். அனைவரும் அவர்களின் நிலையறிந்து ஒதுங்கிக் கொள்ள தன்னிலை மறந்து ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு வெகுநேரம் அமர்ந்திருந்த இருவரும் தன்நிலைக்குத் திரும்பியவுடன் அவர்களின் எதிரில் வந்து அமர்ந்த சுபாஷினி இருவரையும் கேலியாகப் பார்ப்பதை உணர்ந்து வேகமாக எழுந்து தன்னறைக்குள் நுழைந்து கொண்டாள் மிருணாளினி.

''ஸாரி சுபா. நான் உன்னிடம் அப்புறமாகப் பேசிக் கொள்கிறேன்.''

கூறிக் கொண்டே எழுந்த முகுந்தன் வேகமாக மனைவியைத் தொடர்ந்து அறைக்குள் நுழைந்து கதவடைத்தான். தன் அருகில் நெருங்கி கணவன் வரும் வரை காத்திராமல் ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டு அவன் முகமெங்கும் முத்தமழை பொழிந்தாள் மிருணாளினி.

அவளது அத்தனை வேகத்தை எதிர்பார்க்காத முகுந்தன் அவளை அள்ளிக் கட்டிலில் கிடத்தி அவள் மேல் ஆவேசத்துடன் படர்ந்தான். அவனது ஆவேசத்திற்குக் குறையாத ஆவேசத்துடனும் ஆசையுடனும் அவனைத் தன் மேல் படர அனுமதித்தவளின் கரங்கள் முகுந்தனின் முதுகில் ஆசையுடன் படர்ந்து அவனைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டது. பத்து நாள் பிரிவினை ஒரே கூடலில் ஈடு செய்து விடத் துடித்த இருவரின் ஆர்வமும் தீர்ந்து விலகிப் படுத்த முகுந்தனின் இதழ்கள் மனைவியின் நெற்றியில் தாபத்துடன் முத்தமிட்டது.

அவனது முத்தத்தைப் பெற்றுக் கொண்ட மிருணாளினி கணவனின் மார்பில் எல்லையற்ற நிம்மதியுடன் சாய்ந்து கண் மூடிக் கொண்டாள்.

''மிருணா...''

''ம்...?''

''இப்பச் சொல்லுடி. உனக்கு நான் முக்கியமா இல்லையா?'' ஏக்கத்துடன் கேட்டான் முகுந்தன்.

''நீங்க என் உயிர் மாமா. என் உயிர் எனக்கு எப்படி முக்கியம் இல்லாமல் போகும்?'' கேட்ட மனைவியின் மேல் மறுபடியும் ஆசையுடன் படர்ந்தான் முகுந்தன்.

''ஆமா மாமா...'' இடையூறாக ஒலித்த அவளது குரலில் எரிச்சலுடன் அவளைப் பார்த்தான் முகுந்தன்.

''ஆனா என்னடி... சீக்கிரம் சொல்லு.''

''இல்ல மாமா... சுபா...''

''கூறு கெட்டவடி நீ. அவ நம்ம ரெண்டு பேருக்கும் மூத்த மகள். அவளை நான் அப்படித்தான் நினைக்கிறேன். பிள்ளையைப் பத்திப் பேசற நேரமா இது... நம்மளைப் பத்திப் பேச நேரம்டி...'' கூறிக் கொண்டே தாபத்துடன் படர்ந்த கணவனின் தாபத்தை எல்லையில்லா மோகத்துடன் தணித்தாள் மிருணாளினி.

## 36



''என் பெயர் தேவன். இவர் என் அண்ணன் சுதீப். நாங்க முகுந்தன் அண்ணனைப் பார்க்க வந்திருக்கோம்.''



தன் முன் கைகூட்டிய இருவரையும் முகம் மலர வரவேற்றாள் மிருணாளினி.

''வாங்க, வாங்க, உங்கண்ணனைத்தான் நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேனே. வாங்க சார்.. உட்காருங்க'' அவர்கள் இருவரையும் மரியாதையுடன் ஹால் சோபாவில் அமரச் செய்தவள் முகுந்தனைத் தேடி விரைந்தாள்.

மனைவியின் செய்தியைக் கேட்டு ஆச்சரியத்துடன் வேகமாக வந்த முகுந்தன் தன் நண்பனை ஆரத்தழுவி வரவேற்றான்.

அதற்குள் இருவருக்கும் டிபன் தட்டுக்களுடன் காபிக் கோப்பையை ஒரு டிரேயில் ஏந்தி வந்து அவர்களின் முன் நீட்டிய மிருணாளினியை ஏறிட்டுப் பார்த்த சுதீப் எதுவும் சொல்லாமல் டிபன் தட்டினை எடுத்துக் கொண்டான்.

''என்னடா இது? ஒரே சர்ப்ரைஸா இருக்கு? எப்பவுமே காலில் சக்கரத்தைக் கட்டிக்கிட்டு சுத்தறவன் நீ. என் வீடு தேடி வந்திருக்க?'' நண்பனுக்கும் பதிலளிக்காமல் மிருணாளினியின் பின்னால் நின்றிருந்த சுபாஷினியைப் பார்த்துப் புன்னகைத்தான் சுதீப்.

''என்னடா செய்ய? வரவேண்டிய காரியத்திற்கு நாம வந்துதான ஆகணும். அதுவும் இது ரொம்ப முக்கியமான வேலையாச்சே. என்னம்மா சுபா.. நான் சொல்வது சரிதானே?'' சுதீப்பின் கேள்விக்கு முகம் மலரச் சிரித்தாள் சுபா.

''என்னடா புதிர் போட்டுப் பேசற எனக்கு ஒண்ணும் புரியலியே...''

''புதிரெல்லாம் ஒண்ணும் இல்லடா. முதல்ல அப்பாவையும் அம்மாவையும் கூப்பிடு. அவங்ககிட்டத் தான் முதலில் சொல்லணும் அதுதான் முறை'' கூறிய வளின் வார்த்தைகளை கேள்வியுடன் பார்த்தாலும் இருவரையும் அழைத்து அமரச் செய்தான் முகுந்தன்.

''அப்பா.. அம்மா. நான் என் தம்பி தேவனுக்கு உங்க வீட்டுப் பெண் சுபாஷினியைக் கேட்டு வந்திருக்கேன். உங்க விருப்பம் என்னவோ அதைத் தாராளமாச் சொல் லுங்க'' மரியாதையுடன் கூறிய சுதீப்பை ஆனந்தத் துடன் பார்த்தான் முகுந்தன்.

''இதில் ஆட்சேபணை சொல்ல என்னடா இருக்கு? எங்க எல்லோருக்கும் சம்மதம்தான். ஆனா சுபாஷினி சின்னப் பொண்ணு. அவளுக்கு உரிய வயது வரும் வரை தேவன் காத்திருக்கணும். அதுக்கு அவனுக்கு சம்மதமான்னு கேளு.''

''அதெல்லாம் சம்மதிப்பான் முகுந்தா. அவனும் இப்பத்தான மெடிக்கல் காலேஜ்ல மூணாவது வருஷம் படிக்கிறான். ஆனாலும் நாம முடிவு பண்ணி வெச்சு கிட்டால் நல்லதுன்னு சொன்னான். அதனாலதான் நாங்க இப்ப வந்துதே. உங்க விருப்பம் தெரிஞ்சா வீட்டுல அப்பா அம்மாகிட்டே சொல்லிக் கூட்டிக்கிட்டு வந்து முறைப்படி நிச்சயம் பண்ணிக்குவோம். ஒரு ரெண்டு மூணு வருடம் கழித்து கல்யாணத்தை வச்சுக்குவோம். சரிதானே முகுந்தா?'' சுதீப் சொன்ன வார்த்தைகளின் நியாயம் புரிந்த அனைவரும் சம்மதிக்க, அடுத்த மாதமே வந்து சுபாஷினியை நிச்சயதார்த்தம் நடத்தித் தன் மருமகளாக உறுதி செய்து கொண்டார்கள் தேவனின் பெற்றோர்.



சுபாஷினியும் அடுத்த மாதமே ப்ளஸ் டூ முடித்து விட அவருக்கு மெரிட்டிலேயே மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைத்து விட்டது. அவளை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி விட்டு நிம்மதியுடன் கணவனைக் கவனித்த மிருணாளினிக்கு அதன் பலனாக தாய்மை வரம் கிடைத்தது.

தன் மனைவி தாய்மை அடைந்ததை அறிந்து கொண்ட முகுந்தன் அவளைத் தன் இதயத்தில் வைத்துத் தாங்கினான். சாந்தியும், காளீஸ்வரியும் அவளை ஒரு வேலையும் செய்ய விடாமல் தன் கைகளில் வைத்துத் தாங்கினார்கள்.

எந்த வேலையும் செய்யாமல் சோர்வுடன் அமர்ந் திருந்த மிருணாளினி கணவனின் அலமாரியையாவது சுத்தம் செய்யலாம் என்ற எண்ணத்தில் அதனைத் திறந்து சுத்தம் செய்யத் தொடங்கினாள். அவனது உடைகளுக்கு அடியில் மிகவும் அந்தரங்கமாக முகுந்தன் வைத்திருந்த ஆல்பத்தைத் திறந்து ஆவலாகப் பார்த்த மிருணாளி னியின் கண்கள் வியப்பில் விரிந்தன.

அந்த ஆல்பத்தில், குழந்தையாக, நடக்கும் தளிராக பள்ளி செல்லும் சிறுமியாக, கல்லூரி செல்லும் இளம் பெண்ணாக என அனைத்துப் பருவங்களிலும் போட் டோக்களில் சிரித்துக் கொண்டிருந்தாள் மிருணாளினி.

''எத்தனையோ வருடங்களாகக் காத்துக் கொண் டிருக்கிறேன்'' முகுந்தன் தங்கள் முதல் இரவில் கூறிய வார்த்தைகளின் பொருள் புரிந்த மிருணாளினி திக் பிரமையுடன் அப்படியே அமர்ந்து விட்டாள்.

மாலை வீடு திரும்பிய முகுந்தன் மனைவியைக் காண ஆவலுடன் அறைக்குள் நுழைந்தான். கையில் ஆல்பத்துடன் அமர்ந்திருந்த மிருணாளினியின் பார்வையில் தெரிந்த கேள்வி அவனைச் சுட்டது.

''இதையெல்லாம் ஏன் என்கிட்ட மறைச்சீங்க?''

''இதில மறைக்க என்னடி இருக்கு. என் அத்தை மகளை நான் எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்தே என் பொண்டாட்டியாக, என் சொத்தாக நினைத்திருந்தேன். இதில தப்பென்ன இருக்கு?''

''நான் தப்புன்னு சொல்லலை. இவ்வளவு ஆசையை மனதில் வைத்திருந்தவர் எதற்காக என்னை ஒரு முறை கூட மும்பை வந்து பார்க்கவில்லை? மாமாதான் வருடம் ஒரு தரமாக வருவாரே? அவருடன் நீங்களே வந்திருக்கலாமே?'' ஏக்கத்துடன் கேட்ட மனைவியை அணைத்தவாறே அவள் அருகில் அமர்ந்தான் முகுந்தன்.

''உன்னை முதன் முதலாகப் பார்க்கும்போது என்னுடைய மிருணாளினியாக உரிமையுடன் பார்க்கணும்னு நினைச்சிருந்தேன் மிருணா அதற்காகத்தான் இரவு பகல் பார்க்காமல் கடுமையாக உழைச்சு முன்னுக்கு வந்தேன். ஆனால் விதியின் செயலால் அத்தையும் மாமாவும் உங்க ரெண்டு பேரையும் அநாதையாக விட்டு விட்டுப் போனதும் அதிர்ந்து விட்டேன்'' அந்த நாளின் அதிர்ச்சியுடன் கூறிய கணவனின் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள் மிருணாளினி.

''அவங்க இறந்தது...'' மனைவியின் அணைப்பை இறுக்கிக் கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிட்டான் முகுந்தன்.



''எனக்குத் தெரியும் மிருணா...''

''என்னது! அம்மாவும் அப்பாவும் எப்படி இறந்தாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தும் நீங்க இதுவரை அதைப்பத்தி என்கிட்ட எதுவுமே பேசியதே கிடையாதே. மாமாவும் கூட இதைத் தெரிந்திருந்தும்...''

''இல்லை மிருணா. அப்பாவுக்கோ, மத்தவங்களுக்கோ இதைப் பத்தி ஒண்ணுமே தெரியாது. அத்தையும் மாமாவும் ஆக்சிடென்டில் இறந்துட்டாங்கன்னு தெரிஞ்சே அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து, பிழைச்சு எழ மிகவும் சிரமப்பட்டுட்டார். இதில அவங்க தற்கொலை பண்ணிக்கிட்டாங்கன்னு தெரிஞ்சா அவர் உசிரையே விட்டு விடுவார். அதனாலதான நான் எதையும் அவங்க கிட்டச் சொல்லல'' கூறிய கணவனின் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள் மிருணாளினி.

''இவ்வளவு அன்பான உடன் பிறப்பும், சொந்தங்களும் இருந்தும் எங்கம்மா அவங்களோட அருமை தெரியாமலேயே இருந்துட்டாங்களே. ஒருவேளை சொந்தங்களோட அருமை தெரிஞ்சிருந்தா அவங்க இப்படி ஒரு முடிவை எடுத்து இருக்க மாட்டாங்களோ...'' வேதனையில் அவள் குரல் நடுங்கியது.

''அதற்குக் காரணம் உங்கப்பாதான் மிருணா. அவர் தன் மனைவியை தன்னுடைய கண்காணிப்பிலேயே வெச்சிருக்கணும்னு நினைச்சிருக்கார். பொறு... அதைக் காதல்னு சொல்லாதே. என்னால் அதை ஏத்துக்கவே முடியாது. அது காதல் இல்லை. அதன் பெயர் வேற. எந்த அப்பாவாவது தன் குழந்தையை, அதுவும் பெண்

குழந்தைகளை எக்கேடாவது கெட்டுப் போகட்டும்னு வேலைக்காரங்களை நம்பி விட்டுவிட்டு, மனைவியுடன் டூர், பார்ட்டின்னு அலைவானா? ஆனா அதுக்கெல்லாம் உங்க அம்மாவும் இடம் கொடுத்துட்டாங்க. அதுதான் பிரச்சினையே. ஒரு குடும்பத்துல யார் தவறு செய்தாலும் அதை அடுத்தவர் கண்டிச்சுத் திருத்தணும். அத்தை, உங்கப்பாவைத் திருத்தறதுக்குப் பதிலா, இவங்களும் அவரோட பாதையில் போய்ட்டாங்க. அதுதான் அவங்க செய்த முட்டாள்தனம்'' தனது அப்பாவை முகுந்தன் ''மாமா'' என்று அழைக்கக்கூடத் தயங்கியதை கவனித்த மிருணாளினி வேதனை கொண்டாள்.

''ஆனால் அவங்க கடைசியில் எடுத்த முடிவைத்தான் என்னால ஜீரணம் பண்ணிக்க முடியலை மாமா. என்னதான் தன் கணவன் மேல பாசம் இருந்தாலும், தன் இரு பெண்களைப் பத்தின கவலை ஒரு தாய்க்கு இருக்க வேண்டாமா. கோடிக்கணக்கில் கடன் இருக்குன்னு தெரிஞ்சும் எங்களை அப்படியொரு நிராதரவான நிலையில் விட்டுப்போக அவங்களுக்கு எப்படி மனசு வந்தது. மாமா? அதை நினைத்தால்தான்...'' ஆற்ற மாட்டாமல் குமுறிய அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான் அவன்.

''அதான் நான் இருந்தேனே. அப்புறம் என்ன உனக்கு? ''கேட்டவனை ஆச்சரியமாக நிமிர்ந்து பார்த்தாள் மிருணாளினி.

''நீங்களா... அப்ப நீங்க எப்படி.''

''உன்னைப் பாதுகாக்க ஆயிரம் வேலையாட்களை உங்க அப்பா வெச்சிருந்தாலும், நான் பிரைவேட்



செக்யூரிட்டியை உனக்கும், சுபாவிற்கும் ஏற்பாடு செய்திருந்தேன் மிருணா. இல்லைன்னா கோடிக்கணக்கான சொத்துக்கு வாரிசான இரு சின்னப் பொண்ணுங்க அவ்வளவு பெரிய மும்பையில் பாதுகாப்புடன் இருக்க முடியுமா?'' கூறிய கணவனைக் காதலுடன் பார்த்தாள் அவன் மனைவி.

''அவங்க உங்கப்பாம்மா இறந்தவுடனேயே எனக்கு செய்தியை கன்வே பண்ணிட்டாங்க. ஆனா உடனே நான் அங்க வருவதற்கு முன்பாக அப்பாவுக்கு முடியாமல் போயிடுச்சு. அது முடிஞ்சதும் ஒரு தவிர்க்க முடியாத பிஸினெஸ் மீட்டிங்குக்காக பாரின் போக வேண்டியதாகிடுச்சு. ஆனால் அதற்கு முன்பாக நான் உன்னைப் பாதுகாக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத்தான் பாரின் போனேன்.''

''ஏற்பாடுகளா?''

''ஆமாம் மிருணா. ஏற்பாடுகள்தான். உங்கப்பா கடன் வாங்கியிருந்த அத்தனை பேரும் மிகப் பெரிய கந்து வட்டிக்காரர்கள்.

அவர்கள் எல்லாம் நீ பேசின லா பாயிண்டுக்குப் பயந்தா சொத்துக்களைக் கொடுத்தாங்க? வாரிசின் கையெழுத்து வேணும்னா வாரிசுகளே இல்லாமல் பண்ணுகிற ஆட்கள் அவங்க எல்லாம். நான் அவங்களை எப்படியெல்லாம் பிரசர் கொடுத்து ஆஃப் பண்ண முடியுமோ அப்படியெல்லாம் கார்னர் பண்ணினேன். அதுக்குப் பின்தான் பணம் கொடுக்கவே சம்மதிச்சு அதுப்படி கொடுத்தாங்க. என்னுடைய ஆட்கள் நீங்க

மும்பையில் இருந்து கிளம்பி பழனி வரும் வரை கூடவே வந்து என்னிடம் உங்களை ஒப்படைச்சுட்டுத் தான் திரும்பவே போனாங்க.''

பேசிக் கொண்டே மனைவியின் முகம் பார்த்த முகுந்தன் அவளது கண்களில் தெரிந்த கண்ணீரைக் கண்டு பேச்சை நிறுத்தி விட்டான். தன் இதழ் களால் மனைவியின் கண்ணீரை ஒற்றி எடுத்தவனை எல்லையில்லா அன்புடன் அணைத்துக் கொண்டாள் மிருணாளினி.

எந்த அன்பையும் பாதுகாப்பையும் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தாளோ அவை அனைத்தும் சேர்ந்த மொத்த உருவமாக இருந்த முகுந்தன் அவளைச் சிப்பியாக இருந்து உள் வாங்கி பாதுகாப்புடன் மூடிக் கொண்டான். அவர்களின் அன்பினைப் பிரிக்க மனமில்லாத பூங்காற்று கூட இதமாக அவர்களைத் தழுவிவிட்டு விலகிக் கொண்டது.